# சக்ரவாஹம்

## 1

கொசுவம் வைத்து கட்டப்பட்ட பட்டுப்புடவையின் தலைப்பில் அரிசியும், தேங்காயும், இனிப்புப் பூரியும் ஒரு தங்கக்காசும் போட்டு இடுப்பில் கட்டி விட்டார்கள்.

அதன் கூடவே தாய் தந்தையரை நமஸ்காரம் செய்யச் சொன்னார்கள்.

நெற்றிவகிடில் அம்மா குங்குமம் எடுத்து அழுந்தத் தேய்த்தாள். புருவத்துக்கு நடுவே ஒரு பொட்டு வைத்தாள். கழுத்தில் போட்டிருந்த கருகமணியைத் தொட்டு ஆசீர்வதித்தாள், மங்கல சூத்திரத்திலுள்ள தங்கத் தகடுகளை தடவிக் கொடுத்தாள்.

புருஷன் வீட்டுக்குப் போகின்ற அருமை மகளே. உன்னோடு அரிசியின் செழிப்பும், தேங்காயின் அமைதியும், இனிப்புப் பொரியின் சுவையும், தங்கத்தின் நம்பிக்கையும் இருக்கட்டும். இதே குணங்களை நீ புகுந்த வீட்டிற்கு எடுத்துப்போய் அங்குள்ள மனிதர்களுக்கு பரப்புவாயாக. உன் வருகையால் அந்த வீடு செல்வச் செழிப்பும், அமைதியும், நம்பிக்கையும், இன்பச் சுவையும் அனுபவிக் கட்டும் என்று மெல்லியதாய் ஒரு நாட்டுப்புறப் பாடல் பாடி ஆசீர்வதித்தாள்.

எல்லாப் பெண்களும் குலவையிட்டார்கள். அப்படியே நடக்கட்டும் என்று சொன்னார்கள்.

சமையல்கட்டிலிருந்து ஜீஜாபாய் வெளியே வந்து கூடத்தில் நின்றாள். கூடத்தில் ஆண்கள் நின்றிருந்தார்கள் எல்லோரும் தலைப்பாகை கட்டி சிறிய சட்டை போட்டு பஞ்சகச்சம் அணிந்து தோளில் சால்வை போர்த்தியிருந்தார்கள். சிலர் கைகளில் கத்தியும் வேலும் வைத்திருந்தார்கள்.

''எல்லாம் முடிந்ததா கிளம்பலாமா?'' மாப்பிள்ளை வீட்டுப்பக்கமிருந்த கிழவர் உரக்கக் கேட்டார். அப்பா சரியென்று தலை அசைத்தார்.

அம்மா அழத் துவங்கினாள்.

''ச்சூ... என்ன இது. எதற்காக அழுகிறீர்கள். நல்ல இடத்தில் நல்லவிதமாய் உங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறீர்கள், எந்தக் கவலையும் வேண்டாம். அவள் சௌக்கியமாக இருப்பாள். ஜீஜாபாய்... போ. என் புருஷனுக்கு அருகே போய் நில்'' என்று அந்தக் கிழவர் கட்டளையிட, அவள் புருஷனைத் தேடினாள்.

கூட்டத்தின் ஒரு ஓரத்தில் கழுத்தில் ஒரு மாலையோடு தொப்பியிலிருந்து தொங்கும் மணிச்சரங்களோடு அவள் புருஷன் நின்றிருந்தான். அவள் எப்படி அவனுக்கு அருகே போவது என்று தயங்க, அவனை இழுத்து நடுக்கூடத்திற்கு யாரோ தள்ளினார்கள். அவன் வந்து நின்று தலைகவிழ்த்துக் கொண்டான்.

ஜீஜாபாய் அவனுக்கருகே போய் நின்றாள்.

'துகாராம் சொல், எல்லோருக்கும் வணக்கம் சொல். போய் வருகிறேன் என்று வாய் திறந்து விடைபெற்றுக் கொண்டுவா, இப்பொழுது கிளம்பினால்தான் இரவுக்குள் போய் சேர முடியும்' என்று பரபரத்தார்கள்.



துகாராம் இரண்டடி முன்னே வைத்து ஜீஜாபாயின் தகப்பனை நோக்கி கைகூப்பினான். ''போய் வருகிறேன்'' என்று சொன்னான்.

பெண்கள் கூட்டத்தைப் பார்த்து, போய் வருகிறேன் என்று சொல்ல, அம்மா ஒரு அடி முன் வைத்தாள்.

''அவள் சிறு குழந்தை. வாழ்க்கையைப் பற்றி எதுவும் தெரியாது. நீங்கள் எல்லாம் தெரிந்தவர் அவளுக்கும் எல்லாம் சொல்லிக் கொடுங்கள். பொறுமையாகச் சொல்லிக் கொடுங்கள்'' என்று சொன்னாள்.

அவள் என்ன சொல்கிறாள் என்பது அங்குள்ள பெண்களுக்குப் புரிந்து விட்டது. அவர்கள் மெல்லியதாய்ச் சிரித்தார்கள். ஆனால், அம்மா அழுதபடியே இருந்தாள்.

''தாயே! மணமகளைப் பெற்றவளே. நீ ஒன்றும் கவலைப்படாதே, அவருக்கு எல்லாம் தெரியும். அவர் அனுபவசாலி. நீ கவலையே படாதே. உன் பெண்ணை கண்போல் வைத்துக் காப்பாற்றுவார். உன் பெண்ணுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறாய் அல்லவா?'' என்று பதிலுக்குக் கேட்டார்கள்.

அம்மா வாயை மூடிக் கொண்டாள்.

ஜீஜாபாய்க்கு வயிறு கலங்கியது. 'அவர் அனுபவசாலி, உன் பெண்ணுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறாயா?' என்று கேட்கிறார்கள்.

அம்மா இதுவரை எதுவும் சொல்லித் தரவில்லை. எந்த விஷயமும் சொல்லித் தரவில்லை... இது கற்றுக் கொள்ளப் பட வேண்டுமா அல்லது கூடாதா என்று தெரியவில்லை.

இது பேசப்பட வேண்டுமா அல்லது கூடாதா என்பது புரியவில்லை. ஆனால், இது பற்றி யாரும் பேசமாட்டேன் என்கிறார்கள், பேசுபவர்களோடு பழகினால் கோபப்படு கிறார்கள். நல்ல ஸ்நேகிதிகள் தங்களுக்குள் பேசிக் கொள்வது உண்டு என்று சொல்கிறார்கள். தனக்கு நல்ல ஸ்நேகிதி என்று இதுவரை எவரும் கிடைக்கவில்லை, இன்றளவும் அம்மாவைத்தான் ஸ்நேகிதி என்று சொல்லலாம். இதுதவிர எந்தப் பெண்ணோடும் பழக்க மில்லை. எந்த ஆணோடும் பழக்கமில்லை. அங்கு போய் என்ன குப்பை கொட்டப் போகிறேனோ, யாரிடமெல்லாம் வசவு வாங்கப் போகிறேனோ ஒன்றும் புரிய வில்லை, ஜீஜாபாயிக்கு வயிறு கலங்கி நெஞ்சில் முட்டியது.

''என்ன இருமுகிறாய். தொண்டை சரியில்லையா?'' மாப்பிள்ளை வீட்டுப் பக்கத்திலிருந்த ஒரு பெண்மணி கேட்டாள்.

ஆமாம் என்று ஜீஜாபாய் தலையசைத்தாள்.

''கிளம்புகிற நேரத்தில் வாந்தியெடுத்து அமங்கலம் பண்ணாதே, ஏதேனும் வாயில் போட்டு அடக்கிக்கொள்'' என்று சொன்னாள்.

அம்மா உள்ளுக்குள் ஓடிப் போய் மூன்று நான்கு உப்பிட்ட கிச்சிலி கீற்றுகள் கொண்டு வந்தாள். அவள் கையில் கொடுத்தாள்.

அப்பாடா... என்ற சந்தோஷம் அவளுக்குள் பரவியது லேசாய் பசித்தது. ஏதாவது சாப்பாடு எடுத்துக் கொள்ளலாமா, இல்லை மடியில் இருக்கின்ற பூரியைத் தின்னலாமா என்று நினைத்தபோது அம்மா கிச்சிலி கொண்டு வந்து கொடுத்தது சந்தோஷமாக இருந்தது. இன்று மாலைக்குள் இதைச் சாப்பிட்டுக் கொண்டு உயிர் வாழ்ந்து விடலாம் என்று தோன்றியது.



ஜீஜாபாய் வீட்டை விட்டு வெளியே வந்தாள். அவள் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கும் திண்ணையை ஆசையோடு தடவிக்கொடுத்தாள். தூணைத் தடவி நகர்ந்தாள். வாசலில் உள்ள சுவரை கைகளில் வருடினாள். மகிழ மரத்தை ஏறிட்டுப் பார்த்தாள். எதிர்ப்பக்கம் நிற்கும் தென்னை மரங்களை கனிவோடு கவனித்தாள். ரோஜா செடிகளை, போகன் வில்லாவை, துலுக்க சாமந்திச் செடிகளை கவனித்தாள். மெல்ல படியிறங்கினாள். திரும்பி அப்பாவையும், அம்மாவையும் நோக்கிக் கை கூப்பினாள்.

சரட்டென்று ஏறி வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டாள்.

அது பெரிய சாரட் வண்டி அவள் ஏற அடுத்தபடியாய் அவளுடைய புருஷன் ஏறினான். அவளுக்கருகே உட்கார்ந்து கொண்டான். புருஷனுக்கு அடுத்தபடி கனத்த உருவமுள்ள ஒரு பெண்மணி சிரமப்பட்டு ஏறி உட்கார்ந்து கொண்டாள். எதிரே இரண்டு கிழவர்களும், அவர்களுக்கருகே துகாராமின் அண்ணியும் உட்கார்ந்து கொண்டார்கள். துகாராமின் அண்ணன் நடந்து வருவதாகச் சொல்லி விட்டார். அந்த சாரட் வண்டி மெல்ல கிளம்பியது. பின்னே அழுகுரல்கள் கேட்டன. அம்மாவின் குரல் தணித்துக் கேட்டது. ஆனால், ஜீஜாபாய் திரும்பிப் பார்க்கவில்லை. அந்த ஊரையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

எத்தனை ஆட்டம் ஆடியிருக்கிறோம், இந்தத் தெருவில். எவ்வளவு சுற்றியிருக்கிறோம். எத்தனை கத்தி யிருக்கிறோம். எவ்வளவு சண்டை போட்டிருக்கிறோம். எல்லாவற்றையும் விட்டு விட்டு எங்கோ வெகு தொலைவில் போகவேண்டியிருக்கிறது.

சௌகரியமாய் உட்கார முடியாமல் வயிற்றிலுள்ள மூட்டை தொந்தரவு செய்தது.

மூட்டையை எடுத்து விடலாமா இந்த சாமான்களை ஒரு பைக்கு மாற்றிக் கொள்ளலாமா என்று கேட்கத் தோன்றியது. ஆனால், கேட்டால் என்ன செய்வார்கள்.

''இதுகூட சுமக்க முடியவில்லை. நீ எங்கே குடும்பபாரத்தைச் சுமக்கப் போகிறாய். நீ எங்கே குழந்தையைச் சுமக்கப் போகிறாய். நான் எத்தனை குழந்தை பெற்றிருக்கிறேன். தெரியும். ஒன்பது குழந்தைகள். உன்னால் சிறிது நேரம் ஒரு நெற்றுத் தேங்காயைக்கூட மடியில் கட்டி வைத்துக் கொள்ள முடியவில்லையா?'' என்று கூறுவார்கள். துப்பு கெட்டவள் என்பது போல பேசுவார்கள்.

ஜீஜாபாய் ஆசையை அடக்கிக் கொண்டாள்.

சாரட் வண்டி மிக கம்பீரமாகப் போயிற்று.

மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு இப்படித்தான் ஒரு சாரட்டில் ஏறி யாருடைய கல்யாணத்திற்கோ போய் வந்தாள். அதற்குப் பிறகு இப்பொழுதுதான் ஏறுகிறாள். அவள் போன சாரட்டைவிட இந்த சாரட் மிக அழகாக இருந்தது. குலுங்காமல் போயிற்று.

சாரட் வண்டி ஊரைத் தாண்டியது. வயல்கள் நிறைந்த பாதையில் ஓடியது.

அவள் திரும்பி புருஷனைப் பார்த்தாள். புருஷன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது

''ஏன் வயிற்றிலுள்ள மூட்டையைச் சுமக்கிறாய். இதை ஏதாவது கூடைக்கு மாற்றி விடேன்.

அவன கிழவர்க்ளை நகர்த்தி அங்கிருந்த ஒரு கூடையை இழுத்து அவளிடம் கொடுத்தான். அவள் நிமிர்ந்து அண்ணியைப் பார்த்தாள்.

''இதுதான் கட்டிக் கொள்ள வேண்டும் என்று விதி. ஆனால், இதையே கட்டிக் கொண்டு எவ்வளவு தூரம்



நடப்பது கூடைக்கு மாற்றி விடு. வீட்டிற்கு போகும்போது அங்கே வாசலில் வைத்து கட்டிக் கொள்ளலாம்.''

''அப்படிச் செய்வது வழக்கமில்லையே'' என்று ஒரு பெண் எட்டிப் பார்த்துச் சொன்னாள்.

துகாராமின் அண்ணி, ''அதுவொன்றும் பரவாயில்லை. இத்தனை நேரம் மடியிலேயே தேங்காயும், அரிசியும், இனிப்புப் பொரியும் கட்டிக் கொண்டு வர வேண்டுமா. புடவை பாழாகி விடும். அதைக் கொடு.'' அவள் கூடையை குலுங்காமல் வைத்துக் கொள்ள, அவள் மெல்ல இடுப்பு முடிச்சை அவிழ்த்து மடியைத் திறந்து கூடைக்குள் எல்லா அரிசியையும், பூரியையும், தேங்காயையும் கொட்டினாள். இருந்த சிறிய நெல்மணிகளையும் உதறி கூடைக்குள் போட்டாள். கூடை மீதுஒரு துணியைக் கட்டி தன் காலுக்குக் கீழே புருஷன் வைத்துக் கொண்டான். எதிரே உள்ள கிழவர்களை பார்த்தபடி இருந்தான்.

அவளுக்கு இந்தப் பரிவு சந்தோஷமாக இருந்தது.

எனக்கு உறுத்துமென்று உனக்குத் தெரிந்துவிட்டதா. நான் இந்த கணம் தாங்காமல் தவிக்கிறேன் என்பதை நீ புரிந்து கொண்டாயா, இம்மாதிரியான புரிந்து கொள்ளல் போதும். நான் பிரமாதமாக குடித்தனம் செய்வேன். இப்படி எனக்கு ஒரு அக்கறை காட்டினால் போதும். நான் உன் மீது அன்பை அருவியாகப் பொழிவேன்.

ஜீஜாபாய் மௌனமாக வருகிறானே என்று பார்க்காதே. ஜீஜாபாய் ரொம்ப சண்டைக்காரி. ஜீஜாபாய் மகா கெட்டிக்காரி. ஜீஜாபாயிக்கு ஒவ்வொரு அசைவும் என்னவென்று தெரியும். ஜீஜாபாய் மனிதர்களைப் படிக்க நிறைய கற்றுக் கொண்டிருக்கிறாள். ஜீஜாபாய், ஜீஜாபாயின் அம்மாவைவிட கெட்டிக்காரி என்று உறவுக்காரர்கள் சொல்வார்கள்.

இந்த கெட்டிக்காரத்தனம். இறைவன் கொடுத்தது. என்னால் சமைத்து இறக்க முடியும். மாடுகள் பார்த்துக் கொள்ள முடியும். வீடு பெருக்கி சுத்தமாக வைத்துக் கொள்ள முடியும். வெள்ளைச் சுவர் கட்டவும், தோட்டம் அமைக்கவும், பூக்கள் பறித்துக் கொண்டு வந்து மாலையாகப் போடவும், சுவரில் விதம் விதமாகச் சித்திரம் எழுதவும், பாட்டுப் பாடவும் தெரியும். ஆனால், இந்த பெண்கள் சொல்லுகின்ற அடாவடி விஷயங்கள். புருஷனை மயக்குகின்ற தந்திரங்கள் தெரியாது.

ஜீஜாபாயின் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் அவ்வளவு நாகரீகம் போதாது. சாமர்த்தியம் மிகக் குறைவு. வணிகர் குலத்தில் பிறந்து விட்டோமே என்பதற்காகத்தான் அப்பா வியாபாரம் செய்து கொண்டிருந்தாரே தவிர, அவருக்கு வியாபாரம் செய்யத் தெரியாது. அம்மாவுக்கு வியாபாரம் செய்யத் தெரியும். ஆனால், செலவாளி. பத்து காசு கூட வந்தால் வாண வேடிக்கைகள் நிகழ்த்தி விடுவாள். ஊர் முழுவதும் கூட்டி ஏதேனும் விருந்துகள் வைத்து விடுவாள். நாளைக்கு என்ன என்பது பற்றி சிறிதளவும் அக்கறையே இல்லாதவள்.

மரம் வைத்தவன் தண்ணி ஊற்ற மாட்டானா. இந்த பத்து காசு கொடுத்தவன் நூறு காசு தரமாட்டானா. நூறு காசு கொடுத்தவன் ஆயிரம் காசு தரமாட்டானா. அந்த ஆயிரத்தை வைத்துக் கொண்டு என் வாழ்க்கையை கனஜோராக நடத்துவேன் என்று உரக்கச் சொன்னவள், ஊர்வாயை அடைத்தவள், காரியத்தில் மும்முரமில்லையென்றாலும், குடித்தனம் பண்ணுவதில் சாமர்த்தியம் இல்லையென்றாலும் அவள் வீட்டில் எல்லோருக்கும் பேசத் தெரிந்தது. உரக்க, பிசாசு மாதிரி கத்திப் பேசுவதில் அவள் வீடும், உறவுகளும் மிக சாமர்த்தியமுள்ளவை. சின்ன



விஷயத்தைக் கூட நீ யார், நான் யார் என்று சிறிய கேள்விகள் கேட்டு அதிரடியாய் சண்டை போட சற்றும் தயங்காதவர்கள். இனி உன் முகத்தில் விழிக்கமாட்டேன் என்று அப்பா பலமுறை சொல்லி, அம்மாவிடம் சண்டை போட்டு காலையில் வெளியே போய் மாலையில் திரும்பி யிருக்கிறார். அவர்களின் கொஞ்சல் சத்தமும், குலாவும் சத்தமும் கேட்டு வீட்டுக் குழந்தைகளை நாணப்பட வைப்பதில் அவர்களுக்கு இணை யாருமேயில்லை.

ஜீஜாபாய்க்கு ஒரு அத்தை இருக்கிறாள். அவள் மிகவும் கெட்டிக்காரி. இந்த சனியன்களோடெல்லாம் சேராதே. கத்தி கத்தி பலரது வெறுப்புகளுக்கு உனது தாயார் ஆளாகியிருக்கிறார். நான் உனக்கு சொல்லித் தருகிறேன். என் புருஷன் மிக நல்லவன். அற்புதமான ஆள். அவன் பலதும் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறான். அதை உனக்குச் சொல்லித் தருகிறேன் என்று ஆரம்பித்து மிருதுவாகப் பேசுவதன் மகிமையை, விரைவாகக் காரியம் செய்ய வேண்டிய அவசியத்தை, மௌனமாக இருந்தால் ஏற்படும் ஆற்றலை, கனிவாக இருந்தால் கிடைக்கக்கூடிய லாபத்தை மிகத் தெளிவாகச் சொன்னாள்.

கண்டோலாவில் உள்ள அத்தை வீட்டிற்கு சிறிது காலம் போய் இருந்து, அந்தக் குளுமையான பூமியைச் சுற்றி வந்து, புத்தியும், மனமும், குளுமையாகி இன்னும் திறமையானவளாய் ஜீஜாபாய் திரும்பி வந்தாள். வீட்டை மாற்ற முயற்சித்தான். வீடு மாறுவதாக இல்லை. தான் மாறியதே போதும் என்று உபதேசம் செய்வதை நிறுத்திக் கொண்டாள். தனக்கு வரக்கூடிய புருஷன் நல்ல புருஷனாக இருந்தால் போதும். இன்னும் சிறப்பாக வாழ்க்கையை நடத்திவிட முடியும் என்று யோசனை செய்தாள். அப்படி யொரு புருஷன் கிடைக்க வேண்டுமே என்று கடவுளை

வேண்டினாள். கற்பனை செய்தாள். அப்பொழுதுதான் இந்த வரன் வந்தது. இரண்டாம் தாரம் என்று எடுத்த எடுப்பிலேயே சொன்னார்கள். அப்பா உதடு பிதுக்கினார்.

அப்படியெல்லாம் கொடுப்பதாக எண்ணமில்லை என்று சொன்னார். ஆனால், வரன் கொண்டு வந்தது அத்தை.

''முட்டாள்தனமாகப் பேசாதே. நீ ஒன்றும் பணக்காரன் இல்லை. அன்றாடம் காய்ச்சி. உன் பெண்ணை கரையேற்றிவிடு. எத்தனை நாள் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பாய். அது அவளுக்கும் சிரமம். உனக்கும் வேதனை.''

''அதற்காக எங்கோ கொண்டு போய் என் குழந்தையை தள்ள வேண்டுமா?'' மிகுந்த உரிமையோடு அம்மா சத்தம் போட, அத்தை பதிலுக்கு கோபமாய் முறைத்தாள்.

''உனக்கு என்ன தெரியும்? அவனைப் பற்றி என்ன குறை கண்டுபிடித்து விட்டாய். அவன் மிக நல்லவன். அற்புதமான பணியாள். நல்ல குலத்தைச் சேர்ந்தவன். பாண்டுரங்கன் கோவிலுக்கு வரி கட்டுகிற குடும்பம். வருடத்திற்கு இரண்டு முறை போய் நின்று காணிக்கை செலுத்துகின்றவர்கள். சத்தியத்துக்கு கட்டுப்பட்ட மனிதர்கள். சந்தோஷமாக இருக்க ஆவலுள்ளவர்கள். உங்களைப் போல சண்டைக்காரர்கள் அல்ல. அவனுக்கு முதன்முறையாக உறவிலிருந்து எடுத்தார்கள். அந்த உறவுக்காரப் பெண் நோயாளி. அதை சொல்லாமல் மறைத்து விட்டார்கள். அவன் இன்றளவும் அவளை ஆதரித்துதான் வருகிறான். அவளைப் புறக்கணிக்காமல் தன்னோடு வைத்துக் கொண்டிருக்கிறான். அவளே வந்து தகப்பன் வீட்டுக்குப் போகிறேன், என்றபோதும், வேண்டாம். என் மனைவி என்னுடன்தான் இருக்க வேண்டுமென்று அவளிடம் பிரியமாக இருக்கிறான். அவனுக்கு உதவியாய்



வீட்டு வேலை செய்வதற்காய், வியாபாரத்திற்கு துணையாய் ஒரு பெண் வேண்டுமென்று நான்தான் சொன்னேன். சரி என்று சம்மதித்தான். ஜீஜாபாயிக்கு இதைவிட நல்ல இடம் கிடைத்துவிடாது'' என்று அழுத்தம்திருத்தமாய்ப் பேசினாள்.

வீடு மௌனமாயிற்று.

''அடியே... உன் தாயும், தந்தையும் சம்மதம் தெரிவிப்பது இருக்கட்டும். நீ புரிந்து கொள். இவன் முக்கியமானவன். மிக நல்லவன். இதை நான் உனக்கு ஆணையிட்டுச் சொல்கிறேன். பாண்டுரங்கன் சாட்சியாகச் சொல்கிறேன், உன்னுடைய ஜாதகத்தை நான் கொடுத்துப் பார்த்தேன். மிக உன்னதமான மனிதனுக்கு இவள் வாழ்க்கைப்படப் போகிறாள் என்று சொன்னார்கள். துகாராமை உன்னதமானவன் என்று சொல்ல மாட்டேன். ஆனால், மிக நல்லவன். ஒரு வேளை உன்னதமானவனாய் நீ வந்த பிறகு மாறலாமோ என்னவோ.

பெண் பார்க்கிற சடங்குகள் எல்லாம் இல்லை. அங்கிருந்து நான்கு நாட்கள் பயணம் செய்து, நமது ஊருக்கு வந்து இரண்டு நாள் சிரமபரிகாரம் எடுத்துக் கொண்டு, மூன்றாம் நாள் திருமணம் செய்து கொண்டு மறுநாளே கிளம்பி விடுவார்கள்.

என்னை நம்பு. என் பேச்சைக் கவனி. நான் உனக்குக் கெடுதல் செய்வேனா. நான் வளர்த்த பெண் இல்லையா. உன்னுடைய திறமையை நான் அறிவேன். எனக்குப் பிறந்ததும் பெண்களாய்ப் போயிற்று. இல்லையென்றால் வயசு வித்தியாசம் பாராமல் உன்னை தூக்கிக் கொண்டு போய் என் வீட்டில் வைத்திருப்பேன். ஆனால், உன் ஜாதகம் அப்படியல்ல. என் வீட்டிற்கு வரும்படியான ஜாதகம் அல்ல.

மிக உன்னதமானவன் மனைவி நீ என்று சொல்கிறார்கள். யாரது... யாரது... என்று தவித்துக் கொண்டிருக்கிறேன். அந்த உன்னதமானவனை நானும் பார்க்க ஆசைப்படுகிறேன்.

அடியே... காசு... காசு... என்று இந்த வணிகர்கள் குடும்பத்தை முற்றிலும் புறக்கணித்துவிட்டுப் போவதை பார்க்க எனக்கு வேதனையாக இருக்கிறது. அப்படியே காசு சேர்த்தாலும் வீட்டிலுள்ள பெண்களுக்கு ஏதேனும் நன்மை உண்டா. குடியும் கூத்தியுமாய் பொழுது போகிறது. அந்தப் பிள்ளையை விசாரிக்கப் பார்த்ததும் மிக நல்லவன் என்று சொன்னார்கள்.

பெண்களிடம் மிக மரியாதையாக இருக்கிறானாம். அண்ணியை தாய் போல் நடத்துகிறானாம். தினமும் காலையில் அண்ணனையும், அண்ணியையும் கிழக்கு பார்த்து நிற்க வைத்து வணங்குகிறானாம்.

இந்தக் காலத்தில் இப்படியொரு பிள்ளை உண்டா.

அண்ணனுக்கு வியாபாரத்தில் அவ்வளவு நாட்ட மில்லை. மொத்தமும் தம்பிதான் பார்த்துக் கொள்றான். இந்தப் பிள்ளைதான் தூக்கி நிறுத்துகிறான் என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பார்த்தபோது உனக்கு, உன் புத்திக்கு, உன்னுடைய நல்ல ஜாதகத்திற்கு உன்னுடைய சுறுசுறுப்பிற்கு இவன் சரியாக வருவான் என்று தோன்றுகிறது. இரண்டாவது திருமணம் என்று பயப்படாதே. அவன் ஜாதகப்படி முதல் மனைவி அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டாள்.''

''அவள் உடம்புக்கென்ன.'' அடிக்குரலில் மிருதுவாக ஜீஜாபாய் அத்தையைக் கேட்டாள்

''மூத்தவளுக்குத்தானே, ரத்தப்போக்கு நிற்கவே யில்லை. கருத்தரிக்கவுமில்லை. கருத்தரிக்கவில்லையே



என்று மருந்து சாப்பிட்டு, அந்த மருந்து மோசமான விளைவை ஏற்படுத்தி விட்டது. எந்நேரமும் சுருண்டு, சுருண்டு படுத்துக் கொண்டிருக்கிறாள். எதற்கும் லாயக் கில்லாத பெண்ணாக இருக்கிறாள். நான் பார்த்துவிட்டு வந்தேன். பாவமாக இருக்கிறது. இப்படியொரு பெண் ஜென்மம் இருக்கவே கூடாது.''

''அவளுக்கு ஆறுதலாக அவர்கள் வீட்டார்கள் இல்லையா?''

''இல்லை. பதின்மூன்று வயதில் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டு கையை தட்டிவிட்டுப் போய் விட்டார்கள், இரண்டு அண்ணன்மார்கள். அவர்கள் இரண்டு பேரும் மொகலாயர்களாக மாறி விட்டார்கள். இவளோடு எந்த சங்காத்தியமும் இல்லையென்று சொல்லி விட்டார்கள். ஏதேனும் உதவி வேண்டுமென்றால் நீயும், மொகலாயராக மாறிவிடு என்று சொன்னார்கள். ஆனால், புருஷன் இந்துவாக இருக்கும்பொழுது பெண் எப்படி மாற முடியும்.

துகாராம் பாண்டுரங்கன் மீது வெறிபிடித்த பக்தியுடையவர். ஒருபொழுதும் மதம் மாற மாட்டார்'' என்று நல்லவைகளாக சொல்லி திருமணம் செய்ய சம்மதிக்க வைத்தாள்.

அந்த நாளில் பரத கண்டத்தின் அந்தப் பகுததியில் நான்காவது வருணத்தினரும், வணிகர்களும், மொகலாயர் களாக மாறுவது நடந்துகொண்டிருந்தது க்ஷத்திரியர்கள் முரட்டுத்தனமாக அதை எதிர்க்க, பிராமணர்கள் குடி பெயர்ந்து தெற்கே போய்விட, வணிகர்களை தங்கள் மதத்திற்கு மாறுமாறு மொகலாயர்கள் அதிகம் துன்புறுத் தினார்கள். மாறவே மாட்டேன் என்று சவுக்கடி வாங்கியும், சூடுபட்டும் பலர் வீறாப்பாய் நிற்பது கண்டு மொகலாயப் பேரரசு மதம் மாற்றும் முயற்சியை கை விட்டது.

முஸ்லீம்களே முதல் குடிமகன் என்று அறிவித்தது. இந்துக்களுக்கு யாத்திரை வரி விதித்தது, சொத்து வரியை நில வரியை அதிகப்படுத்தியது. எத்தனை தொந்தரவு செய்தாலும் மராட்டியர்களுக்கு பாண்டுரங்கன் மேல் உள்ள விசுவாசம் குறையவேயில்லை. வருடா வருடம் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்ததே தவிர, பாண்டுரங்கன் கோலில் எந்தக் கொண்டாட்டத்திற்கும் குறைவில்லாமல் இருந்தது,

அங்குள்ள முஸ்லீம்கள் தொழுகை நடத்தும்போது மட்டும் ஊர் அமைதியாக இருக்கும். மற்ற நேரம் மணி முழக்கமும், பேரிகையும், சங்கும் ஊதப்பட்டு விழாக்கள் கோலாகலமாக கொண்டாடப்படும்.

ஜீஜாபாயின் வீடும் பாண்டுரங்கனுக்கு தன்னை ஒப்புக் கொடுத்துக் கொண்ட வீடு. அவளுக்கு வாய்த்த புருஷனும் பாண்டுரங்கனுக்கு வரி கட்டுபவனாக இருப்பதும், வருடா வருடம இரண்டுமுறை யாத்திரை போகும் குடும்பமாக இருப்பதும், மிகச் சந்தோஷமாக இருந்தது.

வீட்டுக்குள் பூஜை அறை உண்டா?

தெரியவில்லை.

பாண்டுரங்க விக்கிரகம் உண்டா?

தெரியவில்லை.

இப்பொழுது கேட்கலாமா அல்லது வீட்டுக்குள் போய் பார்த்துக் கொள்ளலாமா. கேட்டால் வந்து பாரேன் என்று பதில் சொல்லி விடுவார்களோ. அது மூக்குடைந்தது போல ஆகுமோ.

லேசாய் பயந்தாள்.

குதிரை வண்டியேறி இரண்டு மணி நேரமாயிற்று, யாரும் எதுவும் பேசவில்லை.



ஒரு ஓடைப் பக்கம் நிறுத்தினார்கள். கை கால்களை நீட்டி சிரமப்பரிகாரம் செய்து கொள்ளுமாறு சொன்னார்கள்.

வண்டிக்காரன் குதிரையை அவிழ்த்து ஆற்றுக்கருகே கொண்டு போனான். அண்ணியும், கிழவியும் புதர் பக்கம் போனார்கள்.

பெண்கள் துணி மூட்டையிலிருந்த தின்பண்டங் களைப் பிரித்து அள்ளி வாயில் போட்டுக் கொண்டார்கள்.

குதிரைவண்டியிலேயே ஜீஜாபாய் உட்கார்ந்து கொள்ள, ''ஏன் அங்கேயே இருக்கிறாய். வா. மரத்தடிக்கு போகலாம்.'' அவள் புருஷன் கூப்பிட்டான். முன்னே நடந்து போனான். ஜீஜாபாய் பின்னே நடந்து போய் மரத்தடியில் புருஷன் உட்கார்ந்த பிறகு தானும் உட்கார்ந்து கொண்டாள்.

''பண்டரிபுரம் போயிருக்கிறாயா?'' துகாராம், ஜீஜாபாயைக் கேட்க, ஜீஜாபாய் ''ஓ...'' என்று விழி விரித்துச் சொன்னாள்.

''பாண்டுரங்களை தரிசித்தது உண்டா?'' அடுத்த கேள்வி கேட்டான்.

''இரண்டு நாட்கள் மூன்று நாட்கள் தங்குவோம். பத்து நிமிடம் அரை மணி நேரம் கோயிலிலேயே உட்கார்ந்து விட்டு வருவோம். மற்றபடி ஊர் சுற்றிப் பார்ப்பதும், பஜனைகளில் கலந்துகொள்வதும்தான் எங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு. பாண்டுரங்கன் கோயிலில் மட்டுமல்ல, பண்டரிபுரம் முழுவதும் இருக்கிறார் என்பது என்னுடைய அபிப்பிராயம்.''

துகாராம் அவள் பேச்சுக்கு வாய் விட்டுச் சிரித்தான்.

''உண்மை. மிக்க உண்மை. பாண்டுரங்கன் கோயிலில் மட்டுமில்லை, எங்கெல்லாம் தம்பூர் ஸ்ருதி கேட்டு பாட்டுப்

பாடுகிறார்களோ, சதங்கை கட்டி ஆட்டம் ஆடுகிறார்களோ, எங்கெல்லாம் பந்தம் கொளுத்தி அவருடைய புகழைப் பாடுகிறார்களோ அந்த இடத்திலெல்லாம் பாண்டுரங்கனும் உட்கார்ந்து கொண்டு தன் புகழைத் தானே கேட்டுக் கொண்டிருக்கிறார். மிக அற்புதமான கடவுள் அவர்.''

''உங்களுக்குப் பாண்டுரங்கன் மிகவும் பிடிக்குமா?'' ஜீஜாபாய் கேட்க, ''வேறு என்ன வழி. தேசம் இன்று இருக்கின்ற நிலைமையில் கடவுளைத் தவிர நம்மை காப்பாற்றப் போகிறவர் வேறு யார்?'' அவன் பதில் சொன்னான்.

''இந்த தேசத்திற்கு என்ன கெடுதல் வந்துவிட்டது.'' ஜீஜாபாய் புரியாமல் கேட்டாள்.

''மராட்டியத்தின் மிகப் பெரிய வீரர்களெல்லாம், நவாப்புகளுக்கு விசிறவும், கால் பிடித்து விடவும், வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுக்கவும். இந்துப் பெண்களை வேட்டையாடி அந்தப்புரத்துக்கு கொண்டு போகவும் தயாராகிவிட்டார்கள். உண்மையாக தேசத்தைக் காக்கக்கூடிய வீரர்கள் எவருமே இல்லை.''

வாழ்க்கை மோசமாகத்தான் இருந்தது. ஆனாலும் நடுநடுவே பாலைவனத்து சோலை போலவும், வறண்ட ஆற்றில் ஊற்று போலவும், சந்தோஷமான நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டுதான் இருந்தன. பாண்டுரங்கனைக் கொண்டாட மராட்டிய மைந்தர்கள் மறந்ததே இல்லை. மராட்டா விஷ்ணு பூமி. பக்தி ததும்பும் இடம். அந்த இடத்தில் இஸ்லாமியர்களுடைய ஆக்கிரமிப்பால் சாக்த உபாசனை துவங்கி விட்டது. பவானி பூஜைகள் நடக்கத் துவங்கி விட்டன. ரோஷமுள்ள மராட்டிய வீரர்கள் ஒன்று கூடி மொகலாயர்களின் அட்டூழியங்களை எதிர்ப்பது என்று தீர்மானித்து, அவ்வப்போது எதிர்த்துக் கொண்டுதான்



இருந்தார்கள். அவர்கள் கொடுத்த தைரியத்தால் திருவிழாக் களம், பண்டிகைகளும், இடைவிடாது கோலாகலமாய் மராட்டியத்தில் நடந்தேறின.

மழை நன்கு பெய்தது. காய்கறிகள் அதிகம் விளைந்தன. பசுக்கள் பால் கொடுத்தன. ஆட்டு இறைச்சியும், கோழி இறைச்சியும் மலிவாகக் கிடைத்தன. பஞ்சாபிலிருந்தும், குஜராத்திலிருந்தும் கோதுமை வண்டிகள் மராட்டியத்திற்கு வந்து இறங்கின. கர்நாடகத்து அரிசி எளிதில் கிடைத்தது. பருப்பு வகைகள் உள்ளூரிலேயே விளைந்தன.

மொகலாயர்கள் துணிமணி நெசவை ஆதரித்தார்கள். அந்த அலங்காரப் பிரியர்களுக்காக விதம் விதமாக சரிகை போடப்பட்டு துணிகள் நெய்யப்பட்டன. அந்தத் துணிகள் அவர்களின் உபயோகம் போக மீத முள்ளவை சந்தைக்கு வந்தன. ஜனங்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கினார்கள்.

இடுப்பிலே கட்டிக்கொண்டிருக்கிற இந்தப் புடவை கூட கர்நாடகத்து வணிகர்கள் நெய்து கொண்டு வந்து கொடுத்தது.

அழகான கரை. உள்ளே சிறுசிறு பூவாக நெய்திருந்தார்கள். அதைக் கட்டி அவள் எழுந்ததும் சபையே அவளைத் திரும்பிப் பார்த்தது.

''அடாடா... என்ன அழகு, செப்புச் சிலையைப் போல...'' என்று வாய் விட்டு பெண்கள் பாராட்டினார்கள்.

அழகு உடம்பில் மட்டுமில்லை. புடவையாலும் கூடியது. நல்ல உடுப்பால் எடுப்பாகத் தெரிந்தது.

சபை முழுவதையும் உள் வாங்கிக் கொண்டு ஜீஜாபாய் ஓரக்கண்ணால் புருஷன் முகத்தில் ஏதேனும் வியப்பு தெரிகிறதா என்று பார்த்தாள். எதுவும் தெரியவில்லை. மிகப்

பெரிய அமைதி அவன் முகத்தில் இருந்தது. யாரும் பார்த்துவிடக்கூடாதே என்பதால் பாராட்டவில்லையா. இல்லை. பாராட்டவே தெரியவில்லையா என்ற கேள்வி வந்தது.

புருஷன் கையைப் பிடித்துக்கொள் என்று சொன்ன போது, அவன் விரித்த கைக்குள் தன் கையை மெல்ல பதிய வைத்தாள். அவன் மெல்ல ஒரு அழுத்து அழுத்தி தளர விட்டு பிறகு சாதாரணமாகப் பிடித்துக் கொண்டான். அந்த அழுத்தலில் ஒரு அன்பு. ஒரு ஆதரவு, ஒரு நட்பு இருந்தது. நிமிர்ந்து அவனைப் பார்க்க, மிக மெல்லியதாய் அந்தக் கண்கள் சிரித்தன.

ஜீஜாபாயிக்கு நிம்மதியாயிற்று.

இப்பொழுது இந்த மரத்தடியில் இவர் என்ன பேசுகிறாரோ அதை வைத்துத்தான் மொத்த வாழ்க்கையும் நடக்கப் போகிறது என்று ஜீஜாபாய் புரிந்து கொண்டாள்.

''வண்டிக்குள் பட்சணங்கள் இருக்கின்றன. கொண்டு வந்து கொடுக்கட்டுமா. சாப்பிடுகிறீர்களா?'' ஜீஜாபாய் ஆவலோடு கேட்டாள்.

லட்டும், பால்கோவாவும், திரட்டுப் பாலும், பதிர் பேணியும் வண்டியில் இருந்தன. அவைகளை எடுத்து வந்து அவனிடம் நீட்ட, துகாராம் ஆவலோடு வாங்கிக் கொண்டான்.

''எனக்குப் பசி, என்ன இருக்கிறதென்று கேட்க நினைத்தேன். நீயாகக் கொண்டு வந்து கொடுத்து விட்டாய். இன்னும் வேறு என்ன இருக்கிறது, இனிப்பு மட்டும்தானா. கார வகைகள் எதுவுமில்லையயா?'' மறுபடியும் ஜீஜாபாய் வண்டிக்கு ஓடினாள்.

கோதுமை மாவை உலர்த்திப் பொரித்த தின் பண்டத்தை கொண்டு வந்தாள். காரம் போட்ட சுண்டலைக் கொண்டு வந்து கொடுத்தாள்.



இந்த சுண்டல் உடம்புக்கு நல்லது. ஆணுக்கு வலு சேர்க்கும் என்று அவளுக்கு கொடுத்திருந்தார்கள். அதை அவனிடம் நீட்ட, அவன் அதிலிருந்தும் ஒரு கை எடுத்துக் கொண்டான்.

''இன்னொரு இலை எடுத்து வரக்கூடாதா?'' என்று கேட்டான்.

''ஏன். கையில் எடுத்து வந்தது தவறா?'' அவள் லேசான பயத்தோடு கேட்டாள்.

''இல்லை. இன்னொரு இலை இருந்தால் நீயும் சாப்பிடலாமே.'' அவளைப் பார்த்து அன்போடு பேசினான்.

ஜீஜாபாயிக்கு உள்ளே நெகிழ்ந்து போயிற்று பாண்டுரங்கனுக்கு உடனே நன்றி சொன்னாள்.

கடவுளே, பல இனிய அதிர்ச்சிகளை கொடுத்துக் கொண்டிருக்கிறாய். இவர் நல்லவர் என்று அத்தை சொன்னதை மறுபடி மறுபடி உறுதிப்படுத்திக் கொண் டிருக்கிறாய். இப்படி ஒரு அக்கறை இருந்தால் போதும். இவன்மேல் அன்பை சூறாவளிக்காற்றாய், பெருமழையாய் பெய்ய முடியும். பார்த்துப் பார்த்து செய்ய முடியும்.

''ஆமாம் எனக்கும் பசிக்கிறது.'' ஜீஜாபாய் சொன்னாள்.

அவன் தன்னுடைய இலையை இரண்டாகக் கிழித்தான். இனிப்பும், சுண்டலும் வைத்து அவளிடம் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டாள். அருகே வைத்தாள், விழுந்து நமஸ்கரித்தாள்.

''என்ன... எதற்கு திடீரென்று நமஸ்காரம்?'' அவன் சற்று படபடப்போடு கேட்டான்.

''முதன்முதலில் உங்கள் கையால் எனக்கு உணவு கொடுத்திருக்கிறீர்கள். நமஸ்கரித்து வாங்கிக் கொள்ள வேண்டாமா?''

''வேண்டாம்.'' அவன் சரக்கென்று பதில் சொன்னான்.

''ஒவ்வொரு செயலுக்கும் புருஷன் காலில் விழுந்து வணங்குவதெல்லாம் வேண்டாம். அடிமைத்தனமாய் இருக்க வேண்டிய அவசியமேயில்லை. உனக்கு என்ன வேண்டுமோ அதைக் கேள். என்னால் முடிந்த அளவுக்கு உதவி செய்கிறேன். உனக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே முடிந்த அளவு உதவி செய்வதுதான் என் வாழ்க்கையின் நோக்கம். அப்படித்தான் மனிதர்கள் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். மனிதருக்கு மனிதர் உதவி செய்யாமல் வெறும் சண்டை சச்சரவில் ஈடுபட்டு, தன்னுடைய சுகத்தையும் கெடுத்துக் கொண்டு, மற்றவருடைய அமைதியையும் நாசமாக்கிக் கொண்டு இருக்க வேண்டிய அவசியமென்ன. எனக்குப் பசிக்கிறது. அதே போல் உனக்கும் பசிக்கும். இதை ஒரு புருஷன் நினைத்தால் அவனுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டுமா என்ன. இது சாதாரண மனித குணம்தானே. அது தவிர குதிலைக்கு ஏதேனும் உணவு கொடுத்தார்களா என்ற கவலையும் இருக்கிறது'' என்று சொல்ல, வாயில் சுண்டலுடன் ஜீஜாபாய் வாய் விட்டுச் சிரித்தாள்.

''அட... குதிரை மீதும் கரிசனம். குதிரைவண்டியின் மீதும் கரிசனம். குதிரைக்காரன் மீதும் கரிசனம். பெண்டாட்டியின் மீதும் கரிசனம். எல்லாம் ஒன்றல்லவா.''

''ஆமாம். எல்லாம் ஒன்றுதான்.''

''அதெப்படி பெண்டாட்டி உயர்வில்லையா? எல்லா வற்றையும்விட நீங்கள் எனக்கு முக்கியமில்லையா? என் புருஷனுக்கு உணவிட்ட பிறகுதான் மற்றவருக்கு உணவிடுவேன்.''

''இல்லை. தவறு. புருஷன் முக்கியம்தான். எதில் முக்கியம் என்பதில் இருக்கிறது. அன்பு என்பது எல்லா



உயிர்களுக்கும் தேவையான விஷயம். வயதான கிழவர்கள், குழந்தைகள், வீட்டு வாசலில் இருக்கும் நாய், பசுமாடு, பறவைகள் இவைகளுக்கு உணவளித்துவிட்டு புருஷனுக்கு உணவளிக்க வேண்டுமென்று ஒரு செய்யுள்கூட நான் படித்திருக்கிறேன். மனுதர்மத்தில் அவ்விதம் சொல்லப் பட்டிருக்கிறது.''

''அடேயப்பா! இதெல்லாம் படித்திருக்கிறீர்களா?''

''வேறு என்ன வேலை. கடையில் வியாபாரம் என்றால் இருபத்து நான்கு மணி நேரமுமா. ஏதேனும் ஓலைச்சுவடி இருக்கும். அதை வைத்துக் கொண்டு நான் படித்துக் கொண்டுதான் இருப்பேன்.''

''அவர்கள் படிப்பார்களா?'' சட்டென்று அவனை கூர்மையாகப் பார்த்து ஜீஜாபாய் கேட்டாள். வந்ததிலிருந்தே அவளுக்கு ருக்மாபாயைப் பற்றி தெரிந்து கொள்ள ஆவல் இருந்தது. அதை எப்பொழுது கேட்பது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். சட்டென்று இப்பொழுது கேள்வியை வீசினாள்.

''யார்?'' அவன் ஒன்றுமறியாதவன் போல் கேட்டான்.

''அவர்கள்தான் பெரியவர்கள், அவர்கள் படிப்பார்களா?''

''யார், அண்ணியா? நன்றாகப் படிப்பார்கள்.''

''இல்லை, நான் பெரியவர்களைச் சொன்னேன்.''

''அண்ணியைவிடப் பெரியவர்கள் யாரு மில்லையே.''

''இல்லை. எனக்குப் பெரியவர்கள்.''

''அது, ருக்மாபாயை சொல்கிறாயா. ருக்மாபாய் படிக்க மாட்டாள். ஆனால், நன்றாகப் பாடுவாள்.''

''அவர்கள் உடம்புக்கு என்ன?''

''என்ன சொல்வது தலையெழுத்து. ஒருமுறை கருக் கலைப்பு ஏற்பட்டது. சரி, சிறிது நாள் ஓய்வுக்குப் பிறகு நன்றாகிவிடும் என்று எதிர்பார்த்தோம் அவ்விதமே நன்றாகவும் ஆகியது. மறுபடியும் கருவுற்றாள். அப்பொழுது இரண்டாம் முறை கருக்கலைப்பு நடந்துவிடக்கூடாது என்பதற்காக யாரோ ஒரு வைத்தியரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டாள். மருந்தினுடைய வேலையா அல்லது போன ஜென்மத்து பாபமா தெரியவில்லை. நிற்காமல்... நிற்காமல்... உதிரப்போக்கு இருக்கிறது. பாவம். தந்த பொம்மை போல் வந்தவள், எலும்பும் தோலுமாய் உட்கார்ந்திருக்கிறாள். பதினாறு வயது பெண் என்று யாரும் சத்தியம் செய்தாலும் நம்பமாட்டார்கள். அவ்வளவு மோசமான தோற்றம்.''

''நடமாட முடியாதா?''

'மெல்ல சுவர் பிடித்துக் கொண்டு நடப்பாள்.''

''நன்கு சாப்பிட்டால் உடம்பு தேறாதா?''

''என்ன சாப்பிட்டாலும், சாப்பிடுகிற சக்தி உதிரப் போக்கில் வெளியேறுகிறதென்றால், சாப்பிட்டு என்ன பயன். அதைத் தவிர அவளுக்கு மனம் சோர்ந்து விட்டது. தனக்கு இப்படியொரு வியாதி வந்துவிட்டதே என்ற வேதனை வந்துவிட்டது. நாம் புருஷனுக்கு உபயோக மில்லாமல் இருக்கிறோமே என்கிற கவலை அரித்துக் கொண்டிருக்கிறது. நான் எத்தனையோ ஆறுதல் சொல்லியும், அவள் அதை கேட்கவேயில்லை.''

''அவர்களுக்குத் திருமணம் நடப்பது தெரியுமா?''

''திருமணத்திற்கு காரணமே அவள்தான். நான் வேண்டாமென்று சொன்னேன். அவள்தான் என் அண்ணியை ஊக்கப்படுத்தி, என்னால் புருஷனுக்கு எந்த உபயோகமும் இல்லை. அவருக்கு உடனே திருமணம் செய்து வையுங்கள். நல்ல பெண்ணாக பார்த்து வையுங்கள். அப்பொழுது நானும் சௌக்கியமாக இருப்பேன், இவர் வேறு எங்கேனும் போய் சிக்கிக் கொள்வதற்கு இன்னொரு திருமணம் செய்து கொள்வது நல்லது என்று பல பேரை உதாரணம் காட்டி, என்னைத் திருமணத்திற்கு சம்மதிக்க வைத்து விட்டாள்.''



''என்னைத் திருமணம் செய்து கொண்டது உங்களுக்கு இஷ்ட மில்லையோ...''

''அப்படிச் சொல்ல முடியாது.''

''வேறு எப்படிச் சொல்ல வேண்டுமென்று நினைக் கிறீர்கள்.''

''நான் ஏகபத்தினி விரதனாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ராமரைப் போல வாழ வேண்டும் என்று விரும்பினேன். சத்திய சந்தனாக, தர்மத்தைக் காக்கின்றவனாக, நீதிகளை ஊருக்குச் சொல்கிறவனாக, இருக்க வேண்டும். ஒரேயொரு மனைவியோடு வாழ வேண்டும் என்பது என் மிகப் பெரிய விருப்பம். இன்றைக்கு இஸ்லாமியர்கள் பல தாரத்தை ஊக்குவித்துக் கொண்டிருக் கிறார்கள். நம்மவர்களிடமும் இந்தப் பழக்கம் இருக்கிறது. இப்பொழுது அது அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஆனால், ஒரேயொரு மனைவி என்று இருப்பது எவ்வளவு உன்னதமான விஷயம். ஆனால், அவ்விதம் என்னால் வாழ்க்கை நடத்த முடியவில்லையே என்பது எனக்கு சற்று வருத்தம்தான்.''

''பின்பு, ஏன் திருமணம் செய்து கொண்டீர்கள்?''

''உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால்...''

அவன் தரையைப் பார்த்து மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

''சொல்லுங்கள், நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை யென்றுதான் நம்பி கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதில் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் என்று ஏன் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கும் உங்களுக்கும் நடுவே பொய் எதற்கு? பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? நீங்கள் என்னவாக இருந்தாலும், என்ன பேசினாலும், எப்படி சிந்தித்தாலும், எப்படிச் செயல்பட்டாலும் நீங்கள் என்னுடைய புருஷன்.''

''அதேதான் எனக்கும். நீ நல்லவளாக இருந்தாலும், கெட்டவளாக இருந்தாலும், உன்னைத் திருமணம் செய்து கொண்டு விட்டேன். சப்தபதியாய் ஏழடி தூரம் வந்து உன் கையைப் பிடித்து விட்டேன். இனி நீதான் எனக்கு முக்கியம். உன் நலன், உன் சுகம்தான் எனக்கு முக்கியம்.'' அவனும் உணர்ச்சியேடு பேசினான்.

''பிறகு உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால்... என்று பீடிகையோடு ஆரம்பிப்பானேன். சொல்லுங்கள். எதற்காக இரண்டாவது திருமணம் செய்து கொண்டீர்கள்''

''ருக்மாபாயை யாராவது நன்கு கவனித்துக் கொள்ள வேண்டுமல்லவா. நீ வந்து அவளை நன்கு கவனித்துக் கொண்டால், அவள் உடம்பு தேறி நலமாகி விடமாட்டாளா. அவளுக்கு நல்லவிதமாக வைத்தியம் செய்தால் மறுபடியும் புதிதாய் வாழ்க்கை துவங்க மாட்டாளா என்ற ஆசையில் உன்னைத் திருமணம் செய்து கொண்டேன். அண்ணிக்கு ஊர்ப்பட்ட வேலை. அண்ணனுக்கு சாமர்த்தியம் போதாது. அண்ணிதான் வியாபாரத்தை நடத்துகிறார்கள். நான் அண்ணிக்கு உதவியாக இருக்கிறேன். அண்ணியால் வீட்டை கவனிக்க முடியவில்லை. சரக்கு வாங்கி வருவது, சரக்கு விற்பது இதே பெரும் தலைவலியாக இருக்கிறது. ருக்மாபாயை கிட்டத்தட்ட அநாதையாக வீட்டிலே





விட்டுவிட்டுப் போகிறோம். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் உன்னுடைய வேலை என்னைக் கவனித்துக் கொள்வது கூட அல்ல. ருக்மாபாயை கவனித்துக் கொள்வது. ருக்மாபாய் சந்தோஷமாக இருந்தால் அது எனக்கு மிகவும் சந்தோஷம்.''

உள்ளே சட்டென்று ஒரு சோர்வு, ஒரு பயம், ஒரு வேதனை ஜீஜாபாயை பற்றிக் கொண்டது. அவள் தலை கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

''இதற்கு அர்த்தம் உன்னை நான் அலட்சியம் செய்கிறேன் என்பது அல்ல'' அவள் மனதில் ஓடிய எண்ணங்களை மிக எளிதில் படித்த துகாராம் அழுத்தம் திருத்தமாகப் பேசினான்.

''கிளம்பலாமா?'' வண்டிக்காரர் வந்த கேட்டார்.

''இல்லை ஐயா! இன்னும் ஒரு அரை நாழிகை ஆகும். சற்று சிரமப் பரிகாரம் செய்து கொண்டு போகலாம். வயதானவர்களை உடனே கிளப்பாதீர்கள்'' என்று கட்டளை யிட்டது போல் துகாராம் சொல்ல, வண்டிக்காரர் சரியென்று தலையசைத்துவிட்டு வேறொரு மரத்தடிக்குப் போய் மல்லாக்க படுத்துக் கொண்டார.

ஜீஜாபாய் நிமிர்ந்து பார்த்தாள்.

''ஒரு விஷயத்தை பேச ஆரம்பித்து விட்டோம். பாதியில் நறுக்கிக் கொண்டு போனால். நன்றாக இருக்காது. அதனால்தான் இப்பொழுதே பேசுவதற்காக அனர நாழிகை தாமதித்தேன்.

அதற்கு அர்த்தம் உன்னை நான் இழிவுபடுத்துவதாக அல்ல. உன்னை கேவலப்படுத்துவதாக அல்ல. உன்னை வேலைக்காரியாக நான் அழைத்துப் போகவில்லை. உனக்கு எல்லாவிதமான மரியாதையும் கிடைக்கும். நீ எனக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிற

மனைவியாக இருந்தால், ருக்மாபாய்க்கு உதவி செய். அது என்னை மிகவும் சந்தோஷப்படுத்தும். ருக்மாபாயை உன்னுடைய மூத்தாள் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். ஒரு நோயாளி தன்னால் எதுவும் செய்ய முடியாதவள். எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் நேரும் என்று வாழ்பவள். அவளுக்கு ஆறுதலாக சில வார்த்தைகள் பேசி, அன்பான சில உபசரணைகள் செய்தால் என்ன தவறு. நான் செய்கின்ற உபசரணைகளை ருக்மாபாய் ஏற்க மறுக்கிறாள். புருஷன் செய்யக்கூடாது என்று சத்தமிடுகிறாள். சண்டை போடுகிறாள். நான் உணவு பரிமாறினால் சாப்பிட மாட்டேன் என்கிறாள். அவளைக் கண்ணும் கருத்துமாக கவனித்து உணவு பரிமாற உன்னால் முடியாதா. நீ அதைச் செய்யக்கூடாதா? நீ மிகவும் நல்லவள். மிகவும் கெட்டிக்காரி என்று உன் அத்தை சொல்லியிருக்கிறாள்.''

ஜீஜாபாய் நிமிர்ந்து பார்த்தாள்.

துகாராம் முகத்தில் ஆவலும், நம்பிக்கையும் தெரிந்தன.

''அத்தை வேறு என்ன சொன்னாள்.''

''அவளுக்கு வயது சிறிதே தவிர, புத்தி பெரியது. நல்லது கெட்டதை வெகு எளிதாக அவள் கிரகித்துக் கொள்கிறாள். வெகு எளிதாக மற்றவரோடு பழகுகிறாள் எல்லோருக்கும் இனிமையானவளாக இருக்க வேண்டுமென்று பாடுபடுகிறாள். அவள் தாய்க்கும், தந்தைக்கும் புத்தி போதாது. ஆனால், இவள் மிகுந்த கெட்டிக்காரி. உனக்கு நல்ல தோழி வேண்டுமென்றால் இவளை திருமணம் செய்துகொள் என்று சொன்னார்கள். எனக்கு அந்த வார்த்தை பிடித்தது. எனக்கு நல்ல மனைவி வேண்டாம். எனக்கு நல்ல தோழி வேண்டும். நீ தோழியாய் இருப்பாய் என்று நினைத்துத்தான் உன்னைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறேன்.



சட்டென்று உள்ளுக்குள் தங்கிய கணம். வேதனை கலவரம் கால்வழியே வழிந்து வெளியேறியது.

ஜீஜாபாய் பூ மாதிரி சிரித்தாள்.

''அடேயப்பா... முதன் முதலாய் சிரிக்கிறாய். அதுவும் அழகாக பெரியதாக சிரிக்கிறாய். முதன் முதலாக உணவு கொடுத்த புருஷனை நமஸ்கரித்தாயே. முதன் முதலாக சிரிக்கிற மனைவியை புருஷன் என்ன செய்ய வேண்டும். நமஸ்கரிக்க வேண்டுமா'' என்று கேட்க, ''ஐயோ! இது என்ன அசட்டுத்தனம்.

ஜீஜாபாய் உரக்கச் சிரித்தாள்.

''அடேயப்பா... சங்கீதமாய் இருக்கிறது உன் சிரிப்பு, வெகு நாளாயிற்று இப்படியொரு சிரிப்பை ஒரு பெண்ணிடமிருந்து கேட்டு...''

துகாராம் உண்மையான ஆதங்கத்துடன் சொன்னான்.

''இப்படிப் பாராட்டினால் போதும். மனைவியை இப்படி ஒரு முறை பாராட்டினால் அது நூறு முறை நமஸ்காரம் செய்ததற்கு இணை. மனைவியை நஸ்கரிப் பது. என்பதே மனைவியைப் பாராட்டுவதுதான். இதுதான் பல கணவர்கள் செய்ய மறுக்கிறார்கள்.''

''உன்னைப் பாராட்ட வேண்டும். அவ்வளவுதானே. பார், திணறத் திணறப் பாராட்டுகிறேன்.''

அவள் பேசினாள்.

துகாராம் வாய்விட்டுச் சிரித்தான்.

வண்டிக்காரர் எழுந்து அவர்களைப் பார்த்தார். அவரும் சிரித்தார்,

குதிரையும் கனைத்தது.

## 2

வீடு பெரியது. ஆனால், மிகப் பழையது. வாசல் புறத்தில் பூக்களால் கோலமிட்டு சுவர் முழுவதும், சித்திரங்கள் எழுதி, பெரிய சாமந்தித் தோரணம் கட்டி அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்தது.

அட... என்று சந்தோஷமாய் ஜீஜாபாய் வியந்தாள்.

குதிரைவண்டியிலிருந்து இறங்கியதும் ஜீஜாபாய் உறவினர்கள் இரண்டு பேர் வரவேற்றனர்.

அப்பா மூன்று நாட்களுக்கு முன்பே இந்த ஊருக்கு அனுப்பி வைத்து விட்டாராம். 'கல்யாணம் ஆன மறு நாளே குழந்தையை அனுப்பி வைத்து விடுவேன். அங்கு பேய் ஜீஜாபாய்க்கு வேண்டியவைகளை செய்து வையுங்கள்' என்று சொல்லிவிட்டாராம். அந்த தூரத்து உறவினர்கள் வீட்டுக்குள் வந்து, வீட்டை சுத்தம் செய்து வாசலில் பூத்தோரணம் கட்டியிருக்கிறார்கள். இல்லையெனில், இதைச் செய்யவும் அந்த வீட்டில் ஆள் இல்லை.

அண்ணி கீழே இறங்கி திபுதிபுவென்று வீட்டுக்குள் ஓடினாள். ஆரத்தி கரைக்கிறேன் என்று சொன்னாள்.

ஆரத்தி கரைத்து தயாராக வைக்கப்பட்டிருந்தது இரண்டு விளக்குகள் ஏற்றி உள்ளே வரவழைத்தார்கள். படி நிறைய அரிசியும், அதன்மீது மாவிலைக் கொத்தும் வைத்திருந்தார்கள். எட்டி உதைத்து உள்ளே வரும்படிச் சொன்னார்கள்.

வலக்காலால் படியை எட்டி உதைத்து வீடு முழுவதும் அரிசியை சிதறடித்து ஜீஜாபாய் புருஷனுடைய வலக்கையை பற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.



அரிசி தொலைதூரம் பரவியிருக்கிறதென்று எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். அப்படிப் பரவியிருப்பதுதான் நல்ல சகுணம் என்றும் சொன்னார்கள்.

வீட்டிற்குள் வாசனைப் பொடியை புகையாய்ப் போட்டிருந்தார்கள். சந்தனம் கரைத்து தெளித்திருந்தார்கள். துணிகளை பன்னீரில் தோய்த்து உலரவிட்டிருந்தார்கள். ஒரு கதம்பமான வாசனை அடித்தது.

உறவினர்கள் இரண்டு பேரும் பெட்டி வண்டியின் பின்பக்கம் திறந்து கூடைகளையும், சாமான்களையும் கீழே இறக்கினார்கள். அரிசிக் கூடையை எடுத்து அவள் மடியில் கட்டி, அவனைக் கொண்டு போய் பூஜை அறையில் இறக்கச் சொன்னார்கள்.

அந்தக் கூடையை பூஜை அறையில் இறக்கினாள். இடதும் வலதும் யார் இருக்கிறார்கள் என்று தேடினாள். நோய்ப்பட்டு மெலிந்த முகம் என்று எதுவும் தெரிய வில்லை. எல்லோரும் புஷ்டியாக இருந்தார்கள். பெரிதாய் சிரித்தார்கள். உரக்கப் பேசினார்கள். பேச்சிலிருந்து அவர்கள் யாரும் உறவினர்களல்ல, நண்பர்கள் என்று தெரிந்தது.

ஜீஜாபாய் கவலையுடன் ருக்மாபாயை எப்பொழுது பார்ப்பது, எங்கு பார்ப்பது என்று தவித்துக் கொண்டிருந்தாள்.

''வா'' என்று துகாராம் அழைத்தான்.

அவளுடைய வலது கையை பிடித்துக் கொண்டான். இரண்டு கட்டுகள் தாண்டி, பின்பக்கம் உள்ள பெரிய முற்றத்திற்குப் போனான். முற்றத்திறகு அடுத்த கூடத்திலே உட்கார்ந்திருந்த பெண்ணை அணுகினான்.

ஜீஜாபாய்க்கு தூக்கி வாரிப்போட்டது.

பதினாறு வயதுப் பெண்ணா இவள். முகம் ஒடுங்கிப்போய், தலைமுடி உதிர்ந்து, பற்கள் துருத்தி

மெல்லிய கண்களால் பாசத்தை சொரிந்து கொண்டிருக்கிறாளே, என்னாயிற்று இவள் இளமை, சபிக்கப்பட்ட பெண்போல் இருக்கிறாளே என்று வயிறு குமைந்தாள்.

''இதுதான் ஜீஜாபாய்.'' துகாராம் அறிமுகப் படுத்தினார்.

ருக்மாபாய் ஏறிட்டு நோக்கினாள். சிரித்தாள். கை கூப்பினாள். ஜீஜாபாய் அவள் அதிரே மண்டியிட்டு வணங்கினாள். உடம்பை எட்டாக மடித்து குனிந்து நெற்றி நிலம்பட வணங்கும்போது நீ யாரோ தெரியவில்லை. உன் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள நான் இங்கு வரவில்லை. உனக்குப் போட்டியாக நான் வாழ்க்கை நடத்த முயலவில்லை. விதி என்னை உன்னருகே கொண்டு வந்து விட்டிருக்கிறது. உன் புருஷனோடு என்னை கைகோத்து வைத்திருக்கிறது. உனக்கு எந்தக் கெடுதலும் இல்லாமலும், எந்த மனவேதனையும் இல்லாமலும் இருப்பதற்கு பாண்டுரங்கன் எனக்கு அருள்வாராக. உன்னை நலபபடுத்த என்னால் முடிந்த அத்தனை முயற்சியும் செய்வேன். என் மீது கோபப்படாமல், ஆத்திரப்படாமல் என்னை நீ புரிந்து கொண்டும், உன்னை நான் புரிந்து கொண்டும் வாழ்க்கை நடத்துவோம். இதற்காக வேண்டுவோம்.

பிரார்த்தனை செய்துவிட்டு எழுந்து நின்று அவள் கைகளை மெல்ல பற்றிக் கொண்டாள்.

''நீ ரொம்ப அழகா இருக்க.'' முதல் வார்த்தை ருக்மா பாயிடமிருந்து வந்தது.

இது பாராட்டா அல்லது வேதனையா. இது வாழ்த்தா அல்லது வயிற்றெரிச்சலா.

ஜீஜாபாய்க்கு பய்மாக இருந்தது ருக்மாபாயை கூர்ந்து கவனித்தாள். ''நான் இதைத்தான் பாண்டுரங்கனிடம்



வேண்டிக் கொண்டிருந்தேன். அவரை பிரமிக்க வைக்கின்ற அழகு. அவருக்கு உதவியாக இருக்கின்ற பெண், அவரைப் புரிந்துகொள்கின்ற கெட்டிக்காரி இந்த வீட்டிற்கு வரவேண்டுமென்று விரும்பினேன். நீ அழகாக இருக்கிறாய். கெட்டிக்காரியாகவும் இருப்பாய் என்று இங்கு வ.ந்து வணங்கியதிலிருந்து தெரிந்தது. அவருக்குப் பிடித்த மானவளாக அவரைத் தூக்கிவிடுபவளாகவும் இரு. வீடு தானாக மலர்ந்துவிடும்.''

''உங்கள் உடம்புக்கு என்ன?'' ஜீஜாபாய் மெல்லிய குரலில் கேட்டாள்.

''சாபம். போன ஜென்மத்து சாபம். யார்குடும்பத்தையோ கெடுத்திருக்கிறேன். யார் வாழ்க்கையையோ நாசம் செய்திருக்கிறேன். எந்த புருஷன், மனைவியையோ சந்தோஷமாக இருப்பதை கூடாது என்று தடுத்திருக்கிறேன். நடுவே புகுந்து மூலைக்கொன்றாய் விரட்டியிருக்கிறேன். ஆண் வயிற்றெரிச்சலையும், பெண் வயிற்றெரிச்சலையும் கொட்டிக் கொண்டிருக்கிறேன். அதுதான் இப்படி எவருக்கும் உபயோகம் இல்லாமல் வெறும் சோறு தின்னிப் பண்டாரமாக இருக்கிறேன்.''

''திருமணம் நடந்தபோது நன்றாக இருந்தீர்களா?''

''இருந்தேன். சுமாராக இருந்தேன். இவருக்கேற்ற இணை என்று சொல்ல முடியாது. ஆனால், இவருக்கு நீ இணையாக இருக்கிறாய். உருவம். உயரம் என்று எல்லாவற்றிலும் சரியாக இருக்கிறாய். இவர் நிச்சயம் சந்தோஷமாக இருப்பார் என்று இவரைப் பார்க்கும் பொழுது தெரிகிறது.

உன் அத்தை உன்னைப் பற்றி நிறைய சொல்லி யிருக்கிறாள். என்னிடம்தான் வந்து பேசினாள். ஜீஜாபாய்

மிகவும் நல்லவள் என்று சொன்னாள். மனிதர்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவள் என்றெல்லாம் விவரித்தாள். அவள் சொல்லி ஆறு மாதமாகி விட்டது. எப்பொழுது நீ வருவாய் என்று இந்த ஆறு மாதமாக உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். உன் அத்தை சொன்னதைவிடவும் நீ அழகு. எனக்கு உன்னைப் பிடித் திருக்கிறது. நீ எனக்காக ஒன்றும் சிரமப்பட வேண்டாம். முடிந்தபோது சோறு எடுத்து வை. இல்லை, வேலை யாட்களை அனுப்பு. நான் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன். யாருக்கும் தொந்தரவு செய்யாமல் அமைதி யாகப் போய் விடுவேன். தற்கொலை செய்து கொள்ளலாம் என்று அவ்வப்போது தோன்றும். ஆனால், அது எல்லா வற்றையும்விட கொடிய பாவம். எனவே அமைதியாய் எப்பொழுது ஆண்டவன் அழைக்கிறானோ அதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன்.''

''நீங்கள் சரியாகி விடுவீர்கள்.''

ஜீஜாபாய் அவள் கையை இறுக்கப் பிடித்துக் கொண்டு பேசினாள்

''அவ்வளவு அழுத்தாதே. வலிக்கும். உடம்பில் சக்தியே இல்லை. இநத உடம்பு சரியாகாது. ஆனாலும் என்ன. வேளைக்கு சோறு கிடைத்து, என் புருஷன் சந்தோஷமாக இருக்கிறார் என்றால் எனக்குள் ஒரு நிம்மதி வரும். அந்த நிம்மதியால் யாரையும் தொந்தரவு செய்யாமல், மிக அமைதியாய் இருக்க கற்றுக்கொள்வேன்.''

''உண்மையில் உங்களுடைய உடம்புக்கு என்ன கெடுதல். அதை என்னிடம் சொல்லுங்கள்.''

ஜீஜாபாயிடம் ருக்மாபாய் காதோரம் விவரம் சொன்னாள்.



''அம்மாதிரி கேள்விப்பட்டதே இல்லையே?'' ஜீஜாபாய் விதிர்த்துப் போனாள்.

''அதுதான் சொன்னேனே. இது சாபம். நான் வாங்கி வந்த வரம். யாரையோ துன்புறுத்திவிட்டு இப்பொழுது நான் மாட்டிக் கொண்டு தவிக்கிறேன். உலகத்தில் எந்த பாபம் வேண்டுமானாலும செய்யலாம். கணவனையும், மனைவியையும் பிரித்துப் போடுகின்ற பாபத்தை ஒரு நாளும் செய்யக்கூடாது. இளமையாய் ஆயிரம் கனவுக ளோடு வரும் ஒரு பெண்ணுடைய வேதனையை ஒரு நாளும் கொட்டிக் கொள்ளக் கூடாது. அந்தப் பாபத்தை நான் செய்திருக்கிறேன் என்று எனக்கு சில கனவுகள் உறுதிப் படுத்துகின்றன. விதித்தவரை இருந்துவிட்டு நான் மெல்ல நகர்ந்து விடுவேன். நீ சாப்பிட்டாயா... போய் சாப்பிடு.''

ருக்மாபாய் மெலிந்த குரலில் கூறினாள். ஜீஜாபாய் துள்ளி எழுந்தாள். வீட்டிற்குள் ஓடினாள். பட்சணக் கூடையைப் பிரித்தாள். தட்டு எடுத்து வந்து அதில் எல்லா பட்சணங்களையும் அடுக்கி கொண்டு போய் ருக்மாபாயின் எதிரில் வைத்தாள்.

''இது எங்கள் வீட்டில் செய்தது. நானும் என் அம்மாவும் செய்தோம். சாப்பிட்டுப் பார்த்து சொல்லுங்களேன்.''

இனிப்புப் பூரியும், சுண்டலும். காரம் போட்ட பயறு வகைகளும், வறுத்த கடலையும், அரிசிப் பொரியும், நெற்பொரியும் கலந்து செய்த தின்பண்டங்களுமாய் அவளுக்குக் கொடுக்க, ருக்மாபாய் முகத்தில் பெரிய சந்தோஷம் ஏற்பட்டது.

''இதெல்லாம் நான் சாப்பிடலாமா தெரிய வில்லையே. சிலது சாப்பிட்டால் வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. இனிப்புப் பூரியை மட்டும் எடுத்துக்

கொள்கிறேன்.'' அவள் எடுத்து உடைத்து மெல்ல வாயிலிட்டு சுவைத்து உண்டாள்.

மிகவும் நன்றாக இருக்கிறது என்று பாராட்டினாள்.

ஒருபிடி சுண்டல் எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

''நீ போ. போய் வேலையை கவனி. வந்தவர்களுக்கு சாப்பாடு போடு. உன்னுடைய உறவுக்காரர்கள் வந்திருக் கிறார்களே, அவர்களிடம் நான் பல விஷயங்களை சொல்லி யிருக்கிறேன். என்னைப் பற்றி கவலைப்படாதே. நாம் பிறகு மெல்ல பேசிக் கொள்வோம்.''

ஜீஜாபாய் எழுந்து மறுபயும் ருக்மாபாயை வணங்கி விட்டு வீட்டுக்குள் ஓடினாள்.

வீடு இவளுக்காக காத்துக் கொண்டிருந்தது. வேலை சரியாக இருந்தது. மறுபடியும் கை கழுவி, உணவு முடித்து, வேறு புடவை உடுத்திக் கொண்டு ருக்மாபாய்க்கு அருகே போய் உட்கார்ந்து கொள்ள இரண்டு மணி நேரம் பிடித்தது. மெல்ல இருட்டத் துவங்கியது.

''என்ன இங்கு வந்து உட்கார்ந்து விட்டாய்.'' ருக்மாபாய் தூக்கத்திலிருந்து எழுந்து பேசத் துவங்கினாள்.

''உங்களோடு பேசவேயில்லையே. உங்களைப் பற்றி எதுவும் கேட்கவேயில்லையே.''

''அதெல்லாம் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது அவர் காத்துக் கொண்டிருப்பாரல்லவா. அவரைப் போய் பார்க்க வேண்டாமா. இருட்டி விட்டவுடன் என்னோடு உட்கார்ந்து கொண்டால், அவர் காத்துக் கொண்டிருக்க மாட்டாரா.''

''இல்லை, அவர் கடைக்குப் போயிருக்கிறார்.''

''ஆஹா... வந்தவுடனே கடைக்குப்போய் விட்டாரா. நாளைக்குப் போகக்கூடாதா அந்தக் கடைக்கு.''



''இல்லை. இன்று நாள் நன்றாக இருக்கிறது. நாளை நன்றாக இல்லை.''

''அப்படியா, யார் சொன்னது?'

''வீட்டில் சொல்லி அனுப்பினார்கள். போனவுடனே கடையைத் திறந்து, சிறிது நேரம் உட்கார்ந்திருக்கச் சொன்னார் அப்பா. அவர் அதைச் செய்வதற்காகவே போயிருக்கிறார்.''

''இன்று நாள் நன்றாக இருக்கிறதென்றால், இன்றே எல்லா விஷயங்களையும் வைத்துக் கொள்ளலாமே.'' ருக்மாபாய் சொல்ல, ஜீஜாபாய் தலைகுனிந்து உட்கார்ந் திருந்தாள்.

''இந்த விஷயம் குறித்து நான் ஏதாவது வருத்தப் படுவேன். கோபப்படுவேன, வயிற்றெரிச்சல் படுவேன் என்று யார் சொன்னாலும் நம்பாதே. என் புருஷனுக்கு என்னால் எந்தவித சுகமும் தர முடியவில்லை. தருவதற்கு நீ வந்திருக்கிறாய். நீ மனமுவந்து தர வேண்டும். அவர் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகின்றேன். அவர் அமைதியாக இருந்தால் நாம் செழிப்பாக இருப்போம். அவர் சந்தோஷமாக இருந்தால் நாமெல்லாம் நிச்சயம் சந்தோஷமாக இருப்போம். எனவே துகாராம்ஜியை சந்தோஷப்படுத்துவது மிக முக்கியமான விஷயம். இதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஏனவே நமக்கு நடுவே எவரையும் புகவொட்டாமல் நீயும், நானும் உட்கார்ந்து சகலமும் பேசித் தீர்த்துக் கொள்வோம்.'

''ஆஹா... இதை நான் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன், நீங்களே சொல்கிறீர்கள் அக்கா.''

''அக்கா வேண்டாம். என்னை ருக்மா என்று கூப்பிடு.''

''இல்லையே... நீங்கள் பெரியவரல்லவா.''

''என்னடி உளறுகிறாய். இதில் பெரியவள், சிறியவள் என்று உண்டா. நீயும், நானும் தோழியாக இருந்தால் நீ பெரியவளா, சிறியவளா என்று கேட்டுக் கொண்டிருப் போமா. அப்பொழுது மரியாதையாகப் பேசிக் கொண்டிருப் போமா. வாடி. போடி என்றுதானே பேசுவோம். அதே போல பேசலாம். என்னை ருக்மா வாடி என்று சொல். நான் எழுந்து வர முயற்சிக்கிறேன். நான் உன்னையும் அப்படியே கூப்பிடலாம் அல்லவா. சாதம் போடுடி என்று கூறலாம் அல்லவா.''

''நிச்சயம் கூறலாம். எனக்கு நீங்கள் இங்கே இருப்பது பிடிக்கவேயில்லை.''

''பிறகு வேறு எங்கேயிருக்க வேண்டும்.''

''முதல் கட்டு அறையில், அங்குள்ள கூடத்திற்கு பக்கத்திலுள்ள பெரிய அறையில் இருங்கள்.''

''அது விருந்தினர்கள் தங்குவதற்காக வைக்கப் பட்டிருக்கிறது.''

''விருந்தினர்கள் பின்னால் தங்கட்டும். நீங்கள் இந்த வீட்டிற்கு சொந்தக்காரி. இந்த வீட்டினுடைய தலைவி. நீங்கள் இப்படி கொல்லைப்புறத்தில் இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை.''

''இப்படி ஓரமாக இருப்பதே எனக்கு சௌகரியமாக இருக்கிறது. நான் எப்பொழுதும் தூங்கிக் கொண்டே இருக்கிறேனே ஜீஜாபாய். அதைப் புரிந்துகொள்.''

''நன்றாகத் தூங்குங்கள். கவலையே இல்லை. அதற்காக கொல்லைப்புறத்தில் வந்து படுத்துக் கொள்ள வேண்டுமா. முதல் அறையில் சௌகரியமாக காற்றோட்ட மாகப் படுத்துக் கொள்ளுங்கள்.''



''அதை பிற்பாடு மாற்றிக் கொள்ளலாம்.''

''இல்லை. இப்போது, இப்போதே மாற்றிக் கொள்ளப் போகிறீர்கள். நீங்கள் மெல்ல எழுந்து என் தோளைப் பிடித்துக் கொள்ளுங்கள். என்ன... இன்று நாள் நன்றாக இருக்கிறது. நீங்கள் மாறுகிறீர்கள்.''

''இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாமே.''

''இல்லை. இது மிக நாள். நீங்கள் நிச்சயம் மாற வேண்டும். நீங்கள் இன்று இப்பொழுது மாறினால் உங்கள் உடம்பு நன்றாகி விடும் என்று எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. நல்ல நாளை தட்டிக் கழிக்க வேண்டாம். என் பேச்சை மறுக்க வேண்டாம், வாருங்கள்.''

ஜீஜாபாய், ருக்மாபாயை தூக்கி நிறுத்தினாள். இடுப்புப் புடைவையைக் கட்டினாள். தோளைப் பிடித்துக் கொள்ளச் சொன்னாள். இன்னொரு கையைப் பிடித்துக் கொண்டு குனிந்து வரும் ருக்மாபாயை அழைத்துக் கொண்டு முன் கட்டுக்கு வந்தாள். அங்குள்ள கட்டிலில் உட்கார வைத்தாள். மறுபடியும் பின்கட்டுக்கு ஓடி அவள் சாமான்களை வாரி உதறி தலையணையை மட்டும் போட்டு விட்டு மற்றவைகளைதுவைப்பதற்குப் போட்டு பக்கத்தில் சுத்தமான குடிநீரும், மருந்துக் குப்பிகளையும் அடுக்கி வைத்தாள்.

''உங்களுக்குத் தேவை நல்ல சாப்பாடு. பத்து நாளில் நீங்களாகவே நடக்க நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொன்னாள்.

அயர்ச்சியாய் சுருண்டு படுத்த ருக்மாபாயின் தலையைத் தடவியபடி 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா...' என்று பாடினாள்.

அவள் தூங்கியதும் எழுந்து கை கழுவி, கால் கழுவி, முகம் கழுவி மறுபடியும் பொட்டிட்டுக் கொண்டு புருஷன் இருந்த எதிர்ப்பக்க அறைக் கதவைத் திறந்தாள்.

புருஷன் அங்கு காசு எண்ணிக் கொண்டிருந்தான். அவள் வந்ததும் நிமிர்ந்து பார்த்தான். சிரித்தான்.

''இங்கு வா, வந்து உட்கார்.'' கட்டிலை தட்டிக் காண்பித்தான்.

இனிப்பும் பால் சொம்புமாய் அவனுக்கருகே போய் ஜீஜாபாய் உட்கார்ந்து கொண்டாள்.

அவர்கள் சந்தோஷமாக சாப்பிட்டார்கள். அயர்ந்து தூங்கினார்கள்.

இரண்டு நாள் கழித்து ஜீஜாபாயின் உறவுகள் சந்தோஷத்துடன் விடை பெற்றுக் கொண்டன.

''நிஜமாகவே உன் அத்தை கெட்டிக்காரி. மிக நல்ல வரனை உனக்குக் கொடுத்திருக்கிறாள். அக்கம் பக்கம் பலரோடும் பேசிப் பார்த்தோம். உன் புருஷனைப் பற்றி மிக உயர்வாக சொல்கிறார்கள். உன் புருஷனுடைய அண்ணியை தேவதை என்று புகழ்கிறார்கள். ருக்மாபாய் மட்டும் கொஞ்சம் சிடுசிடுப்பாக பேசுவாள் போலிருக்கிறது, அவளை மட்டும் நீ சமாளித்தால் போதும். மாமியார். மாமனார் பிடுங்கல் எல்லாம் இல்லை. துகாராமின் அண்ணன் மிக நல்லவர். ஆனால், சாமர்த்தியம் போதாது. நான் கடையைப் பார்த்துக் கொள்கிறேன். ஜீஜாபாய் வீட்டைப் பார்த்துக் கொள்ளட்டும் என்று அண்ணி சொல்கிறார். பத்துப் பன்னிரண்டு பேர் புழங்கிய உன் வீட்டையே நீ பார்த்துக் கொண்டாயே இதைப் பார்த்துக் கொள்வதா உனக்குக் கஷ்டம். நிறைய ஓய்வு நேரம் கிடைக்கும். புருஷனுக்குத் துணையாகவே இருந்து விட்டால் இந்தக் குடும்பம் மேலே வந்து விடும். நீ சந்தோஷமாய் இருக்கிறாய் என்று உன் தகப்பனாருக்குப் போய் சொல்வேன். மிக நல்ல குடும்பம் என்று அவர்களுக்கு விளக்குவேன். அவர்கள் நிம்மதியாவார்கள், சீக்கிரமாய் குழந்தை பெற்றுக் கொள். அதில் எந்த தாமதமும் செய்து விடாதே.''



நிறைய புத்திமதிகள் சொல்லிவிட்டுப் போனார்கள்.

துகாராம் ஊர் எல்லைவரை அவர்களை அழைத்துக் கொண்டு போய் விடை கொடுத்தான். கூடவே ஜீஜாபாயும் போனாள்.

ஊரில் துகாராமிற்கு இருக்கும் மதிப்பை அவளால் உணர முடிந்தது.

இரண்டு நாள் கழித்து கடைக்கு அழைத்துப் போனான்.

பலசரக்குக் கடை. வாங்கி விற்கிற விஷயம். எவையெல்லாம் விற்கும் என்று தோன்றுகிறதோ, அவற்றையெல்லாம் சந்தையிலிருந்து வாங்கி வந்து இந்த கிராமத்தில் விற்கிறார்கள்.

காய்கறிகள், கீரைகள், தானியங்கள், எண்ணெய் வகைகள், தாம்புக்கயிறு, கூடை, முறம், பித்தனைப் பாத்திரம், வெங்கல விளக்கு, பல்வலி மருந்து, தலைவலித் தைலம், வெட்டுக்கத்தி, சவரக்கத்தி, கடப்பாரை, மண்வெட்டி என்று ஏதேதோ விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா நேரமும் எல்லாமும் கிடைக்கின்ற கடையாக அந்தக் கடை இருந்தது.

பகல் நேரம் முழுவதும் அண்ணி இருந்தாள், இரவு அண்ணன் அங்கேயே படுத்துக் கொண்டார். யாரேனும் கதவு தட்டி ஏதேனும் கேட்டால் உடனே கடையைத் திறந்து வியாபாரம் செய்வார்.

துகாராமுக்கு சாமான்களை வாங்கி வருகின்ற பொறுப்பு இருந்தது, அனேகமாய் ஒரு நாள் பயணமோ சில

சமயம் இரண்டு நாள் பயணமோ இருக்கும். தொலை தூரம் போய் ஏதேனும் வாங்கி வந்து கொண்டேயிருக்க வேண்டும். வாங்குவதை அவர்கள் காசு கொடுத்து வாங்கினார்கள். விற்பதை கடனுக்கு விற்றார்கள். மெல்ல... மெல்ல... வசூலித்துக் கொண்டார்கள். ஒரு மாதிரியாய் லாபம் வந்தது. ஆனால், அண்ணிக்கு இதில் திருப்தியில்லை.

கோதுமை விற்பதைவிட கோதுமை மாவு விற்பது நல்லது என்று எண்ணினாள். வெல்லத்தை விற்பதைவிட வெல்லத்தில் தின்பண்டம் செய்து விற்பதே சரியென்று சொன்னாள்.

இதற்கு உழைப்பதற்கு ஆள் வேண்டும். இந்த வீட்டில் அவளைத் தவிர அதற்கு ஆளில்லை. தானே செய்து, தானே விற்க வேண்டுமா என்று அயர்ந்துபோய் அவள் அந்த முயற்சியில் இறங்கவில்லை. இப்பொழுது ஜீஜாபாய் வந்தவுடன் அவளிடம் அதுபற்றிப் பேசினாள்.

ஜீஜாபாய் எல்லா உதவியும் செய்வதாக ஒத்துக் கொள்ள, அண்ணி உற்சாகமானாள்.

இரண்டு வகையாக தின்பண்டங்களை பிரிக்கலாம் வெகு நாள் கெடாத தின்பண்டம். அன்றே விற்றாக வேண்டிய தின்பண்டம் என்று செய்யலாம். அன்றே விற்றாக வேண்டிய தின்பண்டத்தை குறைவாகவும், வெகு நாள் ஜீராவில் ஊறிக் கிடக்கும் தின்பண்டத்தை அதிகமாகவும் செய்யலாம் என்று சொல்லி அவர்கள் பட்சணக் கடையை ஆரம்பித்தார்கள்.

தலைமுடி வளர தைலம் தயாரிக்க முடியுமென்று ஜீஜாபாய் சொல்ல, பெரும் கொப்பரை நிறைய எண்ணெயைக் காய்ச்சி, செம்பருத்தி இலைகளையும் பூக்களையும் போட்டு, வேறு சில மூலிகைகளைக் கலந்து





வாசனை ஏற்றி, மண் ஜாடியில் நிரப்பி வைத்துக் கொண்டார்கள். வாசனையினாலும், குளுமையினாலும் கவரப்பட்டு ஆண்களும் அதை வாங்க, ஒரு கொப்பரை எண்ணெய் ஒரே வாரத்தில் விற்றுப் போயிற்று. நல்ல லாபம் கிடைத்தது.

அண்ணிக்கு மிகுந்த சந்தோஷம். சின்னப் பெண் போல் குதித்தாள் நடனம் ஆடினாள். ஜீஜாபாயைக் கட்டிக் கொண்டாள். ருக்மாபாயிடம் போய் ஜீஜாபாயை பற்றி பெருமையாகப் பேசினாள். துகாராமைப் பாராட்டினாள்.

''வேறு என்ன விற்கலாம், சொல்?'' என்று ஜீஜாபாயிடம் துகாராம் கேட்டான்.

''வியாபாரத்திற்கு துணிகளைப் போல உத்தமமான விஷயம் எதுவுமில்லை. துணிகள் உபயோகம் எப்பொழுதும் மனிதர்களிடையே இருந்து கொண்டேயிருக்கிறது. துணிகளை வாங்கி வைத்தால் அது அழுகிப் போகாது. கவனமாக, பத்திரமாக பெட்டியில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். அவ்வப்போது எடுத்து உதறி மடித்து வைக்கவேணடும். புடைவைகளையும், வேட்டிகளையும், மேல்துண்டுகளையும், சால்வைகளையும், போர்வைகளையும், துடைக்கும் துண்டுகளையும் தெற்கே கர்நாடகத்திலிருந்து வாங்கி வாருங்கள். அங்கு திறமை மிக்க சேணியர்கள் இருக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக நெசவுத் தொழில் செய்கிறவர்கள் வாழ்ந்து வருகிற இடம் அது. அங்கு போய் வர சற்று நாள் ஆகும், ஆனாலும் நல்ல லாபம் கிடைக்கும்'' என்று ஜீஜாபாய் விவரிக்க, துகாராம் அதைப் பற்றி பலரிடம் கேட்டு விவரம் தெரிந்து கொண்டு நீண்ட பயணத்திற்கு ஆயத்தமானான்.

வீடு அவனை சந்தோஷமாக விடை கொடுத்து அனுப்பியது. ருக்மாபாய் வாசல் வரை வந்து அவனை

வழியனுப்பினாள். நெற்றிற்கு திலகமிட்டாள். அது துகாராமிற்கு சந்தோஷமாக இருந்தது.

''உனக்கு ஜீஜாபாயை பிடித்திருக்கிறதா?'' என்று அவள் காதோரம் கேட்க, ''மிகவும் பிடித்திருக்கிறது. மிக நல்லவளாக இருக்கிறாள்'' என்று ருக்மாபாய் பதில் சொன்னாள்.

அந்த வருடம் அவர்களுக்கு துணி வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தது.

கடையை அவர்கள் பெரிதாக்கினார்கள். வர்ணம் அடித்தார்கள். நல்ல கதவுகள் போட்டார்கள். வீட்டின் முன் பக்கத்திலும் சரிசெய்து சுவருக்கு வர்ணம் பூசி, மேஜை நாற்காலி வாங்கிப் போட்டார்கள்.

பணம் வைக்க உறுதியான பெட்டிகளை செய்து கொண்டார்கள்.

ஜீஜாபாய் உண்டானாள். முதலில் இதைப் போய் ருக்மாபாயிடம்தான் தெரிவித்தாள். ருக்மாபாய் அவள் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்து உனக்குப் பாண்டுரங்கன் பிறக்கட்டும் என்று வாழ்த்தினாள்.

அண்ணி அணைத்துக் கொண்டாள்,

''போ, போய் வீட்டில் சிறிது காலம் இருந்துவிட்டு வா'' என்று சொன்னாள்.

''நான் எப்படிப் போக முடியும், அதுவும் வீட்டையும் ருக்மாபாயையும் விட்டுவிட்டு. வீட்டைக் கூட நீங்கள் கவனித்துக் கொள்வீர்கள். ருக்மாபாயை யாராவது கவனித்துக் கொள்ள வேண்டாமா. இப்பொழுதுதான் ஓரளவு உடம்பு தேறி வாசல் வரை அவரால் நடக்க முடிகிறது. பார்த்துப் பார்த்து உணவு கொடுத்தால், வேளா



வேளைக்கு மருந்து கொடுத்தால் அவரும் நல்லபடி உற்சாகமாய் வேலை செய்ய ஆரம்பித்து விடுவார். இந்த நேரத்தில் நான் இந்த இடத்தை விட்டுப் போவது சரியில்லை.''

ஜீஜாபாய் அடக்கமாய் மறுத்தாள்.

''என்ன முட்டாள்தனம். பிள்ளைப்பேறுக்கு பெற்றவர் வீட்டுக்கு போகமாட்டேன் என்று எந்தப் பெண்ணாவது சொல்வாளா. இங்கு உன்னை யார் கவனித்துக் கொள்வார்.

''பாண்டுரங்கன், என் புருஷன், நீங்கள். அது தவிர அக்கம் பக்கத்து நண்பர்கள் கவனித்துக்கொள்வார்கள். என்னை வற்புறுத்தாதீர்கள். நான் பிள்ளைப்பேறுக்கு வெகு நிச்சயமாய் என் ஊருக்குப் போகப் போவதில்லை.''

''அப்படியானால் ஒன்று செய்...''

அண்ணி இடுப்பில் கை வைத்துக் கொண்டு பேசினாள்.

''உன் பெற்றோரை இங்கு வரவழைத்து விடு.''

''அவர்களுக்கு அங்கு ஆயிரம் வேலை இருக்கிறதே.'

''உன் அம்மாவையாவது வரச் சொல்லேன். மாட்டேன் என்று எந்தத் தாயும் சொல்ல மாட்டாள்.''

'எனக்கு இப்போதைக்கு தாய் நீங்கள்தான். நீங்கள் என்னைக் கவனித்துக் கொள்ள மாட்டீர்களா.''

ஜீஜாபாய் விழிவிரியக் கேட்க, அண்ணி அருகே போய் அவளை அணைத்துக் கொண்டாள்.

''நான் என்ன செய்தாலும் உன் தாய் செய்வது போல் ஆகாது. நீ மனதைத் திடப்படுத்திக் கொண்டு இந்த

வீட்டிற்காக உழைக்கலாம். உன் தாய்க்கு உனக்கு செய்ய வேண்டுமென்ற ஆசை இருக்குமல்லவா. உனக்கு சோறு பொங்கிப் போட வேண்டும். உன் கால்களுக்கு வெந்நீர் விட்டுக் கழுவிவிட வேண்டும். உனக்கு குளிப்பாட்டி விட வேண்டுமென்று ஆவல் இருக்குமல்லவா. பேரக் குழந்தையை அள்ளியெடுத்து முதன்முதலாய் தான்தான் முத்தம் கொடுக்க வேண்டுமென்று ஒரு அம்மாவுக்கு ஆசை இருக்குமல்லவா. எவ்வளவு பெரிய சந்தோஷம். அந்த சந்தோஷத்தை நீயும், நானும் கெடுப்பானேன். ஆள் அனுப்பு. அம்மாவை, அப்பாவையோ வரச்சொல். இருவர் வந்தாலும் இந்த வீடு தாங்கும். கவலையில்லை.''

அவள் வீட்டிற்கு ஆள் அனுப்பினாள். பெற்றவர்கள் வீட்டிற்குப் போகாத ஜீஜாபாயைப் பார்த்து ஊர் ஆச்சரியப் பட்டது.

மகளின் பிள்ளைப்பேறுக்கு எல்லா உபகரணங் களுடன்தாய் வந்திருந்தாள். வீட்டின் நிர்வாகத்தில் அவளும் பங்கு போட்டுக் கொண்டாள். சமையல் மொத்தமும் அவள் கைக்குப் போயிற்று. அவளும் ருக்மாபாயைப் பார்த்து வேதனைப்பட்டு மிக ஆறுதலாகப் பேசினாள். அவளும் கவனித்துக் கொண்டாள்.

ஜீஜாபாயிக்கு மிக அழகான ஆண்குழந்தை பிறந்தது.

வணிக குலத் தலைவனே வா. மொரா இனத்தின் முதல்வனே வா. இந்த வீட்டின் விடிவிளக்கே வா. குழந்தையை எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்றனர். கொஞ்சி சீராட்டினர்.

ருக்மாபாய் குழந்தையை தனக்கு அருகில் போட்டுக் கொண்டு இடைவிடாது பாட்டுப் பாடினாள். ஆட்டம் காண்பித்தாள். அழுதபோது ஜீஜாபாயிக்கு குரல் கொடுத்து பால் கொடுக்கச் சொன்னாள்.



குழந்தை நன்கு வளர்ந்தவுடன், ஜீஜாபாயின் தாய் விடை பெற்றுக் கொண்டு அவள் ஊருக்குப் போனாள். மறுபடியும் வீட்டு நிர்வாகம் ஜீஜாபாயின் கைக்கு வந்தது.

''பாருங்கள். அண்ணியார் கடையில் கஷ்டப் படுகிறார்கள். எனக்கு ருக்மாபாயை கவனிக்க வேண்டிய வேலையும் இருக்கிறது. இதற்கு மேல் குழந்தைகள் பெற்றுக் கொள்வது என்பது என்னால் முடியாத காரியம். எனவே இந்த ஒரு குழந்தை நமக்குப் போதும். நான் மலடியல்ல, நீங்கள் நல்ல ஆண்மகன் என்று உலகிற்கு நிரூபித்து விட்டோம். தாய், தந்தையராய் ஆகிவிட்டோம். நான் பிள்ளை பெற்றதில் என்னைவிட ருக்மாபாயிக்குதான் மிக சந்தோஷம். எந்நேரமும் குழந்தை பற்றிதான் அவளுக்கு நினைப்பு. பாண்டுரங்கன் எல்லாவற்றையும் இந்த வீட்டில் அளந்துதான் வைத்திருக்கிறான். வாழ்க்கையில் எந்த நம்பிக்கையும் இல்லாத ருக்மாபாயிக்கு என் பிள்ளை மிக அவசியம். அதற்காக ஆறு குழந்தைகள், ஏழு குழந்தைகள் பெற்றுக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் கடையிலேயே படுத்துக் கொள்ளுங்கள். அது உங்களுக்கும் நல்லது. எனக்கும் நல்லது. வீட்டுக்கும் நல்லது. நான் சொல்வது புரிகிறதல்லவா?''

மனைவியின் அன்புக்கட்டளைக்கு துகாராம் கீழ்ப்படிந்தான்.

இருபது வயதான அந்த இளைஞன் தன் மனதை முற்றிலுமாய் பாண்டுரங்கன் மீது திருப்பினான்.

''துகாராம், உன் குழந்தை உன் அப்பாவையே உரித்து வைத்திருக்கிறான். உங்கள் வம்சத்து முகம் தெள்ளத் தெளிவாக குழந்தையின் மீது இருக்கிறது. உன் அப்பாதான் மறுபடியும் உனக்கு மகனாகப் பிறந்திருக்கிறார். இந்தக்

குழந்தை பிறந்த வேளை நீ மிக உன்னதமான இடத்திற்குப் போகப் போகிறாய்.''

''என்ன உன்னதமான நிலைமை. வரவர வியாபாரம் நடத்துவது மிகக் கடினமாக இருக்கிறது. எவ்வளவு தொலைவு போனாலும் எந்த சரக்கும் கிடைப்பதில்லை.

வடக்கே மராட்டியத்தில் கடும் பஞ்சம் தெற்கே கர்நாடகத்தில் கடும் மழை. கிழக்கே மொகலாயர்கள் தொந்தரவு மிக அதிகமாக இருக்கிறது. இனி தொடர்ந்து வியாபாரம் செய்ய முடியுமா என்றே தெரியவில்லை. வெளியூருக்குப் போகும் பொழுதே வயிறு கலங்குகிறது. நல்லபடியாக வீட்டிற்குப் போக வேண்டுமே என்று கலவரம் ஏற்படுகிறது. வழிப்பறிக் கொள்ளைகளும் அதிகம். மொகலாயர்கள் கெடுபிடி, வழிப்பறி கொள்ளையை விட மிக மோசமாக இருக்கிறது.

இதில் வணிகர் என்றால் அவர்களுக்கு கொண்டாட்டம். 'இன்னுமா நீ மதம் மாறாமல் இருக்கிறாய்' என்று பிரம்பால் அடிக்காமல் அவர்கள் விடுவதேயில்லை.

நமக்கு ஒரு வரி, மொகலாயர்களுக்கு ஒரு வரி. மொகலாயர்களுக்கு ஒரு பங்கு என்றால் நமக்கு மூன்று பங்கு வரி கட்டச் சொல்கிறார்கள். இல்லையெனில் பொருட்களை அடித்துப் பிடுங்கிக் கொள்கிறார்கள். மாட்டுவண்டியை ஓட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள்.

போன வருடம் போல் இந்த வருடம் இல்லை. அதற்கு முந்தைய வருடம் இருந்த செழிப்பு அறவேயில்லை. இனி அடுத்து வரும் காலங்கள் மிகக் கவலையாக இருக்கிறது.''

துகாராம் கவலையோடு பேசினான்.

அவன் கவலைப்பட்டதைப் போல, பஞ்சம் உச்ச கட்டத்தை அடைந்தது. அவன் இருந்த ஊருக்கும் பரவியது.



தென்மேற்குப் பருவ மழையில் ஏரி, குளங்களெல்லாம் நிரம்புகின்ற இடம் அது. தென்மேற்குப் பருவ மழை தாண்டி மாதாமாதம் நல்ல மழை பெய்கின்ற பிரதேசம் அது. தண்ணீர் கஷ்டம் என்ற வார்த்தையை அந்த ஊர் மக்கள் அனுபவித்ததேயில்லை. ஆனால், அம்முறை மழை பொய்த்தது.

அந்நியர்கள் வருகையில் குலப் பெண்கள் வேதனைப் பட்டார்கள். கண்ணீர் விட்டுக் கதறினார்கள். பெண்கள் கதறி அழும் தேசத்தில் நல்ல மழை நிச்சயம் பெய்யாது. விவசாயிகளிடம் காசு இல்லை. தானியங்கள் பதுக்கப் பட்டன. மாடுகள் உணவின்றியும், நீரின்றியும் விழுந்து செத்தன. இறந்துபோன மாடுகளால் அங்கே ஊர் முழுவதும் தொற்றுநோய் பரவிற்று. ஜனங்கள் கடுமையாக பாதிக்கப் பட்டார்கள். மருந்துகளும் கிடைக்கவில்லை. அதுவும் பதுக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்பட்டது.

ஆனால், துகாராம் அவ்விதம் விற்கவில்லை. தான் கொள்முதல் செய்த பொருட்களை என்ன விலைக்கு வாங்கினானோ அதைவிட மிகச் சிறிய லாபம் வைத்தே ஊர் மக்களுக்கு விற்றான். பொருள் ஒன்றும் வேண்டாம். கொஞ்சம் காசு கொடுங்கள் என்று கேட்டவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டான். நோய் தீர்க்க மருந்து வாங்க உடனடியாகக் காசு கொடுத்தான்

ஆனால், ஒரு வாரத்தில் காசு திருப்பித் தருகிறேன் என்று சொன்னவர்கள் ஊர் விட்டுப் போனார்கள். மடக்கிக் கேட்டபோது கடன் பத்திரத்தைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''என்னிடம் கொடுப்பதற்கு எதுவுமே இல்லை. என்னை விட்டு விடு'' என்று உதறிவிட்டு நடந்தார்கள்.

துகாராம் இதமான வார்த்தைகளால் தடுத்துப் பார்த்தான். மறித்துப் பார்த்தான். ஆனால், ஜனங்களுக்கு இருந்த வறுமை, மரணம் பற்றிய பயம் அவர்களை மிருகத்தனமாக நடக்க வைத்தது.

துகாராம் வெளியூரிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கி வந்த மருந்துகளை ஏழைகளுக்கு இலவசமாக கொடுக்க ஆரம்பித்தான். நாலைந்து பேருக்கு துகாராம் இலவசமாக கொடுக்கிறான் என்றதும் வெளியூரிலிருந்து பல பேர் ஓடி வந்தார்கள்.

''காசில்லை ஐயா, தயவுசெய்து கடனாகக் கொடுங்கள்'' என்றெல்லாம் கேட்டார்கள்.

''ஜுரம் எனக்கு மட்டுமல்ல. என் மனைவிக்கு, என் மகளுக்கு. எனவே ஒரு நான்கைந்து பேருக்கு ஆகும்படியாய் மருந்து கொடுத்தால் மிக்க நன்றியாக இருக்கும். உங்கள் கால்களை பாண்டுரங்கன் கால்களாக தொட்டுக் கேட்கிறேன். தயவு செய்து மருந்து கொடுங்கள். இல்லை என்று சொல்லி விடாதீர்கள். என்னிடம் காசு இருந்தால் தர மாட்டேனா. எத்தனை காசு புழங்கிய கை தெரியுமா இது'' என்று அழுதபடி கூறினார்கள்.

துகாராம் மனம் இளகினான். மருந்தை இலவசமாகக் கொடுத்தான்.

அண்ணி இதைக் கேள்விப்பட்டு, ''என்ன அநியாயம் இது'' என்று குமுறினாள். ''அவன் மறுபடியும் இந்தக் கடைக்கு வரட்டும். என்ன செய்கிறேன் பார். இனி யார் கேட்டாலும் மருந்து இலவசமில்லை. காசுக்குதான் மருந்து என்று சொல்லி விடு'' என்று உரக்கக் கத்தினாள்.

''அதை எப்படிச் செய்ய முடியும் அண்ணி. யாரோ ஒருவர் தவறு செய்தார் என்பதற்காக எல்லோரையும் தவறு



செய்கிறவர்கள் என்று எண்ணிவிட முடியுமா. உண்மையான ஏழைகள் என்ன செய்வார்கள். இந்த மருந்து இல்லாமல் யாரோ ஒருவர் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டால் என்னால் தாங்க முடியாது. என்னை ஒருவன் ஏமாற்றினான் என்பதை எளிமையாக சகித்துக் கொள்கிறேன். ஆனால், என்னால் ஒருவன் இறந்தான் என்றால் என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது. மருந்து இலவசமாகக் கொடுப்பதை நாம் தர்மமாகவே வைத்துக் கொள்ளுவோம்.''

''தர்மம் செய்வதற்கு எனக்கு மட்டும் கசக்கிறதா. இல்லை ஆசைதான் இல்லையா. வருமானம் வந்தால் அல்லவா தருமம் செய்வதற்கு? தானியம் வாங்கப் போனால் இல்லை என்று சொல்லி விடுகிறான். நம்மிடம் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. விற்பதற்கு முடியவில்லை. வாங்குவதற்கு ஆளில்லை. மரச்சாமான்களும் வெங்கலக் குத்துவிளக்குகளும், மாடு கட்டும் கயிறுகளும், மண் வெட்டிகளும் மிகக் குறைவாக விற்றால்கூட வாங்க மறுக்கிறார்கள்''

''ஆமாம் அண்ணி. விவசாயம் சுத்தமாக இல்லாத போது, இம்மாதிரியான விஷயங்கள் விற்காதே. பசிக்கு தானியங்கள்தான் தேடுவார்கள். மறுபடி எங்கேனும் போய் அதிக விலை கொடுத்தாவது வாங்கி வருகிறேன்.''

துகாராம் அதிக விலை கொடுத்து தானியங்கள் வாங்கி வந்தான். துகாராம் கடைக்கு தானியங்கள் வந்திருப்பது தெரிந்ததும் ஜனங்கள் சுற்றி நின்று கதறினார்கள். துகாராமிடம் கடன் கேட்டார்கள்.

துகாராம் முடியாது என்று சொல்ல வீட்டுவாசலுக்கு போக தொடர்ந்து வந்தார்கள். அவன் எங்கு போனாலும் பின்னால் போய் அழுதார்கள். ஒரு பிடி, ஒரு பிடி கொடு.

இல்லையெனில், செத்துப்போவேன்'' என்று உரக்கக் கத்தினார்கள்.

''இதோ பார், என் குழந்தையை. பசியால் துடிக்கிறான். இவன் செத்துப்போவது உனக்கு இஷ்டமா. ஒருவேளை கஞ்சி கொடுத்தால் இவன் உயிர் பிழைத்துக் கொள்வான். எனக்கு இலவசமாக கொடுக்க மாட்டாயா'' என்று கதறினார் ஒருவர்.

அவருக்கு மட்டும் இலவசமாக துகாராம் கொடுக்க, எல்லோருமே அழத் துவங்கினார்கள். எல்லோருமே கை நீட்டினார்கள், எல்லோருமே வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதார்கள்.

வீட்டிலிருந்து அண்ணி வருவதற்குள் அதிக விலை கொடுத்து வாங்கி வந்த இரண்டு கூடை தானியங்களையும் கடனுக்கு என்று விற்கப்பட்டு விட்டன. காசு கொடுத்து ஒருவர் கூட வாங்கவில்லை.

''இப்படிச் செய்து விட்டீர்களே...'' என்று அண்ணி மைத்துனனை நொந்து கொண்டாள்.

''வேறு என்ன செய்வது அண்ணி. ஒரு குழந்தை செத்து விடும் என்று சொல்கிறான். என்னால் சும்மா இருக்க முடியவில்லை. ஒரு பிடி அரிசி கொடு என்று கேட்கிறான். பிச்சைப்போடுவது போல் ஒரு பிடி அரிசி போடு என்று கேட்டார்கள். அனேகமாய் அத்தனை பேரும் அப்படித்தான் கேட்டார்கள். நானும் ஏழைதான், நானும் ஏழைதான் என்று எல்லோரும் கதறினார்கள். அண்ணி இது பஞ்சகாலம், என்னால் மௌனமாக இருக்க முடியவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள்.''

''ருக்மாபாயின் நகைகள் இருக்கின்றன. ஜீஜாபாயிட மும் நகைகள் இருக்கின்றன. அவைகளை விற்று மறுபடியும்



வியாபாரத்தில் போடலாம். கவலைப்படாதீர்கள். தானியத்திற்கு மவுசு இருக்கும் காலத்தில் தங்கத்திற்கு எந்த மரியாதையும் இருக்காது. ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய நகை ஐம்பது ரூபாய்க்கு அடகு போயிற்று. அந்தக் காசும் வியாபாரத்தில் போடப்பட்டன. தானியம் விற்று அல்லது மரச்சாமான்கள் விற்று சம்பாதிக்க முடியாது. இந்தக் காலத்திற்குரிய ஒரு வியாபாரத்தைச் செய்வோம். உணவுப் பண்டம் தயார் செய்து ரொட்டியும், சப்ஜியும் பொட்டலம் போட்டு விற்போம். வெல்ல பணியாரங்கள் விற்போம்'' என்று அண்ணி சொல்ல, வீட்டிலுள்ள எல்லோரும் ஆமோதித்தார்கள்.

ஜீஜாபாய் பணியாரங்களைச் செய்ய ஆரம்பித்தாள்.

அண்ணி ரொட்டியிட்டாள். கூடையில் வைத்து ஜீஜாபாயும், அண்ணியும் ரொட்டி வியாபாரத்தை துவக்கினர்.

இந்த முறை சோதனை வேறு உருவில் வந்தது.

மறைந்திருந்து தாக்கும் மராட்டிய வீரர்களை ஒட்டு மொத்தமாய் நாசம் செய்ய மிகப் பெரிய மொகலாயப் படை தேசத்தின் நாலா பக்கமும் அனுப்பப்பட்டது. அப்படித் திரிந்த ஒரு மொகலாயப் படை இவர்கள் ஊருக்கு வந்தது. இவர்கள் கடை வாசலில் நின்று 'ரொட்டி விற்கப்படும்' என்ற பலகையைப் பார்த்தது. உள்ளுக்குள் வந்தது.

''யார் இங்கு ரொட்டி விற்கிறார்கள்?'' என்று அதிகாரமாய் கேட்டது. எழுந்து பதில் சொல்லும் முன்பு பளீர் என்று துகாராமை அறைந்தது. அறைந்ததும் ரொட்டிக் கூடையையும், உருளைக்கிழங்கு பொரியலையும், வெல்லப் பணியாரத்தையும் வாரி எடுத்துக் கொண்டது. கோவேறுக் கழுதைகளின் மீது இறுக்கக் கட்டி எடுத்துக் கொண்டு போனது.

துகாராம் கை நீட்டி வழி மறித்தான்.

''ஐயா! ஏதேனும் காசு கொடுத்துவிட்டுப் போங்கள்'' என்று கதறினான்.

பளிச்சென்று இரண்டு முறை சவுக்கடி விழுந்தது. மீண்டும் கன்னத்தில் அறையப்பட்டான். பெண்கள் கூக்குரலிடும்போது அவர்கள் மீது வீரர்கள் பாயத் தயாரானார்கள். பெண்கள் ஓடி ஒளிய, வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அங்குள்ளவர்கள் துகாராமை விலக்கி அழைத்துப் போனார்கள்.

''பெட்டியோடு போயிற்று என்று நினைத்துக்கொள். உன் அண்ணியின் கற்பு போயிருந்தால், உன் மனைவியின் மானம் போயிருந்தால், உன் உயிர் போயிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும். நீ உயிரோடு இருப்பதே பாண்டுரங்கன் தந்த பிச்சை, ரொட்டிப் போனால் என்ன, விடு'' என்று ஆறுதல் சொன்னார்கள்.

''நான் ஒரு பிடி அரிசி கேட்டால் இந்த துகாராம் தர மாட்டான். மேலும் கீழும் பார்ப்பான். அவள் அண்ணி பெரிய ராட்சசி. ஒரு பருக்கை கூட தரமாட்டாள். இதோ பார் ஒரு கூடை ரொட்டி, பாத்திரம் நிறைய சப்ஜி, மூணு கூடை வெல்லப் பணியாரம் எல்லாம் வாரி எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். நமக்குத் தரமாட்டேன் என்று சொன்ன பாபம் அவனை எப்படி ஆட்டி வைத்திருக்கிறது பார்த்தாயா?''

ஊர் இந்த விஷயத்தை சந்தோஷமாய் பேசிக் கொண்டது.

துகாராம் மனம் நொந்தான்.

'ஏன் இப்படி நடக்கிறது... ஏன் இப்படி நடக்கிறது' என்று வேதனைப்பட்டான்.



அந்த வீடு இரவு முழுவதும் தூங்காமல் புரண்டு புரண்டு தவித்தது.

இனி என்ன செய்வது என்று விவரம் புரியாமல் முழித்தது

''இனி வியாபாரமே செய்ய வேண்டாம் நாணயமாக மக்கள் இருக்கும் பொழுதுதான் வியாபாரம் என்பதற்கு அர்த்தமாகும். மக்கள் கூட்டம் நாணயம் கெட்டு ஆடுகிற போது, வெட்கம் கெட்டு கொள்ளையடிக்கிற பொழுது கத்தி முனையில் எல்லாவற்றையும் சாதிக்கிற பொழுது வியாபாரம் என்ற விஷயத்தை எவன் செய்ய முடியும்? நாம் சும்மாயிருப்போம்.''

- அண்ணி உரக்கக் கத்தினாள்.

''அப்பொழுது உணவுக்கு என்ன செய்வது?''

''பட்டினி கிடப்போம்.''

''எத்தனை நாள்?''

''சாகும் வரை'' - அண்ணி மறுபடியும் கத்தினாள். சுருண்டு படுத்துக் கொண்டாள்.

ஆனால. அண்ணியின் வார்த்தை உண்மையாயிற்று. வேறு எதுவும் செய்யாமல் வீட்டிலும், கடையிலும் உள்ள தானியத்தை சிறிது சிறிதாக சமைத்து சில நாட்கள் உண்டார்கள்.

''நமக்கு பல பேர் கடன் கொடுக்க வேண்டுமே. போய் கேட்டு வாருங்களேன்.''

ஜீஜாபாய் நினைவூட்ட, துகாராம் தான் கடன் கொடுத்தவர்களிடம் போய் காசை திருப்பிக் கேட்டான்.

''காசா, அன்று அரிசி கொடுத்தாயா. அதற்கா. இன்னும் அரிசி இருந்தால் கொடு. மொத்தமாக காசை திருப்பி விடுகிறேன்'' என்று சொல்லி சிரித்தார்கள்.

''இந்த நேரத்தில் வந்து காசு கேட்பவனைவிட மிகப் பெரிய மடையன் உண்டா. ஊர்முழுவதும் எதுவுமில்லை என்று தவித்துக் கொண்டிருக்க, உன் காசை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய். அந்த காசுக்கு என்ன வாங்கப் போகிறாய்? நீ கொடுத்த தானியத்தை மட்டுமல்ல, விதைக்க வேண்டுமென்று வைத்துக் கொண்டிருந்த தானியத்தையும் நான் அவித்துத் தின்றுவிட்டேன். இரண்டு வருடமாக மழை இல்லை. விதை நெல்லை வைத்துக் கொண்டு என்ன செய்ய, பூமியில் போட்டு அது காய்ந்து பறவைகள் கொத்தித் தின்பதைவிட நாமே தின்று சாகலாம் என்று விழுங்கி விட்டேன். மறுபடியும் கேட்கிறேன். ஒரு படி தானியம் கொடு. நான் பழைய கடனும், புதிய கடனுமாய் இரண்டையும் அடைத்து விடுகிறேன்'' என்று சொல்ல, வெறுங்கையோடு துகாராம் திரும்பினான்.

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சாக்கு சொன்னார்கள். ஒவ்வொரு வேதனையை வெளிக் காட்டினார்கள். யாரும் எங்கேயும், எதன் பொருட்டும் சந்தோஷமாக இல்லை என்பது துகாராமுக்குப் புரிந்தது.

கடையைத் திறந்து வைத்து வியாபாரம் இல்லாததால் வெறுமே உட்கார்ந்திருந்தான். தினமும் வெறுமே உட்கார்ந் திருக்கிறோமே என்று வீட்டிலிருந்து பகவத் கீதையை கொண்டு போய் கடையில உட்கார்ந்து கவனமாக, வரி வரியாகப் படித்தான். படிக்கப் படிக்க புரிந்தது போலவும் இருந்தது. படித்து முடித்த பிறகு, புரியாதது போலவும் ஆயிற்று.

'பாண்டுரங்கா... எல்லோருக்கும் இப்படிப்பட்ட வேதனையை ஏன் கொடுத்திருக்கிறாய். எவ்வளவு சுபிட்சமான ஊர் இது. அந்நியரின் வருகையாலும், இயற்கையின் சோதனையாலும் இந்த ஊர் இப்படிச் சின்னா



பின்னப்பட்டு கிடக்கிறதே. உனக்குக் கருணையில்லையா? இவர்களெல்லாம் உன் குழந்தைகள் இல்லையா? ஏன் இப்படிச்சோதிக்கிறாய்' என்று உள்ளுக்குள் வேதனையோடு முனகினார்.

படித்து, அலுப்பு வரும்போது கபீர்தாஸருடைய பாடல்களை உருக்கத்தோடு பாடினார். தெருவில் போகிறவர்கள் நின்று பார்த்தார்கள்.

''நன்றாகப் பாடுகிறீர்களே, இன்னொரு பாட்டுப் பாடுங்கள்.'' தெரிந்தவர் கேட்க, இன்னொரு பாட்டுப் பாடினார்.

ஆண்கள் பல பேர் கூடி ஆளுக்கொரு பாட்டு என்று கேட்க, துகாராம் கடையில் வியாபாரம் என்பது வெறும் பாட்டுப் பாடுவதாகவே மாறிப் போயிற்று.

தனக்குக் கெட்டிக்கார புருஷன் கிடைக்கவில்லை. தன்னாலும் தன் கெட்டிக்காரத்தனத்தால் ஜெயிக்க முடியவில்லை என்று புரிந்த அண்ணி மனம் நொந்து, உடல் சுருங்கி நோயுற்று படுக்கையில் விழுந்தாள்.

''எனக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டு விட்டது, என்னால் இந்த மாதிரியாக கூட்டத்தினரிடையே இருக்க முடியாது. இங்கு வாழ்வதைவிட மரணம் உத்தமம் என்று எனக்குத் தோன்றி விட்டது. எனவே நான் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன்'' என்று சொன்னாள்.

மறுநாள் காலை மரணமடைந்தாள்.

வறுமையின் வேதனையில் புலம்புகிறாள் என்று எல்லோரும் நினைத்திருக்க, மறுநாளே அவள் உயிர் விட்டது அந்தக் குடும்பத்திற்கே இடியாய் வந்து இறங்கியது.

அண்ணன் தவித்துப் போனார்.

'மனைவியைக் காப்பாற்ற வக்கில்லாதவனாகப் போய்விட்டேனே. வியாபாரியாகப் பிறந்தும் சாமர்த்தியம் இல்லாமல் கிடக்கிறேனே. கடவுள் என்னை எந்த விதத்திலும் கை தூக்கவில்லையே. என்ன காரணம். எதற்கு இந்த வேதனை. ஏன் இப்படியொரு பிரிவு. சாமர்த்திய மில்லாத நான் தோற்றுப் போயிருக்கலாம். சாமர்த்தியமுள்ள என் மனைவி ஜெயித்திருக்கலாமல்லவா. அவளும் தோற்றுப் போனால் என்ன அர்த்தம். கடவுளுக்கு நான் வாழ்வது பிடிக்கவில்லை என்றுதானே அர்த்தம். சாகிறேன் என்று சொல்லி செத்துப் போகிற ஒரு மனைவியை என்னால் எப்படி மறக்க முடியும். இந்த ஊரில் இருக்கிற வரையில் அவளைத் தவிர வேறு எதை நினைக்க முடியும். எனவே நான் இங்கு இருக்க மாட்டேன். என் இறுதி நாட்களை நான் என் பாவம் போக்க, என் வினை தீர்ப்பதற்கான வழியில் ஈடுபடுவேன்' என்று சொல்லி வீட்டை விட்டு உதறி கட்டிய துணியோடு காசிக்கு பயணப்பட்டார்.

வீட்டிற்குத் தூண் போல் இருந்த அண்ணியின் மரணம் எல்லோரையும் விட ருக்மாபாயைப் பெரிதும் பாதித்தது.

இப்படிப்பட்ட ஒரு சோதனையான நேரத்தில்கூட தன்னால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. எல்லோருக்கும் பாரமாக இருக்கிறோம் என்கிற நினைப்பு அவளை அதிகம் வாட்டியது.

மருந்து உட்கொள்வதை நிறுத்தினாள். நோய் அதிகமாகியது.

துகாராமின் அண்ணன், மனைவி இறந்த சோகம் தாங்காமல் வெளியேறி விட்டார். சந்நியாசியாய் வெகு தூரம் போய் விட்டார் என்று கேள்விப்பட்டு ருக்மாபாய் மனம் உடைந்தாள்.



நம்முடைய கெட்ட காலம்தான் இந்த வீட்டைப் பிடித்து ஆட்டுகிறது. தான் இங்கு வந்து வாழ்க்கைப்பட்ட நாளிலிருந்து இந்த வீடு க்ஷீணமடைந்திருக்கிறதே தவிர, எத்தனை கெட்டிக்காரர்கள் இருந்தாலும் வாரி வாயில் போட்டுக் கொள்கிறதே தவிர, இந்த வீடு மலர்ச்சி யடையவில்லை. நான் இறந்தால் இந்த வீடு சுபிட்சமாகி விடும் என்று நினைத்தாள்.

இறைவனை வேண்டினாள். உணவினைச் சுருக்கினாள்.

ருக்மாபாயும் வெகு சீக்கிரம் இறந்துபோனாள்.

அடிமேல் அடி. பொறுக்க முடியாத வலி. இவை களால் அந்த வீடு துடித்தது. யார் விசாரித்தாலும் அவமானத்தால் துவண்டது.

'என்ன பாவம் பண்ணியிருக்கிறாய் என்று தெரிய வில்லை. இப்படி அடுக்கடுக்காகவா வரும். யாரோ எட்டி உதைத்தது போலல்லவா சிதறிப் போய் விட்டீர்கள். எப்படிப்பட்ட கடை நடத்திய வீடு. எப்பேர்ப்பட்ட வணிகர் குடும்பம். எவ்வளவு செல்வச் செழிப்பாய் இருந்தீர்கள். எப்படி அன்னதானம் செய்தீர்கள், பாண்டுரங்கனுக்கு வரிகட்டுவதென்று எவ்வளவு பெரிய ஊர்வலம் போவீர்கள். எத்தனை நாள் பயணம். எத்தனை ஆட்களை அழைத்துக் கொண்டு போவீர்கள். உங்களுக்குப் போய் இப்படி நேர்ந்ததே. எல்லாம் முன் வினையா இல்லை யாராவது கொடுத்த சாபமா?' என்று ஊரும் புலம்பத் துவங்கியது.

ஊர் புலம்ப, அந்த வீடு வெட்கித் தலைகுனிந்து என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தது.

'பாண்டுரங்கா... பாண்டுரங்கா... பாண்டுரங்கா...' என்று அந்த வீடு கதறியது.

சோதனையின் உச்சகட்டமாக துகாராம் தனது ஆறு வயது மகனையும் நான்கு நாள் ஜுரத்தில் இழந்தார்.

மனம் பேதலித்து தோல்வி தாங்காமல் அண்ணி இறந்தது புரிகிறது.

அண்ணி இறந்த துக்கம் தாங்காமல் அண்ணன் வீடு விட்டுப் போனதும் நியாயம்தான். நோயுள்ள மனைவி இடிந்து போய் இறந்ததும் ஒரு விதத்தில் மிகப் பெரிய அநியாயமாகப் படவில்லை.

ஆனால், ஆறு வயதுக் குழந்தை வளர்ந்து வாழ வேண்டியவன். திடீரென்று இறந்துபோனான் என்றால், உண்மையில் இந்த வீட்டில் என்ன நடக்கிறது. ஏன் இவ்வளவு துயரம். எதனால் இத்தனை சோதனை யார் வைத்த பொறியில் சிக்கிக் கொண்டோம். என்ன தீங்கு செய்து இப்படி அனுபவிக்கிறோம். இதை நிவர்த்திக்க என்ன வழி?

தினம் தினம் பகவத் கீதையைப் படித்து பண்பட்ட மனம். பல நூறு கேள்விகளை எழுப்பி உள்ளுக்குள் ஆராய்ந்து விடை காணாமல் தத்தளித்தது.

பாரதப் போர் நடக்கும்போது அர்ச்சுனனுக்கு இப்படித்தான் ஒரு கலக்கம் வந்தது.

எதிரே குரு, பாட்டனார், சகோதரர்கள், நண்பர்கள், மற்ற உறவினர்கள். தெரிந்தவர்கள் என்று எல்லோரும் எதிரணியில் நிற்க, அவர்கள் அத்தனை பேரையும் கொல்ல வேண்டுமென்று தொடை தட்டி நிற்க வேண்டிய வேதனை, சோதனை அர்ச்சுனனுக்கு வந்தது.

'எதற்கு இந்தப் போர் எனக்கு ராஜ்ஜியம் வேண்டும் என்றுதானே இத்தனை பேரை இம்சிக்கிறேன். இத்தனை



பேரையும் கொல்லத் தயாராகி விட்டேன். எனக்கு ராஜ்ஜியம் வேண்டாம்.'

அர்ச்சுனன் பயந்து, வயிறு கலங்கி, புத்தி பேதலித்து வில்லைக் கீழே போட்டான்.

அதனால், எதற்காக இந்த யுத்தம். இதைத் தவிர்க்க முடியாதா என்றெல்லாம் விசாரப்பட்டான். அப்படி விசாரப்படுவதே, அப்படிக் கலங்குவதே இங்கு ஒரு யோகமாயிற்று. இதுதான் விசார யோகம்.

'அனைத்தையும் என்னிடம் அர்ப்பணித்து விடு. நீ இன்று கொல்லாவிட்டால். என்றோ ஒரு நாள் இவர்கள் மரணமடைவார்கள். இவர்கள் மரணமடைவதற்கு நீ காரணமல்ல. நானே காரணம். பிறப்பும் நானே இறப்பும் நானே, வளர்ப்பும் நானே. நானன்றி இவ்வுலகத்ததில் எதுவுமில்லை' என்று கிருஷ்ணர் சொன்னது நினைவுக்கு வந்தது.

மீண்டும் மீண்டும் பகவத் கீதையைப் படித்தார். தன் மனம் முழுவதையும் வாரி பாண்டுரங்கன் காலில் வைத்தார்.

'ஐயனே, நீயே சரணம்' என்று அமைதியாய் உட்கார்ந்து கொண்டார்.

அந்த அமைதி அவருக்குள்ளிருந்து பாட்டாய் பொங்கி பிரவாகமெடுத்து அந்த ஊர் முழுவதும் நனைத்தது.

வறுமையினாலும், அரசாங்கக் கொடுமையினாலும் நொந்து போயிருந்த அந்த ஊர் மக்கள் துகாராமின் பாட்டிற்கு மனம் இளகினார்கள். அவர்களும் 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா...' என்று அவரோடு உட்கார்ந்து பாடத் துவங்கினார்கள்.

''காசு சம்பாதிக்க வேண்டாம். பாண்டுரங்கா... பாண்டுரங்கா... என்று உட்கார்ந்தால் போயிற்றா?''

ஜீஜாபாய் உரக்கக் கத்தினாள்.

''நான் எல்லாம் செய்து பார்த்து விட்டேன். அத்தனையும் தோல்வியில் முடிந்தது. இனி எதுவும் செய்யப் போவதில்லை. பாண்டுரங்கா என்கிற நாமசங்கீர்தனத்தைத் தவிர வேறெதுவும் நான் நிகழ்த்தப் போவதில்லை. அந்தப் பாண்டுரங்கன் நமக்கு சோறு கொடுப்பான்.''

அவர் திடமாக நம்பினார்.

ஜீஜாபாய் சந்தேகப்பட்டாள்.

புருஷனுக்கு புத்தி பேதலித்துவிட்டதே என்று வேதனைப்பட்டாள்.

யதார்த்தமாக வாழ்க்கைக் கணக்குகள் போடும் பெண்களுக்கு கடவுள் பற்றிய ஞானம் எளிதில் வந்து விடுவதில்லை. உழைத்தால் முன்னேறலாம் என்கிற கணக்கு அவர்களிடம் எப்பொழுதும் இருக்கும். உழைப்பதற்கும், உழைத்து வெற்றி பெறுவதற்கும் நிறைய காரணங்களென்று புரிவதற்கு மிகுந்த அனுபவமும், பொறுமையும் தேவைப்படுகின்றன.

ஆனால், மரணம் சிலருக்கு மிகப் பெரிய அதிர்ச்சி யாய் போய் விடுகிறது. அருகில் நெருங்கிப் பழகியவர்கள், நல்ல வாலிபமானவர்கள் திடீரென்று இறந்துபோகிற பொழுது வீட்டைத் தாங்கி நின்ற அந்த உறவு காணாமல் போகிறபோது மனம் பேதலித்துப் போகிறது. வாழ்க்கையில் பிடிப்பு குறைந்து போகிறது. என்ன பாடுபட்டால் என்ன, எத்தனை உற்சாகமாய் காரியங்களில் ஈடுபட்டால் என்ன, கடைசியில் மனித வாழ்க்கைக்குக் கிடைக்கின்ற ஒரே பரிசு, மரணம். இதற்கு ஆடுவானேன்? ஆடிக் களைப்பானேன் என்ற கேள்வி வருகிறது.

அண்ணனுக்கு உற்சாகமும், உழைப்பும் போத வில்லை. ஆனால், அண்ணி அந்த இடத்தை முன் வந்து



நிரப்பினாள். முழு உற்சாகமாக, உண்மையாக உழைப்பதற்கு முன் வந்தாள். துவண்டு கிடந்த குடும்பத்தை அந்தப் பெண்மணி தூக்கி நிறுத்தினாள். வீட்டை இன்னும் எப்படி விரிவுபடுத்தலாம் என்று இடையறாது யோசித்தாள். மைத்துனனை மகனைப் போல் நடத்தினாள். 'நான் இருக்கிறேன் கவலைப்படாதே' என்று ஒரு நாளைக்கு நூறு முறை ஆறுதல் சொன்னாள். ஏனோ திடீரென்று வாழ்க்கையை முடித்துக் கொண்டு காணாமல் போய் விட்டாள்.

அண்ணனுக்கு அண்ணி மீது காதலைவிட நன்றிதான் அதிகமிருந்தது. 'நான் செய்ய வேண்டிய வேலை அனைத்தையும் நீ செய்கிறாயே' என்கிற சந்தோஷம் இருந்தது. 'அப்பா... என்னை நிம்மதியாக விட்டாய். நான் வாழ்க்கையை வேறு விதமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என் குடும்ப பாரத்தை நீ சுமந்து திரிவது எனக்கு மிகுந்த சந்தோஷம்' என்று சொல்லி ஆழ்ந்த மௌனத்தில் இருக்க, அண்ணி அவரையும் பேணிக் காத்து, வீட்டையும் மிக நன்றாக கவனித்துக் கொண்டாள்.

ஆனால், அந்த அண்ணி இப்போது இல்லை. அண்ணன் மயங்கி விழுந்து விட்டார். அவரால் எழுந்திருக்க முடியவில்லை. அக்னிச் சட்டியை கையில் ஏந்தி காடு வரை நடக்க முடிகின்ற ஆளாக அவரைப் பார்த்தால் தெரிய வில்லை.

''சரி, உன் தாயாருக்கு கொள்ளி வைத்ததைப் போல அண்ணிக்கும் நீயே கொள்ளி வை'' என்று உறவுகள் முடி வெடுத்தார்கள். துகாராமை அழைத்து சடங்குகள் செய்யச் சென்னார்கள்.

'நான் செய்யலாமா. இது தவறில்லையா?' என்று உள்ளுக்குள் துகாராமிற்கு கேள்வி எழுந்தது.

''வா. வந்து சடங்குகளில் கலந்து கொள்'' என்று யாரோ வற்புறுத்த, ''ஒரு நிமிடம் நான் அண்ணியைக் கேட்டு விட்டு இதில் கலந்துகொள்கிறேன்'' என்று துகாராம் பதில் சொன்னார்.

சுற்றியுள்ளோர் வினோதமாக அவரைப் பார்த்தார்கள்.

துகாராமிற்கு தான் செய்த தவறு புரிந்தது. தன் மனம் பேதலித்துக் கிடந்ததை உணர முடிந்தது. தலையில் அடித்துக் கொண்டு அழுதார். இறந்துபோனது அண்ணி என்றுகூட தெரியாமல் தன்னுடைய ஒவ்வொரு சந்தேகத்திற்கும், தான் போய் நிற்கின்ற பழக்கத்திற்கு அடிமையாகிக் கிடப்பதைக் கண்டு அப்படியொரு அன்பான ஸ்நேகத்தை அண்ணி கொடுத்ததை நினைத்து வருத்தப்பட்டார்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் மிகப் பெரிய உறவில்லை. கட்டிக் கொண்டு புரளுகின்ற பாசமில்லை. தினமும் கைகோத்து ஊரைச் சுற்றுகின்ற வழக்கமில்லை. அவர் ஒரு பக்கம், இவர் ஒரு பக்கம் என்று இருந்தாலும் அண்ணன் என்கிற மதிப்பும், மரியாதையும் துகாராமிற்கு இருந்தது. தம்பி என்கிற பாசமும், நேசமும் அவர் அண்ணனுக்கு இருந்தது.

'நேற்று முன்தினம் உன் அண்ணனை தொலை தூரமாக ஊரில் பார்த்தேன். காசிக்குப் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்கிறான்' என்று யாரோ சொல்ல, வீடு படபடப்பானது.

இங்குதான் இருப்பார். அங்குதான் இருப்பார் என்று நினைத்துக் கொண்டிருக்க, அண்ணன் சகலமும் உதறி காசிக்குப் போகிறார் என்று யாரோ சொல்ல, மறுபடியும் வீடு கலக்கமடைந்தது.

ஒரு வேலையும் செய்ய வேண்டாம். இந்த வீட்டின் ஒரு ஓரத்தில் இருந்தால் போதாதா. நானும் உங்கள்



உறவுக்காரர் என்று சொல்வதற்கு ஒரு ஆளாக நடந்து கொண்டால் நன்றாக இராதா. ஏன் இப்படி அண்ணன் நகர்ந்து போனார். துகாராம் உள்ளுக்குள் கதறினார். வெளியே பிரமை பிடித்தவர் போல் நின்றார். அவரை யாரும் தேற்றவில்லை. சரி, அனுபவி என்பது போல் நகர்ந்து போனார்கள்.

துகாராம் மனம் நொந்தார்.

எல்லாவற்றையும் விட மிகப் பெரிய இடி, போன தலைமுறையை பிடுங்கிக் கொண்டு போனதல்ல. அடுத்த தலைமுறை, நாளையை நம்பிக்கை இருண்டுபோனதுதான் துகாராமை அழ வைத்துவிட்டது. அடிவயிற்றிலிருந்து கதற வைத்து விட்டது.

'அடேய்... துகாராம் எத்தனை அடித்தாலும் நீ அழமாட்டாயா. அப்படியொரு வைராக்கியமா, உன்னை அழும்படி அடிக்கிறேன் பார்' என்று விதி மிகப் பயங்கரமாக இப்போது தாக்கியது.

ஜீஜாபாய் அவருக்கு பரிசாகக் கிடைத்தாள். அவர் ஜீஜாபாயிக்கு கொடுத்த பரிசு அவர் மகன்

வறுமை. போஷாக்கான உறவு இல்லை. நோய் எதிர்ப்புச் சக்தி இல்லை. இரண்டு நாள் ஜுரம். அந்த உயிரை வெகு எளிதாய் பறித்துக் கொண்டு போயிற்று

ஜீஜாபாய் வாய்விட்டுக் கதறியபோது உடம்பு நடுங்கியது. உள்ளம் குமைந்தது.

அத்தனை பாபியா நான். மாற்றி மாற்றி முகம் கிழியும் படி விதி தாக்குகிறதே. யாருக்கேனும் சொல்லவொண்ணாத கெடுதல் எந்த ஜென்மத்திலேனும் செய்திருக்கிறேனோ. அதற்கு தண்டனை அனுபவிக்கிறேனோ.

அவருக்கு பல நம்பிக்கை நூல்கள் அறுந்து போயின. மனம் கயிறு அறுந்து காற்றில் அலையும் பட்டம் போல, எந்த இலக்கும் இன்றி, எந்த முழுமையான வாக்கியமும் இன்றி, சிந்திக்கத் துவங்கியது.

இவையெல்லாவற்றையும்விட மிகப் பெரிய வேதனை, யார் எதிரே வந்தாலும் அவரை நிற்க வைத்து துக்கம் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள், எங்கும் வெளியே போகாமல் வீட்டில் இருந்தால் வீட்டைத் தேடி நாலு பேர் வருகிறார்கள். என்னப்பா இப்படி ஆகிவிட்டதே என்று அவர் துக்கத்தை மேலும், மேலும் கிளறுகிறார்கள். மிக இரக்கப்பட்டு பரிதாபமாய் பார்க்கிறார்கள்.

இப்படியொரு ஜென்மமா. தொடர்ந்து மூன்று கத்திக்குத்துகள் வாங்கியும் இன்னும் எப்படி உயிரோடு இருக்கிறாய் என்பது போல் பார்க்கிறார்கள்.

அந்த பரிதாபமான பேச்சைத்தான் தாங்கவே முடிய வில்லை. இத்தனை பாபியா என்கிற ஏளனத்தைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

துகாராம் ஆழ்ந்து உள்ளுக்குள் யோசித்தார். அலைக் கழிக்க விதி முடிவு செய்து விட்டது. விதம் விதமாகத் தாக்கி விதம் விதமாக கதற வைக்கிறது.

நல்லது. இதை வேறுவிதமாக எதிர்கொள்ள வேண்டும். நான் என்னை உற்றுப் பார்க்கவேண்டும். உள்ளுக்குள் இத்தனை விஷயங்களும் ஒன்றுசேர என்ன காயங்களை ஏற்படுத்தியிருக்கிறதென்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். இங்கிருப்பின் தொடர்ந்த பேச்சுகள் கவிழ்த்து விடுகின்றன. நான் என்னைக் கவனிக்க வீட்டில் இருக்கும் போது இயலவில்லை எனவே தனிமை நாடிப் போய் எங்கேனும் அமர்ந்து 'துகாராம்... துகாராம் நீ யார்?



இப்பொழுது உனக்கு என்ன செய்யப் போகிறாய். இது யாரால் நேர்ந்தது. ஏன் நேர்ந்தது?' என்று நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கேட்டு அதற்குண்டான பதிலை தானே கண்டுபிடிப்பதுதான் நல்லது என்று தீர்மானம் செய்தார். இல்லையெனில் மற்ற உறவுகள் பேசியே கொன்று விடும். மொத்தமாக அழித்துவிடும் என்று பயந்தார்.

அண்ணன் என்ன செய்திருக்கிறார்.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ள காசிக்குப் போய் விட்டார். வேறு இடம், வேறு மக்கள். இவர் யார் என்று தெரியாது. இவர் துக்கம் என்ன என்று புரியாது. வெறுமே இவரைப் பார்த்து புன்சிரிப்பு செய்யும் மக்கள். அதிதியா, விருந்தாளியா காசிக்குப் போகிறீர்களா. அடடா... உட்காருங்கள் என்று ஏதேனும் உபசாரம் செய்கின்ற மக்களைப் பார்த்தபடி துக்கத்தை மறந்து போய்க் கொண்டிருப்பார்.

நான் மட்டும் இந்த வீட்டில் உட்கார்ந்து வந்து போகிற எல்லோருடைய வார்த்தைகளையும் சுமந்து கொண்டிருப் பானேன். நாமும் வெளியே போவதே நல்லது. இந்த சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்வதே சரி. ஆனால், அண்ணன் உதறி வெகுதூரம் போய் விட்டார். இனி திரும்பக் கூடாது என்ற நினைவோடு போய் விட்டார். இங்கு ஒன்று மில்லை என்று எல்லாவற்றையும் அறுத்துவிட்டுப் போய் விட்டார்.

என்னால் அப்படிப் போக முடியுமா?

இங்கு என் மனைவி இருக்கிறாள். ஜீஜாபாய் இருக்கிறாள். அதனால் ஊர் விட்டு ஊர் எங்கும் போக முடியாது. இது என்னுடைய இடமில்லை என்று வேறு பூமியில் வாழ முடியாது. அது கோழைத்தனம். நான்

மறுபடியும் வருவேன். இதற்கு பதில் தெரிந்து கொண்டு வருவேன். நான் யார் என்று புரிந்து கொண்டு வருவேன். எனக்கு ஏன் இந்த வேதனைகள் என்று அறிந்துகொண்டு வருவேன். அப்படி அறிந்து கொள்ளாமல், இங்கு உள்ள வர்கள் சுமத்துகின்ற பரிதாபங்களைச் சுமந்து கொண்டு வாழ்வதில் பயனே இல்லை. இதைத் தாண்டி நான் வரவேண்டும். இதிலிருந்து மீண்டும் நான் எழவேண்டும் என்று வேகமாகச் சிந்தித்தார்.

யாருக்கும் சொல்லாமல் கிராமத்தை விட்டு வெகுதூரம் நடந்து அடர்ந்த காட்டுக்குள் போனார்.

அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது, குடிநீருக்கு என்ன செய்வது, எங்கே அமர்வது, விலங்குகள் வந்தால் எங்கே ஓடுவது, எந்த சிந்தனையும் இல்லாமல் கானகத்தின் நடுமையத்தில் உட்கார்ந்து கொண்டார்.

கபீர்தாஸரும் மற்றோரும் எழுதியிருந்த பாடல்களை, தனக்குத் தெரிந்தவற்றை உரக்கப் பாட ஆரம்பித்தார். சிறிய கடையில் நான்கு பேர் சேர்ந்து உட்கார்ந்து பாடுகிறபொழுது பாடுகிறோம் என்ற எண்ணமே முக்கியமாக இருந்தது. பாட்டினுடைய நெளிவுசுளிவுகள் காட்டுவதற்கு ஆசை இருந்தது. 'பாண்டுரங்கா...' என்று கமகத்தோடு பாடுகிற பொழுது அத்தனை பேரும் உணர்ச்சிவசப்பட்டு கண்களில் நீர் தளும்ப அவரை நோக்கி கை கூப்புகின்ற ஒரு சந்தோஷம் இருந்தது.

'ஆஹா... என்னமாகப் பாடினீர்கள் துகாராம். என் கவலையெல்லாம் மறந்து போயிற்று' என்று பாராட்டாய் எவரோ சொல்கிற பொழுது இதைவிட அற்புதமான பாட்டு பாடுகிறேன் பார். உன் கவலையை மறக்கடிக்கிறேன் பார் என்று உள்ளுக்குள்ளே ஒரு சங்கல்பம் ஏற்பட்டது.



அந்த சங்கல்பங்கள் ஏதுமின்றி, எந்தவிதமான காரணமும் இன்றி எவரும் எதிரே இல்லாது தான் மட்டும் தனியாக இருந்து தனக்காக உரத்துப் பாட்டுப் பாடினார்.

முதன் முதலாக தன் குரலை தானே கேட்டார். ஒரு பைத்தியம் போல் தனக்குத்தானே பேசிக் கொண்டார். எதிரேயுள்ள புளிய மரத்தோடும், வேலமரத்தோடும், அரசமரத்தோடும் சர்ச்சைகள் நிகழ்த்தினார். முட்புதரை கோபித்துக் கொண்டார். அங்குள்ள பூக்களை வருடிக் கொடுத்து 'என் நிலைமையைப் பார்த்தாயா' என்று கண்ணீர் விட்டார். உள்ளுக்குள் இருந்த அத்தனை வேதனைகளையும் விதம் விதமாக எடுத்து வெவ்வேறு இடத்தில் வீசி எறிந்தார். மறுபடியும் பாடினார். பாட்டில் புலம்பினார். தன் குறைகளைச் சொன்னார். 'பாண்டுரங்கா... வந்து காப்பாற்று' என்று சொன்னார்.

எல்லாமும் போலியாக இருந்தது. சட்டென்று அந்த போலித்தனம் தெரிந்ததும் பேச்சு நின்று போயிற்று. உள்ளக்குள் கனமான மௌனம் அதிகரித்தது. மறுபடியும் பேச முயற்சித்தபோது வார்த்தைகள் எதுவும் பிடிபட வில்லை. எதற்குப் பேசுவது என்ற ஒரு அலுப்புதான் மிஞ்சியது. பேசி ஓய்ந்து போனது தெரிந்தது.

அவர் மறுபடியும் பேச முயற்சிக்காமல் உள்ளுக்குள் அந்த ஆழ்ந்த மௌனத்தை கவனிக்க ஆரம்பித்தார். கவனிக்க கவனிக்க மௌனம் கனமாகியது.

மௌனம் கனமாகுதல் என்றால என்ன?

வாய் பேசாத மௌனம் மேலோட்டமானது. மனமே எந்த வார்த்தைகளையும் சிருஷ்டிக்காமல் வெறுமே... வெறுமே எதுவும் சிந்திக்காமல் அடித்துப் போட்டது போல் மல்லாந்து கிடப்பதுதான் பலமான மௌனம்.

வழக்கமாகச் சொல்கின்ற 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா' என்று சொல்கின்ற முனகல்கூட மனதில் இல்லை. ஒரு ஆழ்ந்த தூக்கம் போலும், மயக்கம் போலும், ஒரு நிலையை, விழிப்பு நிலையிலேயே துகாராம் அடைந்தார்.

மனம் எதையும் பிடித்துக் கொள்ளாமல் இருந்தது. எதையும் சாராமல் இருந்தது. உடம்பைவிட்டு எண்ணம் வெளியே நின்று அவரை வேடிக்கை பார்த்தது. இது ஒரு வினோதமான உணர்வு. மனதுக்குள் குடிகொண்டிருக்கின்ற நான் என்ற எண்ணம், தான் என்ற அகங்காரம் மெல்ல நகர்ந்து வெளியேறி தன்னைத்தானே வேடிக்கை பார்க்கின்ற ஒரு வினோத அனுபவம். அவருக்கு ஏற்பட்டது. சொல்ல வொண்ணா நிம்மதி படர்ந்தது.

அடேய்... இதுதானா என்கிற புன்னகை உதட்டில் நெளிந்தது.

கடவுளே... இப்படி என்னைப் பார்க்கவே தெரிய வில்லையே. தேவையற்று நிறைய பேசியிருக்கிறேனே. அனாவசியமாய் நிறைய உளறியிருக்கிறேனே. கொஞ்சம் கூட எவரும் கேட்காமல் தன்னைப் பற்றியே புலம்பியிருக் கிறேனே. புலம்பவும், கேட்கவும், பேசவும் இங்கு எதுவு மில்லையே. எல்லாமும் சரியாகத்தானே இருக்கிறது. எல்லாமும் நேராகத்தானே நடக்கிறது. இது எப்படி நடந்தாலும் எனக்கென்ன கவலை என்று ஒரு மலர்ச்சியை, ஒரு சுதந்திரத்தை அவர் மனம் உணர்ந்தது. மறுபடியும் உடம்புக்குள் போய் மனம் ஒட்டிக் கொண்டது.

பறவை தன் குஞ்சு பற்றிய கவலையோடு கத்துகிறது. இது மிருகம். தன் பசியைப் பற்றிய ஆத்திரத்தோடு உறுமுகிறது. இது மரம். தன்னுடைய இலைகள் இன்னும் பளபளப்பாக இருக்க வேண்டுமென்று இடையறாது



உழைத்துக் கொண்டிருக்கிறது. இதுவொரு தொடர்ச்சி. முடிவில்லாத ஒரு செய்கை. இங்கு எதுவும் நிரந்தரமில்லை. இந்தப் பறவை, இந்த மிருகம், இந்த மரம், நான், எல்லாமும் ஒரு நாள் காணாமல் போகிறோம், அதுவல்ல வாழ்க்கை. இதுவல்ல நியதி. இதுவல்ல முக்கியம். இதுவல்ல இங்கு செய்தி.

உலகம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற ஒரு அமைதியை மக்கள் எங்கே என்று தேடிக்கொண் டிருக்கிறார்கள். இல்லை என்று சொல்லிக் கொண் டிருக்கிறார்கள் எல்லாமும் துன்பமயம் என்று புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஊனக் கண்களுக்கு இந்த நிம்மதி புரியவில்லை. தனக்குள்ளே பார்க்க எவரும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். உலகத்தைப் பார்க்க உடம்புக்குள் உட்கார்ந்திருக்கின்ற மனதுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

உடம்பை உதறி உடம்பிலிருந்து வெளியேறி நின்ற மனம், உடம்பை ஒரு பொருட்டாகக் கருதாத மனம், உடம்பினால் ஏற்படுகின்ற விதிகளை புறக்கணித்துவிட்ட ஒரு மனம், சகலரையும் தெளிவாகப் பார்க்கிறது.

உடம்பில்லாத அந்த மனம், எல்லா உடம்புகளையும் தன் உடம்பாக எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த மனம் தன்னை பறவையாய், விலங்காய், தாவரமாய் மற்ற மனிதர்களாய், நண்பர்களாய், எதிரிகளாய், மனைவியாய, மகனாய் பார்க்கிறது. அவர்களின் மனம் பிடிபட, இந்த மனம் மிகத் தெளிவாக, மிக நேர்மையாக அவர்களை அணுகுகிறது. நம்முடைய அணுகுமுறையில் பல்வேறு சமயம் நேர்மையில்லை. நேர்மையில்லாததால் பொய் தலை விரித்தாடுகிறது. பொய் இடையறாது தலைவிரித்தாடு வதால் எது, என்ன, எப்படி என்பது புரியவேயில்லை.

இந்தப் புரியாத புதிர்தான் வாழ்க்கையின் மிகப் பெரிய இம்சை. சகிக்க முடியாத வலி.

மனம் உடம்பிலிருந்து வெளியேறி நிற்பது என்றால் என்ன?

அதை வார்த்தையில் சொல்ல முடியாது. அது புது அனுபவம். திடீரென்று ஏற்படும் அனுபவம். ஒருமுறை அது ஏற்பட்டு விட்டால் உலக வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம் முற்றிலும் மாறுபாடு அடையும்.

இதுவே ஞானம். இதுவே தெளிவு. இதற்குப் பிறகு வெகுதூரம்... வெகு தூரம் கடவுளை நோக்கிப் பயணப்பட வேண்டும். இதைத் தெரியாதவர் கடவுளை நோக்கி ஒரு அங்குலம் கூட எடுத்து வைக்க முடியாது.

கடவுளைத் தேடலின் ஆரம்பம் இந்த பார்வைத் தெளிதல். தன் மனதின் போக்கு அறிதல்.

காற்றும் நானே. கடலும் நானே. இந்த உலகில் நீக்கமற நிறைந்த பல உயிர்களின் அசைவுகளும் நானே என்பது புரிபட்டு விடும். எல்லா உயிர்கள் மீதும் காதல் இடையறாது பொங்கும். நெல்முனையளவு கூட வஞ்சனை இல்லாமல் மனம் சுத்தமாகி விடும். மனதின் சுத்தம் முகத்தில் பிரகாசிக்கும். எத்தனை விதமான உருவங்களில் இருக்கிறாய் நீ என்று கடவுள் மீது மிகப் பெரிய பிரேமை பொங்கும். உன்னைப் பார்க்க வேண்டுமே. நீ யாரென்று தெரிய வேண்டுமே. உன்னுடைய வடிவம் என்ன என்று புரிய வேண்டுமே. உன் சக்தி என்ன என்பதை தெரிய வேண்டுமே. உன்னோடு கலக்க வேண்டுமே இப்பொழுது இருக்கிற சந்தோஷம் போல இன்னும் பன்மடங்கு பெருகி, உன்னை அனுபவிக்க வேண்டுமே என்ற எண்ணம் தோன்றும்.



ஐயனே, அபயம் தரலாகாதா. என்னை இந்த உலகமாய வாழ்விலிருந்து விடுவித்தாய். ஐயனே. என்னை உன்னிடம் அழைத்துக் கொள்கிற அபயத்தை நீ தரலாகாதா என்ற முதல் பாட்டை காட்டுக்குள் பாடினார்.

பகவத் கீதை சொன்ன எல்லா விஷயங்களும் அவருக்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்தன. இதைத்தான் இப்படிச் சொல்லியிருக்கிறாயா, இதுதான் அடிப்படையான விஷயமா, இந்த வித்தையைத்தான் இப்படி எனக்குக் காட்டுகிறாயா என்று பரவசமானார். அதைக் குறித்தும் பாடல்கள் இயற்றினார்.

கபீர்தாஸர் உட்பட மற்றோர் பாடல்களையும் பாடிக் கொண்டிருந்த துகாராம் தன் மனதிலிருந்து பீறிட்டு எழும் சந்தோஷத்தை, கடவுள் தாபத்தை பாடல்களாக வடித்தார்.

சாதாரண மனித நிலையிலிருந்து இறை அனுபவம் பெற்ற மாமனிதராக துகாராம் இந்த அருமையான நேரத்தில் உணர்ந்தார்.

இது விதிப்பயன். பூர்வஜென்ம வாசனை. தன்னுடைய எல்லா முயற்சிகளையும் முற்றிலும் உதறி விட்டு, மௌனமாய், நிராயுதபாணியாய் எவரும் காப்பாற்ற மாட்டார்கள் என்று திரௌபதியைப் போல் கைகூப்பி சரணடைய இந்தத் தனிமை அவருக்குத் தேவைப்பட்டது.

சுற்றிலும் ஆட்கள் இருக்கிறபோது அகங்காரம்தான் மிகப் பெரிதாக ஆளுமை செய்கிறது. அந்த அகங்காரம் உடம்பை விட்டு அகலமாட்டேன் என்கிறது. தனிமையில் உண்மையான பலவீனம், உண்மையான பலம், உண்மை யான ஏக்கம், உண்மையான தன் மனச் சிந்தனைகள் தெளிவாக தன்னைச் சீர் செய்து கொண்டு மிக வேகமாக, உண்மையான சரணடைதல் ஏற்பட்டு விடுகிறது.

இப்படிச் சரணடைந்தவர்களை இறைவன் ஒரு போதும் கைவிடுவதேயில்லை.

''என்னை இப்படி தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டீர்களே நியாயமா?'' என்று ஜீஜாபாய் புலம்பிக் கொண்டே காட்டுக்குள் ஓடி வந்தாள்.

அவர் காட்டுக்குள் தனியாகப் பேசிச் சிரிப்பதை யாரோ பார்த்துவிட்டு ஊருக்குள் சொல்ல, ஊர் எல்லையில் இருந்தவர்கள் உள்ளே வந்து சொல்ல, உள்ளே உள்ளவர்கள் ஜீஜாபாயிக்கு கைகாட்ட, ஜீஜாபாய் காடு நோக்கி ஓடினாள். புருஷனின் கைபிடித்து அழுதாள்.

ஜீஜாபாயின் அழுகை அவருக்குப் புரிந்தது.

''என்னை என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய் ஜீஜாபாய்?'' அவர் அன்போடு கேட்டார்.

''வீட்டிற்கு வாருங்கள். ஏதேனும் செய்து சம்பாதிப்போம். ஏதேனும் புதிதாக கடை திறப்போம். ஏதாவது முயற்சிகள் செய்வோம். நிச்சயம் நடக்கும்.''

''ஆஹா... வருகிறேன்.'' அவர் உடனே சம்மதம் தெரிவித்தார்.

''இத்தனை நாள் இப்படிச் சொல்லாமல் போய் விட்டீர்களே. நான் எப்படித் தவித்தேன் என்று உங்களுக்குத் தெரியாது'' என்று மேலும் தொடர்ந்து ஜீஜாபாய் சொன்னாள்.

''தெரிகிறது. நீ அதிகம் தவித்திருப்பாய் என்று தெரிகிறது.'' அவர் தன்னை ஜீஜாபாயாய் மாற்றிக்கொண்டு பேசினார்.

''எதற்காக வர வேண்டும். மனைவியை விட்டு ஏன் ஓட வேண்டும்.'' ஜீஜாபாய் வழியெல்லாம் புலம்பிக் கொண்டு வந்தாள்



''அது இறைவன் கட்டளை. இறைவன் விருப்பம். இறைவன் எனக்குப் பாடம் நடத்த விரும்பினான். காட்டுக்குப் போக தூண்டினான். காட்டுக்குப் போனது மிக நல்லதாயிற்று.

''ஏன் என்ன நடந்தது காட்டில்?''

அவர் அபயம் தரலாகாதா என்ற பாட்டைப் பாடினார்.

''நன்றாக இருக்கிறதே. இது போல் ஒரு கபீர்தாஸர் கீர்த்தனையைக் கேட்டதே இல்லையே.''

''இல்லை. இது என் மனதில் இருந்து எழுந்தது. நான் பாடியது.'' அவர் சொல்ல, ஜீஜாபாய் மெல்லியதாய் வியந்தாள்.

''சரி, பாட்டா சோறு போடும். வியாபாரம் செய்ய வேண்டுமல்லவா?''

''நான் என்ன செய்ய வேண்டுமென்பதை பாண்டுரங்கன் தீர்மானிப்பான். அவன் சோறு போடுவான். கவலைப்படாதே.''

''நாம் முயற்சியே செய்யக்கூடாதா. மறுபடியும் கடை திறக்கக் கூடாதா?''

''மறுபடியும் முயற்சி செய்ய வேண்டுமென்றால், கடை திறக்க வேண்டுமென்றால், பாண்டுரங்கன் சொல்லுவான். முயற்சி செய். கடை திற என்று கட்டளையிடுவான். உள்ளுக்குள் தூண்டுவான். அவன் என்ன செய்கிறான் என்று ஊருக்குள் போய்தான் என்னால் சொல்ல முடியும்.''

அவர் திடமாகப் பேசினார்.

புருஷன் வேறுவிதமாகப் பேசுவதை, வேறு விதமாக பதில் தருவதை ஜீஜாபாய் வியப்போடு பார்த்தாள்.

என்னாயிற்று இந்த மனிதருக்கு என்று சந்தேகப் பட்டாள்.

''கடை திறக்க வேண்டுமென்றால் காசு வேண்டும். காசுக்கு எங்கே போவது என்று யோசித்து வீட்டுப் பரணையிலுள்ள காகிதச் சுருள்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தேன். பல கடன் பத்திரங்கள் இருக்கின்றன. இந்த கடன் பத்திரங்களைத் காட்டி, கடன் கொடுத்தவர்களை மிரட்டி சிறிதளவு காசு வாங்கி வந்தால் கூட போதும். நம்மால் நல்ல வியாபாரம் துவங்கிவிட முடியும். முழுத் தொகையும் கூட கொடுக்க வேண்டாம். பாதி கொடுத்தாலும் பத்திரத்தை கிழித்து விடுவேன் என்று சொன்னால் அதுவே பெருந் தொகையாக வந்து சேரும். உடனடியாக இவைகளை கொண்டு போய் காண்பித்து சம்பந்தப்பட்டவரிடம் காசு வாங்கி வாருங்கள்'' என்று ஓலைகளையும், காகிதச் சுருள் களையும், கடன் பத்திரங்களையும் அவர் எதிரே மனைவி போட வீட்டில் அமர்ந்து அந்தக் காகிதங்களைத் துகாராம் படித்துப் பார்த்தார்.

எல்லோரும் அவரிடம் கடன் வாங்கியவர்கள்தான். எல்லோருமே திருப்பித் தருகிறேன் என்று கூறிய நல்லவர்கள்தான். ஆனாலும் இந்தக் காலச் சூழ்நிலையில் அவர்கள் ஒருவர் கூட இந்தக் கடனை திருப்பிக் கொடுக்க முடியாது. எத்தனை வற்புறுத்தினாலும் எத்தனை இம்சித்தாலும் சிறிதளவு தொகை கிடைக்குமே தவிர, நிறைய சாபங்கள் கிடைக்குமே தவிர, மொத்தக் கடனும் திரும்பிவராது. வராத கடனுக்கு பத்திரங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது. எதற்குப் போய் இன்னொருவரை இம்சிப்பது. பாண்டுரங்கன் ஒவ்வொரு நாளும் தன்னைச் சரணடைந்தவர்களுக்கு உண்டான ஊதியங்களை வெகு எளிதாகக் கொடுப்பான். கொடுத்த கடனைக் கேட்டு எவரையும் இம்சிக்க வேண்டியதில்லை. துராங்காரமாய் பேச வேண்டியதில்லை. அதட்டி புலம்ப வைக்க



வேண்டியதில்லை என்று தெளிவாகி அவைகளை எடுத்துக் கொண்டு போய் நதிக்கரையில் எறிந்தார்.

அந்த நதிக்கரையோரம் பாழடைந்த ஒரு பாண்டுரங்கன் கோயிலை மறுபடியும் புதுப்பித்து கட்டத் துவங்கினார். அதற்கு ஊர் மக்கள் உதவி செய்தார்கள்.

பகல் முழுவதும் கோவில் வேலை. இரவு முழுவதும் நாமசங்கீர்த்தனம் என்று வாழ்க்கை அற்புதமாகப் போயிற்று. தினசரி வாழ்க்கைக்கு உண்டான உணவும் மற்ற விஷயங்களும் ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு கிடைத்து வந்தன.

ஜீஜாபாயும் அந்த நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டாள். தொலைவே உட்கார்ந்து புருஷனை வியப்போடு பார்த்தாள். தீப்பந்த வெளிச்சத்தில் அரைக் கண்மூடி முகம் முழுவதும் மலர்ச்சியாக 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா' என்று உரக்கக் கத்துகிறபொழுது அவர் குரல் அந்த இடம் முழுவதும் கூர்மையாய் பரவி எதிரொலித்து சகலரையும் அதே சொல்லை திரும்பச் சொல்லும்படி வைத்துவிடுகிறது. அவர் சொல்லுகின்ற நாமாவளிகள் நெஞ்சுக்குள் தாக்கி எல்லோருக்குள்ளும் குடியேறி விடுகிறது. அந்தக் குரலில் ஒரு தெளிவு, திடம் இருந்தது. அவருடைய அசைவுகள் எல்லாம் உண்மையாக இருந்தன. அவர் வணங்கிய பொழுது உண்மையாக வணங்கினார். ஆசீர்வதித்தபோது உண்மையாக ஆசீர்வதித்தார்.

''ஐயா, இங்குவந்து உங்களோடு ஒரு நாள் இரவு பாட்டு பாடினேன். வெகுநாள் என்னை வாட்டிக் கொண்டிருந்த வயிற்று வலி உடனே நீங்கியது. உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டுமய்யா!'' யாரோ வாழைப்பழங்கள் கொண்டு வந்து நமஸ்கரித்தார்கள்.

''பாண்டுரங்கா... பாண்டுரங்கா... பாண்டுரங்கனின் அருள். பாண்டுரங்கனின் கிருபை!'' இது வாழைப்பழத்தைப் பற்றி சிறிதும் யோசிக்காமல் அந்த இளைஞனின் வயிற்றை மறுபடியும் தடவிக் கொடுத்தார்.

''செத்துப்போய் விடலாம் என்று நினைத்தேன். இங்கு வந்த பிறகு வாழ வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது. பாண்டுரங்கன் அழைக்கும்போதுதான் போகவேண்டுமே தவிர, அதற்கு முன்னால் என்னை நானே மாய்த்துக் கொண்டால் நான் நல்லுலகம் போக மாட்டேன் என்பது புரிந்து விட்டது. ஒரு நாள் முழுவதும் இந்த பூஜையில் கலந்துகொண்டு மறுநாள் வீட்டிற்குப்போக, அங்கு நல்ல செய்தி காத்துக் கொண்டிருந்தது. எனக்கு வர வேண்டிய பணம் வந்து விட்டது. வாழ்க்கையில் மறுபடியும் நம்பிக்கை வந்துவிட்டது.தேவையில்லாமல் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தால் நல்ல நிலைக்கு நான் வந்திருக்கவே மாட்டேன்.'' இன்னொருவன் கைகூப்பி வணங்கினான். காணிக்கை வைத்தான்.

''என்ன குறை உமக்கு?''

''இரவு தூக்கம் வரவில்லையென்று உங்களுடைய நாம சங்கீர்த்தனத்திற்கு வந்தேன். உங்களோடு நானும் என்னை அறியாமல், பாண்டுரங்கருடைய பெயரை பல முறை சொன்னேன். அந்தப் பெயர் உள்ளுக்குள் பற்றிக் கொண்டு விட்டது. குளிக்கும்போதும் உண்ணும்போதும், வேலைக்குப் போகும்போதும், ஏர் உழுகிறபோதும், மாடுகளை குளிப்பாட்டுகிறபோதும், புல்லை அறுத்துப் போடுகிறபோதும் நான் பாண்டுரங்கன் பெயரையே சொல்லிக் கொண்டிருக்கிறேன். வழக்கமாக பல விஷயங் களுக்கு பல முறை கோபப்படுவேன். ஒரு முறைகூட கோபப்படவேயில்லை. மாடுகளை கோபப்பட்டு சவுக்கால்



அடிப்பேன். சவுக்கை தொடவே மனம் வரவில்லை. மாடுகள் உரசி நிற்கின்றன. மனைவி பிரியமாகப் பார்க்கிறார். என் கோபம் என்னை விட்டு மறந்து விட்டதய்யா. இது உங்களால்தான். ஆயிற்று. வேறு யாரோ விழுந்து காலைப் பற்றிக் கொண்டு முத்த மிட்டார்கள்.

அதற்கும் அவர் 'பாண்டுரங்கா...பாண்டுரங்கா...' என்று பதில் சொன்னார்.

ஜீஜாபாய் புருஷனையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவருக்கு முன் வாழ்ந்த ஞானதேவர், ஏசுநாதர், நாமதேவர் போன்றவர்களின் பாடல்களைப் பாடிக் கொண் டிருந்தவர், தான் எழுதிய பாடல்களை வெளியே சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டிருந்தவர், தொடர்ந்து பாடல்கள் புனைய ஆரம்பித்தார்.

பல சபைகளில் அவைகளை பாட ஆரம்பித்தார். இதை யாரோ பெரியவர்களின் பாட்டு என்று சபையும் அந்தப் பாடல்களை அங்கீகரித்துப் பாடத் துவங்கியது. தான் தொடர்ந்து பாடல்கள் புனைய வெட்கமாக இருந்தது. செய்யலாமா, கூடாதா என்ற எண்ணம் வந்தது. மறுபடியும் கர்வம் வந்துவிடுமோ என்ற பயம் இருந்தது. தனிமையில் அழிந்து போன அகங்காரம் மறுபடியும் உள்ளுக்குள் வந்து உட்கார்ந்து கொள்ளுமோ, மிகப் பெரிய கவிஞன், பக்திமான் என்று பலர் பாராட்ட, திரும்பவும் கொம்பு முளைத்து விடுமோ என்று பயந்தார்.

துகாராமிற்குள் பாண்டுரங்கன் தோன்றினார்.

''பாடு. பாடுவதற்காகத்தான் பிறந்திருக்கிறாய்'' என்று ஊக்கப்படுத்தினார். அவர் தயங்கியபோது நாமதேவர் கனவில் தோன்றினார்.

''துகாராம் நான் புனைய இருந்த நூறு கோடிப் பாடல்களில் தொண்ணூற்று நாலு கோடியே நாற்பது லட்சம் பாடல்களை நான் எழுதி விட்டேன். மீதி இருக்கின்ற ஐந்து கோடியே அறுபது லட்சம் பாடல்களை நீதான் புனைய வேண்டும். உன் பாடல்களை இந்த ஊரை குளிர்விக்கும். பாடுபவரை மகிழ்விக்கும். தயவுசெய்து பாடு'' என்று நாமதேவரும் வற்புறுத்த, அவருக்கு பாடல் புனையும் கலை எளிதில் கை வந்தது.

வெகு எளிதாக, மிக வேகமாக பாடல்கள் புனைந்து, அவைகளை எழுதியும் வைத்துக் கொண்டார்.

மக்களுக்கு பாடிக் காட்டுகிற பொழுது அவர்கள் அதைப் பாடி மனம் மயங்கினார்கள். கண்ணீர் பெருகினார்கள். உள்ளம் உருகி நின்றார்கள்.

''ஐயா, வாழ்க்கையின் தத்துவத்தை மிக எளிதாகப் புரிய வைக்கிறீர்கள். கடவுளை நீங்கள் உணர்ந்தவர்கள் என்று இந்த பாடல்கள் சொல்கின்றன. நேரடியாக கடவுளை உணர முடியாதவர்களால் இப்படிப்பட்ட வாக்கியங்களை வைத்து ப்பாடல்கள் புனைய முடியாது. பகவத் கீதை சொன்ன விஷயம் எனக்குப் புரியவில்லை. உங்கள் பாடல் புரிகிறது. பகவத் கீதையைவிட உங்கள் பாடல்கள் எளிமையாக இருக்கின்றன. பாடப் பாட மனசுக்குள் சந்தோஷம் பொங்குகிறது. பாண்டுரங்கனை நேரே பார்ப்பது போல் தெரிகிறது. உங்களுக்கு நாங்கள் ஏதேனும் செய்ய வேண்டுமா?'' மக்கள் அருகே நெருங்கி வந்தார்கள். பெரிய குழுவாய் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

துகாராம் இதைக் கொடு, அதைக் கொடு என்று கேட்கவேயில்லை. அவர்களாகவே துகாராம் வீட்டிற்கு வேண்டியதை கொண்டு போய் கொடுத்தார்கள்.



வாழ்க்கை மிருதுவாக ஓடிக் கொண்டிருந்தது.

அடுத்த வேளை உணவுக்கே கையைப் பிசைந்து கொண்டிருந்த துகாராமின் குடும்பம் வயிறார உண்டது. மற்றவருக்கும் போட்டது. மிகப் பெரிய பணம் சேர வில்லை. சேர்க்கின்ற எண்ணம் துகாராமிற்கு நெல் முனையளவும் இல்லை. அதே நேரம் வாழ்க்கையில் அன்றாடத் தேவைகள் என்ன வேண்டுமோ அவை குறைவறக் கிடைத்து வந்தன.

தன்னை சரணடைந்தவர்களின் தினசரி க்ஷேமத்தை பார்த்துக் கொள்கிறேன் என்று பகவான் பகவத் கீதையில் சொன்னதை நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

பாண்டுரங்கனின் அருளால் அந்த வீடும், அந்த கிராமமும் சுகமாக, எந்தக் குறையுமின்றி அமைதியாக வாழ்ந்து வந்தார்கள்.

துகாராமை மிகப் பெரிய மகான் என்று கருதி போற்றி வந்தார்கள்.

எழுதப்படிக்கத் தெரியாத கிராமத்து மக்கள் துகாராமின் இனிமையான பாடல்களில் மயங்க, அதை கண்டிக்கிறவர்களும் அந்தக் கிராமத்தில் இருந்தார்கள்.

அந்த ஊரில் வாழ்ந்த ராமேஸ்வர சாஸ்திரிகள் என்ற அந்தணர். வேதவித்தகர். ஜனங்கள் துகாராம்பால் ஈடுபடு வதைப் பார்த்து பொறாமை கொண்டார். பல் கடித்தார்.

இது என்ன. ஒரு வியாபாரிக்குப் போய் இத்தனை பெரிய கூட்டம். அந்தணர்கள் வந்தால் எழுந்து நிற்க வேண்டாமா. கைகட்டி பேச வேண்டாமா. நான் நடந்து வரும்போது எதிரே தலை தெறிக்க கோவிலை நோக்கி ஓடுகிறார்களே, மரியாதைக்குக்கூட நின்று வணக்கம் சொல்லாமல் துகாராம் பாடல்களைப் புகழ்ந்து கொண்டு

போகிறார்களே. வருவது தெரிந்தும் பாராதது போல் முகம் திருப்பிக் கொள்கிறார்களே, அந்தணர்களை மதிக்காத தேசம் உருப்படுமா?

பிரபுக்கள் அந்தணர்களை மதிக்காமல் வருமானம் போயிற்று. மொகலாயர்கள் வந்ததும் மானம் போயிற்று. இப்பொழுது இந்த ஜனங்களும் மதிக்கவில்லையென்றால் எந்த மரியாதையும் இருக்காது. தனக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசமும் இருக்காது. மிக உயர்ந்த பிறப்பான அந்தணர்கள் குடியில் பிறந்து சாதாரணமாக வாழ வேண்டியதுதான். எனவே சாதாரணமாக வாழ்வது மட்டுமல்ல, ஒரு வியாபாரிக்கு கைகட்டி பணிந்து நின்று, அவரையே மகான் என்று கொண்டாடிக் கொண்டிருக்க வேண்டியதுதான். எனவே, இந்த மகான் என்கிற கொண்டாட்டத்தை வெகு நிச்சயமாய் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஜனங்களை திசை திருப்பி பயனில்லை. அவர்களை பாட்டு ஆட்கொண்டு விட்டது. அற்புதம், அற்புதம் என்று எல்லாம் புரிந்தது போல அந்தப் பாட்டை பாடிவிட்டு இவர்கள் தலையசைக்கிறார்கள். சகலரும் தபஸ்விகளாகி விட்டதாய் நினைக்கிறார்கள்.

இவையெல்லாம் பகவத்கீதையிலிருந்து எடுத்த விஷயம்தானே. பகவத் கீதை என்பது வேதத்தின் சாரம் தானே. வேதம் என்பது அந்தணர்களின் உரிமைதானே. இந்த மனிதன் எப்படி அதைப் பற்றி பேசலாம். ஒரு வைசியன் எப்படி இதற்கு உரிமை கொண்டாடலாம். யார் எதைச் செய்வது என்று ஒரு வரம்பில்லையா... கூப்பிடு... கூப்பிடு அந்த துகாராமை. அவர் ஆள் அனுப்பினார். துகாராமை வரச் சொன்னார்.

ஊரின் பெரிய மனிதர் கூப்பிடுகிறார் என்று துகாராம் விரைந்தோடி வந்து கை கட்டி நின்றார்.



அவருடைய பணிவு, இயல்பான பணிவு. எல்லா உயிரையும் நேசிக்கின்ற பணிவு.

அந்தப் பணிவை, அந்தணர் தனக்குப் பயந்து கைகட்டி துகாராம் நிற்கிறார் என்பதாய் புரிந்து கொண்டார். அந்தணர்கள் சபித்து விடுவார்கள் என்று நடுக்கமிடுவதாய் கற்பிதம் செய்து கொண்டார்.

தவம் என்பது பரம்பரையாய் வருவதல்ல. அது பூர்வீகச் சொத்து அல்ல. அது வினைப்பயனாலும், பூர்வ ஜென்ம வாசனையாலும் ஏற்படுவது. எல்லாவற்றையும் உதறி நிற்பதால், உள்ளிருந்து கிளர்ந்து எழுவது. கடவுள் அனுக்கிரகத்தால் ஏற்படுவது. எல்லாம் தெரிந்ததாய் நடிக்கிறவர்களுக்கு இந்த சாதாரண விஷயம்கூட தெரியாது போகும்.

என்ன என்று உண்மையாகப் பார்க்கிறவர்களுக்கு எல்லா விஷயமும் எளிதில் தெரியும். துகாராம் அந்தணர் கண்களைப் பார்த்தவுடன் அதில் பொறாமை வழிவதைக் கண்டார். முதத்தில் இறுக்கத்தைப் பார்த்ததும் தன்னை அவர் வஞ்சிக்கப் போவது நிஜம் என்பதைப் புரிந்து கொண்டார். அவர் உட்கார்ந்திருக்கின்ற தோரணையைப் பார்த்ததும் தானே எல்லாவற்றிற்கும் முதல்வனாக இருக்க வேண்டுமென்ற அகங்காரத்தை அறிந்து கொண்டார்.

''ஐயா! என்ன வேண்டும்?'' என்று பணிவோடு கேட்டார்.

''பாடல்கள் எழுதுகிறாயாமே. உண்மைதானா?''

''ஆமாம்.''

''எதைப் பற்றி பாடல்கள் எழுதுகிறாய்?''

''இறைவனைப் பற்றி பாடல்கள் எழுதுகிறேன்.''

''இறைவனைப் பற்றி பாடல்கள் எழுதுவது சரி. ஆனால், வேத விஷயங்களை அதில் சொல்லுகிறாயாமே. உனக்கு வேதம் பயிற்சி உண்டா?''

''இல்லை ஐயா.''

''யாரிடமாவது குருகுலவாசம் செய்திருக்கிறாயா?''

''இல்லை ஐயா.''

''வேதம் என்ன சொல்கிறது என்றாவது தெரியுமா?''

''தெரியாது ஐயா.''

''பிறகு வேதக் கருத்துகள் உன்னுடைய பாடல்களில் வருகின்றனவே. அது எப்படி?''

''எனக்குத் தெரியாது. எனக்குள் அது ஸ்பூரிக்கிற விஷயம். நான் படித்த ஒரே புத்தகம் பகவத்கீதை. அதை ஆழ்ந்து யோசிக்கிற பொழுது பல விஷயங்கள் எனக்குப் புரிபடுகின்றன. உள்ளிருந்து ஒரு உட் குரல் இதைச் சொல்கிறது. அந்த வார்த்தைகளை வைத்துக் கொண்டு நான் பாடல்கள் புனைகிறேன். இது இதுதான் என்பது உள்ளே எவரோ எனக்கு உணர்த்த, அதையே பாடலாக்குகிறேன். இது இறையின் அருட்கொடை. கருணை என்றுதான் தோன்றுகிறது.''

''அவ்வளவு வேகமாக நீ முடிவு செய்ய வேண்டாம். உன்னுடைய பாடல்களைப் பற்றி உன்னுடைய தபஸைப் பற்றி முடிவு செய்யவேண்டியது நான். இந்த ஊரின் முதல் அந்தணன். கவிதை செய்கிறவர்கள் எல்லோரும் மகானாகி விட்டால் நாடு தாங்குமா. வேதக் கருத்துகளை உன் கவிதைகளில் வைப்பதற்கு உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. எவர் மூலமோ லேசாகத் தெரிந்து கொண்டு வேதக் கருத்துகளை சொல்வதும் நல்லதல்ல. யார் எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்வதுதான் சிறப்பு. நான்தான் வேதம் பற்றியும் வேதத்திலுள்ள கருத்துகள் பற்றியும், மக்களுக்கு விளக்கிச் சொல்ல இருக்கிறவன், உங்களைப் போன்ற பாடல்கள் செய்கிறவர்களுக்கு அருவி, மலை,



குளம், பறவை, மிருகம் போன்ற விஷயங்கள் இருக்கின்றன. அம்மாதிரியான சிருங்காரமான விஷயங்களைச் சொல்லி விட்டுப் போங்கள். ஆழ்ந்த தத்துவங்களைச் சொல்ல உனக்கு உரிமையில்லை. நீ வைசியன் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்.

ஒரு பொன்னுக்கு காசு வாங்கி மூன்று பொன்னுக்கு விற்கின்ற கெட்டிக்காரன் நீ. அந்த வம்சம் நீ என்பதை புரிந்து வைத்துக் கொள். அதேவிதமாய் எங்கிருந்தோ வேதத்தை கற்றுக் கொண்டு அதற்கு வேறுவிதமான முலாம் பூசி பாடல்கள் என்று சொன்னால் நான் விடுவேனா. உனக்கு காணிக்கைகள் ஏராளமாக வருகின்றனவாமே. தினசரி வீட்டிற்கு உணவுகள் அனுப்பப்படுகின்றனவாமே. அவையெல்லாம் எங்கிருந்து வந்தன. வேதக் கருத்துகளை சொல்வதால்தானே. அதைச் சொல்ல உனக்கு அதிகாரம் இல்லை. இனிமேல் இந்தப் பாடல்களை நீ பாடக்கூடாது. நீ எழுதிய பாடல்களையும் மற்றவர்கள் பாடக்கூடாது. உன் பாடல்கள் அத்தனையும் நீ உடனே புறக்கணிக்க வேண்டும். உடனே தீயிட்டு கொளுத்திவிட வேண்டும்'' என்று கட்டளையிட, கண் மூடி துகாராம் உள்ளுக்குள் இருந்த பாண்டுரங்கனிடம் கரம் குவித்தார்.

'ஐயனே, பாண்டுரங்கா... நான் என்ன செய்வது? ஊரைக் கூட்டி என்னை நிற்க வைத்து ஒரு அந்தணர் இப்படிக் கட்டளையிடுகிறார். நான் வேத விஷயங்களை திருடி விட்டதாகச் சொல்கிறார். எனக்கு அதைப் பற்றி பேச அதிகாரமில்லை என்று சொல்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள். அதை நான் செய்கிறேன்.'

'நான் உன்னோடு இருக்கிறேன். நீ என்ன செய்தாலும் உனக்கு அருகே இருக்கிறேன். வேதம் என்பது வெறும் வாக்கியமல்ல. அது ஒரு ரகசியம். வாக்கியங்களுக்குள்

பொதிந்திருக்கும் ரகசியம். வாக்கியங்களை மனனம் செய்துவிட்டால் ரகசியம் புரிந்து விட்டதாகாது. வெறும் வாக்கியங்கள்தான் மனதில் நிற்கும். ரகசியத்தை புரிந்து கொள்ள நிதானம் தேவை. பொறுமை தேவை. பணிவு தேவை. கனிவு தேவை. அந்த அந்தணரிடம் இது இல்லை. நீ அமைதியாக இரு. வேடிக்கை பார்' என்று உள்மனம் பாண்டுரங்கனாய் நின்று கட்டளையிட்டது

மறுபடி மிகுந்த பணிவோடு உள்ளுக்குள் இருக்கிற பாண்டுரங்கனைத் துகாராம் வணங்கினார்.

''சரி. நீங்கள் சொன்னது போல என்னுடைய எழுத்துகளை நான் அழித்து விடுகிறேன். வேதத்தை தீயிட்டுக் கொளுத்துவதான ஒரு செய்கை செய்வதற்கு நான் பயப்படுகிறேன். அப்படிச் செய்வதற்கு எவருக்குமே உரிமையில்லை என்று நினைக்கிறேன். எனவே, அதில் வேதசாரம் இருப்பது என்பது உண்மையெனில், நீங்கள் சொல்வது போல் அது வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட விஷயங்களாக உங்களுக்குத் தோன்றியதெனில், அந்த வேதத்தை மதிக்கிற வண்ணமாக பல்கிப் பெருகி ஓடுகின்ற இந்திராணி நதியில் என்னுடைய பாடல்களை எறிந்து விடுகிறேன்'' என்று சொல்ல, அந்தணர் சரியென்று தலையசைத்தார்.

பாடல்கள் ஒரு மூட்டையாக கட்டப்பட்டு ஒரு பெரிய கல்லில் இணைக்கப்பட்டு நடு ஆற்றில் கொண்டு போய் போடப்பட்டது.

ஜனங்கள் அழுதார்கள்.

'எல்லோருக்கும் இந்தப் பாடல்கள் பயன்படும் என்று நினைத்தோமே. மஹாராஷ்டிரம் முழுவதும் பரவும் என்று நினைத்தோமே. மராட்டி அறிந்தவர்கள் அத்தனை பேரும் இதைப் பாடி பயன்பெற வேண்டுமென்று ஆனந்தித் தோமே. இப்படிப் போட்டு விட்டீர்களே. யாரோ ஒரு அந்தணன் சொன்னதற்காக இதை வீசி விட்டீர்களே' என்று குழம்பினார்கள்.



அந்த அந்தணனை முறைப்பாக நோக்கினார்கள்

''இது உமக்கு அடுக்குமா?'' என்று சபித்தார்கள்.

''இஸ்லாமிய ஆட்சியில் ஏதோ எங்களுக்குத் தெரிந்த பாடல்களை பாடிக் கொண்டிருந்தோம். அதையும் தடுத்து நிறுத்தி விட்டீர்களே.''

''வேதங்கள் சொல்ல முடியவில்லை. ஹோமம் பண்ண முடியவில்லை. பெரிய யாகங்களைச் செய்ய துப்பில்லை. அரசர்களுடைய மதிப்போ, மரியாதையோ உங்களுக்கு கிஞ்சித்தும் கிடைப்பதில்லை. வெறுமே திண்ணையில் உட்கார்ந்து பேசிப் பேசி பொழுது போக்குகிறீர்கள். வீண் வம்புகளில் ஈடுபடுகிறீர்கள். மன நிம்மதிக்காக நாங்கள் பாடுகின்ற பாடல்களையும் இப்படிச் செய்து விட்டீர்களே. அந்தப் பாடல்கள் எப்படியிருந்தால் என்ன. வேத விஷயம் வேதத்திலும் இருக்கிறது. பாடல் களிலும் இருக்கிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டியது தானே. இந்தப் பாடல் வேத விஷயத்தைச் சொல்லலாகாது என்று மறுத்துப் பேச நீங்கள் யார்? வேதத்திற்கு பரிபூரண சொந்தம் கொண்டாட உங்களுக்கு எவர் உரிமை தந்தது?'' என்ற கிராமத்து இளைஞர்கள் முறைத்துப் பேச, அந்தணர் அவர்களை தனது செல்வாக்கினால் அடக்கினார்.

''ஒரு அந்தணரை இப்படி இளைஞர்கள் எதிர்த்துப் பேசுகிறார்கள், முதியோர்களாகிய நீங்கள் இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே. இதுதான் வழக்கமா. இந்த தேசம் ஏன் இஸ்லாமியர்களால் சூறையாடப்படாது.

அந்தணர்களை அவமதித்த நாடு உருப்படுமா?'' என்று கத்த, அந்த ஊரிலுள்ள மற்ற முதியவர்கள் இளைஞர்களை அடக்கி அந்தணரை அவமதிப்பது தவறு என்று சொன்னார்கள்.

எல்லோரும் திரும்பி துகாராமை பார்த்தார்கள்.

ஊர்ப் பெரியவர்கள் அந்தணர்களை அவமதிப்பது தவறு என்று கருதுகிறபடியால். நாம் அந்தணர் என்ன சொல்கிறாரோ அதைக் கேட்பதே நல்லது.

நெல்முனையளவும் எது பற்றியும் கவலைப்படாது சகலத்தையும் பாண்டுரங்கன் கைகளில் ஒப்படைத்து விட்டு அமைதியாக இருங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

பாடல்கள் ஆற்றில் அடித்துப் போனதை திரும்பத் திரும்பச் சொல்லி ஊர் துக்கப்பட்டது. பாடல்கள் திடீரென்று நின்றுபோனதால் தடுமாறித் தவித்தது. பாடல்கள் பாடக்கூடாது. கூட்டமாய் உட்கார்ந்து அதைப் பற்றி பேசக்கூடாது என்று கட்டளையிட்டாலும் அந்தக் கட்டளையை ஏற்கத் தயார் என்று துகாராம் சொன்னதாலும், கூட்டம் அமைதியாக இருந்தது. ஆனால், அதுவரை கேட்டிருந்த பாடல்களை, அதுவரை மனனம் செய்த பாடல்களை இடையறாது, ரகஸியமாய் சந்தேகங்களை கேட்டு தெளிந்து, பாடினார்கள். ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே பாடத்துவங்கினார்கள். தன் வீட்டுக்குள் பாடத் துவங்கினார்கள். வெறுமே கேட்டுக் கொண்டிருப்பது என்பது நின்று போய் சகலரும் அந்தப் பாடல்களை மனனம் செய்து, திரும்பத் திரும்ப யோசித்து ஞாபகத்திற்குக் கொண்டு வந்து உரக்கப் பாடினார்கள்.

என் வீட்டிற்குள் நான் பாடுவேன். பொது இடத்தில் தானே பாடக்கூடாது என்று ஒவ்வொருவரும் நினைத்து அந்தப் பாடல்களை உருவேற்றிக் கொண்டார்கள். இன்னும் அற்புதமாக ரசித்து பாடினார்கள்.



இது வேத விஷயமா. வேதம் இதைத்தான் சொல்கிறதா. இவ்வளவு எளிமையான விஷயமா வேதம் என்று வேதத்தையும் கொண்டாடினார்கள். இப்படிப்பட்ட வேதத்தை மிகப் பெரிய விஷயம் என்றும், யாருக்கும் தெரியாது என்றும் இவர்கள் ஏன் சொல்கிறார்கள். எளிமையான இந்தத் தத்துவத்தை எவ்வளவு அழகாசு துகாராம் புரிய வைத்திருக்கிறார். துகாராம் ஞானியா. அந்த அந்தணன் ஞானியா. ஆனால், என்ன அநியாயம். எல்லாப் பாடல்களும் ஆற்றில் போய்விட்டனவே. எனக்கு இருபது பாடல்கள்தானே ஞாபகம் இருக்கிறது. மீதி பாடல்களை மனனம் செய்யாமல் போனோமே என்று மனம் நொந்தார்கள். 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா... இது என்ன சோதனை' என்று ஊர் மொத்தமும் பாண்டுரங்கனை நினைத்து, நெஞ்சுருகிப் பாடல் போனதுக்காக துக்கப்பட்டு நின்றது.

துகாராம் மௌனமானார்.

யாரோடும் எதுவும் பேசாமல், எதுவும் உண்ணாமல் நீர்கூட குடிக்காமல் அவர் எழுப்பிய கோயிலுக்குள் சுருண்டு கிடந்தார். அவர் உடல் நிலை மோசமாகியது, ஊர் மக்கள் பயந்தார்கள். உணவு உண்ணும்படி வற்புறுத்தினார்கள். சிறிதளவு மோராவது குடிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், துகாராம் மௌனமாக எல்லா வற்றையும் மறுதலித்துவிட்டு பாண்டுரங்கன் நினைவாகவே இருந்தார்.

அவருடைய தவத்தின் இன்னொரு கட்டம் - சில இளைஞர்களின் கனவில் பாண்டுரங்கன் தோன்றி, அவருடைய பாடல்கள் மறுபடியும் இந்திராணி நதியில் மிதக்கும் என்றும், நீந்திப் போய் எடுத்து வர வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

மறுநாள் காலை அந்த இளைஞர்கள் இந்திராணி நதிக்கரைக்கு ஓடினார்கள். அவர்கள் ஓடுவது பார்த்து ஊர் மக்கள், என்ன... என்ன... என்று கேட்டார்கள்.

அதில் ஒருவர் காரணம் சொல்ல, ஊர் மொத்தமும் திரண்டு இந்திராணி நதிக்கரைக்கு ஓடியது. அலை புரண்டு ஓடும் நதியை ஆவலாகப் பார்த்தது.

சூரியன் உதிக்கின்ற நேரத்தில் நதியினுடைய ஆரம்பப் பகுதியிலிருந்து ஒரு கல் உருண்டு ஓடி வந்தது. அந்தப் பாறைக்கல் மிதந்தது. அதன் மீது அவருடைய பாடல்கள் அடங்கிய மூட்டை இருந்தது.

இளைஞர்கள் நீரில் குதித்தார்கள். வேகமாக நீந்தினார்கள். பாடலைப் போய் அணைத்துக் கொண்டார்கள். நான்கு பேராக தள்ளிக் கொண்டு வந்து கரையில் சேர்த்தார்கள். ஊர்ஜனங்கள் அந்தப் பாடல் மூட்டையை வாங்கிக் கொண்டார்கள். மேலே எடுத்து வைத்து பிரித்துப் பார்த்தார்கள். அத்தனையும் துகாராமின் பாடல்கள். அவர் கைப்பட எழுதி இந்திராணி நதிக்கரையில் போடப்பட்ட பாடல்கள்.

ஊர் ஆனந்தக் கூத்தாடியது. மகிழ்ச்சியில் துள்ளியது. 'துகாராம்... துகாராம்...' என்று அவர் பெயரை உரத்துக் கூறியது. 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா...' என்று அவர் செய்யும் பஜனையைப் போலவே தானும் செய்தது. துகாராம் எப்படி நாமாவளியைச் சொல்லுவாரோ அதேபோல ஊரும் சொல்லியது. அந்தணன் வீட்டு முன்பு பழியாய் நின்று சொல்லியது.

அந்தணருக்கு இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது.

அந்தணர் ராமேஸ்வர சாஸ்திரி வெட்கித் தலை குனிந்தார்.



துகாராம் இருக்கும் திசை நோக்கி கை கூப்பினார். ''இறைவனே சரி என்று சொன்ன பிறகு நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. வாழ்க துகாராம்'' என்றார்,

ஊர் துகாராமை தலையில் வைத்துக் கொண்டாடியது.

துகாராம் தொடர்ந்து பாடல்கள் எழுதினார்.

நல்லதைச் சொல்பவர்தான் ஞானியா. இல்லை துகாராம் போன்றவர்கள் கெட்டதிலிருந்தும் விடுதலை தருவார்கள். நீங்கள் பாதிக்கப்பட்டபோது உங்களை மீட்டு நல்வழிப்படுத்துவார்கள்

நீங்கள் வேதனைப்படுகிறபோதும் உங்கள் முதுகைத் தடவி உங்களைக் குணப்படுத்துவார்கள்.

அந்த ஊரிலுள்ள ஒரு முகமதியரின் பெரிய வீட்டு வாசலில் நீர் ஊற்று இருந்தது. மழைக் காலங்களில் பலத்த மழை மலைகள் பக்கம் பெய்வதால் நீர் இடையறாது நிரம்பி வழிந்த சுனைகளிலிருந்து வழிந்து. அந்த வீட்டின் வழியே சளசளத்து ஓடிக் கொண்டிருக்கும். நீர் பொங்கிப் பொங்கி அங்கும் ஓடும். சிறு ஓடையோடு கலக்கும்.

அந்தணரான அந்த ராமேஸ்வர சாஸ்திரி, மறுபடியும் தன்னுடைய புகழை நிலைநிறுத்த வேண்டி தன் கம்பீரத்தைக் காட்ட வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டு, ஒரு இஸ்லாமியருக்குச் சொந்தமான நீரூற்றில் நிதானமாக இறங்கி குளிக்கத் துவங்கினார்.

ஒரு அனுமதி கேட்க வேண்டுமென்ற மரியாதைகூட இல்லாமல் நடந்து கொண்டார்.

மொகலாயர்கள்தான் ஆட்சி செய்கிறார்கள். ஆனாலும் என்ன, மொகலாயர்களுக்கு நாங்கள் பயந்துவிட மாட்டோம் என்று மராட்டியர்கள் எதிர்ப்புக் குரல்

கொடுத்துக் கொண்டிருந்த காலம் அது. சத்ரபதி சிவாஜியின் சிறுபடைகள் மொகலாயர்களுக்கு மிகப் பெரிய தலைவலியாய், துர்சொப்பனமாய் இருந்த கால கட்டம் அது. மராட்டியப் படைவீரர்கள் கொடுத்த தைரியத்தில் இந்த அந்தணர் அங்கு போய் குளிக்க, அந்த வயதான இஸ்லாமியன் தொழுகை முடித்து, அவர் செய்கின்ற அசிங்கத்தைப் பார்த்து வருத்தப்பட்டு, எதிர்க்க பயந்து, இவர் உடம்பு எரியவேணடும் என்று மந்திரம் ஜபித்தான்.

ராமேஸ்வர சாஸ்திரியின் உடம்பு எரியத்துவங்கியது. எத்தனை சந்தனம் தடவினாலும், எவ்வளவு மாற்று மருந்துகள் போட்டாலும் வெப்பம் தகித்தது. சொரிந்து சொரிந்து எல்லா இடங்களும் புண்ணாகின.

ராமேஸ்வர சாஸ்திரி பயந்து போனார். இறந்து விடுவோமோ என்று கவலைப்பட்டார். 'பாண்டுரங்கா... பாண்டுரங்கா' என்று அலறினார்.

இரவு அவருக்கு ஒரு கனவு வந்தது.

கனவில் பாண்டுரங்கன் கோவில் தெரிந்தது. பாண்டுரங்கன் உள்ளிருந்து அசரீரியாகப் பேசினான். உருவம் காட்டாது குரல் கொடுத்தான்.

''பெரிய வேதவித்து என்று சொல்லிக்கொள்கிறாயே. எல்லாம் தெரிந்தவன் என்று அலட்டிக் கொள்கிறாயே. உன்னைத்தான் உயர்ந்தவனாக கொண்டாட வேண்டுமென்று ஊர் முழுக்க கட்டளை போடுகிறாயே. உனக்கு எதிராக ஒருவன் மந்திரம் ஜபித்தால் அதை நீக்கக்கூட உனக்கு தெரியவில்லையே. உன் வேதம் என்ன ஆனது. உன் தவத்திற்கு என்ன பலன். நீ ஒன்றும் அறியாத முட்டாள். நிர்மூடன் என்பதை ஒத்துக்கொள்கிறாயா. ஒரு இஸ்லாமியன் உன்னை சபித்ததற்கு நீ மாட்டிக் கொண்டு



பேரவஸ்தை பட்டுக் கொண்டிருக்கிறாய். இந்தத் துன்பம் நீங்க வேண்டுமென்றால், போ... போய். துகாராம் காலில் விழு. மன்னிப்புக் கேள். அந்த இஸ்லாமியன் உன்னை தண்டிக்கவில்லை. நான் தண்டித்தேன். உடம்பு நலமாக வேண்டுமென்றால் துகாராம்தான் அதற்கு வழி' என்று சொல்லி அசரீரி பின்வாங்கியது. கோயில் மறைந்தது.

திடுக்கிட்டு எழுந்த ராமேஸ்வர சாஸ்திரி, கவலையானார். தன்னைச் சேர்ந்தவர்களிடம் தனக்கு ஏற்பட்ட கனவைத் தெரிவித்தார்.

துகாராமிற்கு ஆள் அனுப்பி, தான் வேதனைப் படுவதாக சொல்லி அனுப்பினார். நேரில் சொல்ல வெட்கப் பட்டார்.

துகாராமிற்கு ராமேஸ்வர சாஸ்திரியின் வெட்கமும் வேதனையும் புரிந்தது.

அது கருணையில் ஊறி கருணையை கடைப் பிடிக்கும் மனமல்லவா. எனவே ஆள் அனுப்பியதுமே அவருடைய நோய் தீருவதற்காக பாடல் ஒன்றை துகாராம் பாடினார்.

உன் அகங்காரங்களை விட்டுவிட்டு பாண்டுரங்கனை சரணடைந்தால், கொடும் பகைவர்கள், விலங்கினங்கள், நோய், பீதி இவற்றால் ஆகிய எல்லா தீங்குகளும் விலகிப் போகும். பாண்டுரங்கனின் சார்பாக பாண்டுரங்கனின் பக்தர்களுக்கு நான் இதைச் சொல்லிக் கொள்கிறேன். உறுதி கூறுகிறேன் என்று பாடல் எழுதினார்.

அவர் பாடப் பாட, ராமேஸ்வர சாஸ்திரியின் உடல் நலம் குணமடைந்தது.

இன்னும் துகாராமின் புகழ் மராட்டிய மாநிலம் முழுவதும் பரவியது. பெரும் பணக்காரர்கள் வந்து அடிபணிந்தார்கள். வீட்டின் வறுமை நீங்கியது.

''உங்களுக்கு ஒரு வருடத்திற்கு வேண்டிய தானியத்தை நான் தருகிறேன். என் நிலத்திலிருந்து தருகிறேன்.'' ஒரு பணக்காரன் தானாக முன்வந்து அடி பணிந்தான்.

''சந்தோஷம்!'' துகாராம் கை கூப்பினார்

தானியம் கிடைக்கிறதே என்று சந்தோஷப்படவு மில்லை. இதுவரை கொடுக்காமல் எங்கே போயிருந்தாய் என்று அவனை விசாரிக்கவும் இல்லை. சகலமும் பாண்டுரங்கன் அருள் என்று மௌனமாக இருந்தார்.

''ஆனால், ஒரேயொரு வேண்டுகோள்.'' பணக்காரன் ஒருவன் வேண்டுகோள் வைத்தான்.

''ஒவ்வொரு வருடமும் சரியான தருணத்தில், என்னுடைய வயலில் பூச்சிகள் வந்து விடுகின்றன. இதனால் விளைச்சல் பாதிக்கிறது. இந்த முறை பூச்சிகள் விழாமல் இருக்க, நீங்கள் பிரார்த்தனை செய்து கொண்டால், நான் வெகு நிச்சயமாக உங்களுக்கு தானியங்கள் அனுப்புகிறேன்'' என்று சொல்லி தானியங்களை அனுப்பத் துவங்கினான். மாதாமாதம் கூடை கூடையாக கொண்டு வந்து இறக்கினான். வேறு என்ன வேண்டும் என்று கேட்டு பவ்யமாக நின்றான். ஜீஜாபாயின் மனமும் குளிரச் செய்தான்.

பயிறு வளர்ந்தது. முற்றியது. தலை சாய்ந்தது, மறபடியும் அந்த வருடமும் பூச்சிகள் வந்தன. பயிரை மேய்ந்தன.

பணக்காரன் கோபமானான்,

''நீங்கள் பிரார்த்தனை செய்தும் பூச்சிகள் வந்திருக் கின்றனவே. அப்பொழுது என்ன அர்த்தம். ஊன்றி நீங்கள் பிரார்த்தனை செய்யவில்லை என்று அர்த்தம். அல்லது நீங்கள் பிரார்த்தனை செய்தால் எதுவும் நடக்காது என்று அர்த்தம். இதற்கு தானியம் அனுப்பியதே வீண். தானியத்திற்கு தயவுசெய்து காசு கொடுத்து விடுங்கள். எனக்கு ஏற்கெனவே அதிகம் நஷ்டமாகி விட்டது. அந்த



தானியமும் நஷ்டமாக வேண்டாம்'' என்று சொல்ல, துகாராம் சரி என்று சொன்னார்.

ஆனால், அறுவடை முடித்து அளந்து பார்த்தபோது போன முறையைவிட இந்த முறை மகசூல் அதிகம் இருந்தது. பூச்சிகள் வந்து விழுந்தனவே அன்றி பயிரை நாசம் செய்யாமல் வேறு இடத்திற்கு பூச்சிகள் நகர்ந்து விட்டன.

அந்தப் பணக்காரன் தன்னுடைய பதட்டமான பேச்சுக்கு மனம் வருந்தினான். மறுபடியும் அவர் காலில் விழுந்தான்.

''அதனால் என்ன, நான் மறந்து விட்டேன்!'' துகாராம் மிகச் சாதாரணமாகச் சொன்னார்.

''பாண்டுரங்கா... என்ன விளையாட்டெல்லாம் விளையாடுகிறாய். நான் உன் லீலையைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.'' என்று பரவசமாய் மேலும் மேலும் பல பாடல்களை எழுதினார்.

துகாராம் வாழ்க்கையை ஊன்றி கவனித்தால், கடவுளுடைய கருணை எத்தனை பெரியது என்று தெரியும். இதை அவர் தனிமையில் இருக்க தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு அவரை இழுத்துக் கொண்டது.

கடவுள் பக்கம் போன துகாராம் வாழ்க்கையைப் பற்றிய எந்தவிதக் கவலையும் எதிர்பார்ப்பும் இல்லாமல் மௌனமாக இருந்தார். எதிர்பார்ப்பும் கவலையும் இல்லாததனாலேயே வாழ்க்கையில் பல சங்கடங்கள் அவரை விட்டு விலகிப் போயின.

ஊர் முழுவதும் அவரைக் கொண்டாட, ஊரிலுள்ள அத்தனை பேருக்கும் அவர் பாடல்களால் குளிப்பாட்டி குளிர்விக்க, அவர் வீட்டினுடைய வறுமை அழகாகத் தீர்ந்தது. எந்த சிரமமும் இல்லாமல் உ.ண்பதற்கு உணவும், நல்ல உடைகளும் கிடைத்தன. மிகப் பெரும் பணம்

கிடைக்கவில்லையாயினும் உயிர் வாழத் தேவையான, மரியாதையான வாழ்க்கைக்கு உண்டான சகல சௌகரியங்களையும் ஜீஜாபாயும் துகாராமும் மக்களால் அனுபவித்தார்கள்.

அவர்களது தினசரி லோக க்ஷேமத்தை கவனித்துக் கொண்ட பாண்டுரங்கன் அவருடைய புகழை மேலும் பரப்ப ராமேஸ்வர சாஸ்திரிகள் என்ற கர்வியின் மூலம் பேச வைத்து, அவர் கவிதைகளை நீரில் எறிய வைத்து, அதற்குப் பிறகு தோன்றச் செய்து, அந்தப் பாடல்கள் சாதாரணமானவை அல்ல என்று இந்த உலகிற்கு நிரூபித்தார்.

தன்னுடைய பக்தனை உயர்த்தியது மட்டுமல்ல, பக்தனுக்கு யாரேனும் துன்பம் விளைவித்தால் யாரேனும் எச்சரித்து கடினமாகப் பேசினால், யாரேனும் கை உயர்த்தி அதட்டினால், யாரேனும் புறம் பேசினால் அவர்களை வேறு விதமாய் கடுமையாக தண்டித்து, பக்தர்கள் காலில் மறுபடியும் விழும்படி இறைவன் செய்கிறான்.

அப்படிப்பட்ட பக்தன் தனக்கும் தனக்கு தீங்கு செய்தவருக்கும் உண்டான வேற்றுமையை சிறிதளவும் உணராது, தானே வேதனைப்படுவது போல் உணர்ந்து, அந்த வேதனை நீக்க மறுபடியும் இறைவனிடம் போக, அந்த வேதனை எளிதாகத் தீருகிறது.

துகாராம் நான் உனக்கு உதவிசெய்கிறேன். உன் மேன்மையைப் புரிந்து கொண்டேன். உன்னைப்போல உண்டா என்று கொண்டாடுகிறவர்களெல்லாம் வெறுமே வருவதில்லை. ஏதேனும் லாபம் கருதி, ஏதேனும் பலன் கருதித்தான் வருகிறார்கள். ஆனால் பலன் கொடுப்பதும், பெறுவதும் நானல்ல. எல்லாம் அவனே என்று இறைவனிடம் அந்தப் பொறுப்பை நீ விட்டு விடுகிறாய்.

துகாராம்! அட உன்னால் ஒரு பலனும் இல்லை. நீ வெறும் குப்பை. ஏமாளி, போக்கிரி, உனக்கு ஒரு சக்தியும்



இல்லை என்று அந்த அடியாரை விவரம் தெரியாதவர்கள் கோபித்துக் கொள்கிறபோது மறுபடியும் ஒரு அற்புத நிகழ்ச்சி ஏற்படுகிறது. அவனே மன்னிப்பு கேட்கும்படி நேரிடுகிறது. இதனால் மக்களின் மனதில் உள்ள பல சந்தேகங்கள் நீங்கி அவர் சாதாரணர் இல்லை. மஹான் என்பது புரிந்து விடுகிறது.

ஆனால், இந்தப் பூமியில் ஒருவரை பொதுமக்கள் புரிந்துகொண்டுவிட்டால், பொதுமக்கள் போற்றத் தலைப்பட்டுவிட்டால், பொதுமக்கள் கொண்டாட ஆரம்பித்து விட்டால், அரசாங்கம் சும்மாயிருக்காது. அதுவும் நெருங்கி வரும்.

அந்தப் பகுதியின் ஆளுமையை தன் கையி எடுத்துக் கொண்ட சத்ரபதி சிவாஜி, துகாராமை சந்திக்க விரும்பினார். சந்திப்பதற்கு முன்பு துகாராம் பாடல்களைப் பல பேர் பாடுவதை கேட்க விரும்பினார். செவிமடுத்துக் கேட்டார்.

‘நீங்கள் பாடுவதை கேட்பதைவிட, துகாராம் பாடுவதை கேட்க வேண்டும்’ என்று தீர்மானித்தார்.

பெரும் படையோடு போய் இறை அடியாரைதரிசித்து அங்கு கலவரம் ஏற்படுவதைவிட, அமைதியாய் அவரை தரிசிக்க விரும்பினார். தன் உருவத்தை மாற்றிக் கொண்டு, மாறு வேடம் அணிந்து, துகாராம் பாடும்போது மூன்றாம் வரிசையில் அமர்ந்து அவரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார், மாறுவேடத்தில் சிவாஜி வந்திருக்கிறார் என்பது மொகலாய போர்வீரர்களுக்கு தெரிந்துவிட்டது. அந்த இடம் விரைந்து வரத் துவங்கியது.

வெகுதூரத்தில் அந்தப் படை நகர்ந்ததுமே துகாராமிற்கு உள்ளுக்குள்ளே மனம் துணுக்குற்றது.

சத்ரபதி சிவாஜி இந்து மதத்தை காப்பாற்ற வந்த அற்புதமான ஒரு பிறவி. மிகப் பெரிய போர் வாள். இங்கு

தன்னைப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தேடிக்கொண்டு எமகிங்கரர்களைப்போல இஸ்லாமியப் படைவீரர்கள் வருகிறார்கள் என்பதை புரிந்து கொண்டார்.

'நாம சங்கீர்த்தனம் என்ற பெயரில் ரகசியப் படையெடுப்புப் பற்றி சதி நடக்கிறது. சிவாஜி தலைமையில் நடக்கிறது. துகாராம் அதற்கு துணைபோகிறார். எனவே நாம சங்கீர்த்தனத்தில் கலந்துகொண்ட அத்தனை பேரையும் வெட்டிக் கொல்லுங்கள்' என்று அந்த வீரர்களுக்கு ஔரங்கசீப் கட்டளையிட்டிருந்தான்.

நாம சங்கீர்த்தனத்தில் முழுவதுமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த துகாராம் சட்டென்று நிறுத்தினார். கூட்டத்தினரைப் பார்த்து, ''இந்த இடத்தை விட்டு யாரும் மறந்து போயும் வெளியே போகாதீர்கள். இந்த இடத்திலேயே நாசமாகப் போனாலும் பரவாயில்லை. இந்த இடத்தை விட்டு வெளியேறுவது பற்றி எண்ணமே இல்லாமல் இருங்கள்! நான் சொல்லும் வரை இந்த இடத்தை விட்டு ஒருவரும் இங்கு நகரக் கூடாது. ஏனெனில், பாண்டுரங்கன் இங்கு ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருக்கிறான். அவன் சந்நிதி விட்டு ஒரு பொழுதும் அகலாதீர்கள்'' என்று கட்டளையிட்டார்.

திரும்பி பாண்டுரங்கனைப் பார்த்தார்.

'பாண்டுரங்கா... ஏன் மௌனமாக இருக்கிறாய். பண்டரிபுரத்திவேயே நின்றுவிட்டாயா. அங்கேயே படுத்துத் தூங்கிவிட்டாயா. என்னை ஆதரிக்க வேண்டும். என்னை நம்பி வந்தவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உனக்கு இல்லையா' என்று நெஞ்சுருகிக் கேட்க, அங்கு ஒரு அற்புதமான விஷயம் நடந்தது.

மொகலாய வீரர்கள் வந்து கொண்டிருக்கும் பாதையில் இன்னொரு சேனை எதிர்ப்பட்டது. நடுவே சத்ரபதி சிவாஜி குதிரையிலிருந்தார். மொகலாயப் படை



வீரர்களைப் பார்த்ததும் சிவாஜி படைகள் நாலாபுறமும் சிதறி ஓடின. மீண்டும் சிவாஜியைத் தொடர்ந்து ஔரங்கசீப்பின் இஸ்லாமியப் படைவீரர்கள். வீரசிவாஜி வெகு தூரம் ஓடினார். திடீரென்று காணாமல் போனார். குதிரை மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. குதிரையைப் போய் மடக்கி நிறுத்த, குதிரையும் காணாமல் போயிற்று. வெகுதூரம் ஓடி களைத்த இஸ்லாமிய வீரர்கள் என்னவென்று தெரியாமல் நின்றார்கள்.

பாண்டுரங்கனே வீரசிவாஜி வேஷத்தில் வந்து அவர்களை திசைமாற்றி அனுப்பியது அவர்களுக்கு தெரியாது போயிற்று. பின்னால் ஓடி. தேடிய களைப்பால் அங்கேயே மூர்ச்சையாகி விழுந்து, மெல்ல எழுந்து, வீர சிவாஜியை காணோம் என்று மறுபடியும் திரும்பினார்கள். இங்கே நாம சங்கீர்த்தனம் தொடர்ந்தது.

வீரசிவாஜி சகலமும் கேள்விப்பட்டு துகாராம் காலில் விழுந்தார். தன் அரண்மனைக்கு வர வேண்டும், தன் உபசரிப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

''உன் அரண்மனையில் இந்தப் பாடகனுக்கு எந்த வேலையும் இல்லை. அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியம் ஒரு அடியாருக்கு இல்லை. எனவே உன் வேலையை நீ செய்து கொண்டிரு. என் வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன். நீ கொடுக்கும் எந்தக் கையுறைகளும் எனக்கு அவசியமில்லை. பாண்டுரங்கன் எனக்கு வேண்டும் என்பதை கொடுத்துக் கொண்டிருக்கிறான். இது போதும். இதைக் தாண்டி தேவையற்ற எந்த விஷயத்தையும். என் மனம் நாடவில்லை. என் பாட்டை வந்து கேட்டது சந்தோஷம். இந்த தேசத்திற்காக நீ பாடுபடுவதை நான் அறிவேன். உனக்கு என் ஆசீர்வாதங்கள். என் பாண்டுரங்கன் உன்னை காப்பார். அன்னை பவானி உனக்குத் துணை

யிருப்பாள். கவலையே படவேண்டாம்'' என்று ஆறுதல் சொல்லி சத்ரபதி சிவாஜியை அனுப்பி வைத்தார்.

சத்ரபதி சிவாஜி பலமுறை துகாராமை வணங்கி, அவர் பாடல்களை உரத்த குரலில் பாடியவாறு தன் ஊர் திரும்பினார்.

''துகாராம்ஜி. உங்களிடம் ஒரு அந்தரங்கமான விஷயம் பேச வேண்டும்.'' படித்த பண்பான ஒரு அந்தணர் துகாராமிற்கு அருகே வந்தார். தனியே பேசவேண்டும் என்று வற்புறுத்தினார்,

இருவரும் தனியே உட்கார்ந்தார்கள்.

''பக்தி மட்டும் போதுமா? பக்தி ஒரு ஆரம்ப நிலை தான். உண்மையில் பிரபஞ்சம் என்பது என்ன. ஆத்மா என்பது எங்கிருக்கிறது. எவ்விதம் உள்ளது என்று தெரிந்து கொள்ளவேண்டாமா. இறைவனோடு இரண்டறக் கலக்கிற நிலைதானே உன்னதம். அதை நோக்கித்தானே நகர வேண்டும் என்னிடம் ஒரு புத்தகம் இருக்கிறது. ஞானி முகுந்தராஜ் எழுதிய விவேக சிந்து என்கிற அந்த புத்தகத்தை நீங்களும், நானும் சேர்த்து படிப்போம் அதில் மிகத் தெளிவான பல விஷயங்கள் போடப்பட்டிருக்கின்றன, உங்களுக்குண்டான அனுபவங்கள் அதில் இருப்பதை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் சொல்லுகின்ற அனுபவங்களை நான் உணருகிறேன். நானும் அவ்விதம் அடைந் திருக்கிறேன். ஆனால், இது போதாது. நாம் வெகு நிச்சயமாய் ஒரு உன்னத நிலையை அடைய வேண்டும். எங்கும் பரவியிருக்கிற பிரம்மத்தோடு நம்முடைய ஆத்மாவை சலக்கவிட வேண்டும். உருவ வழிபாடும் கீர்த்தனைகளும், தாளம் போட்டுப் பாடுவதும், தம்பூர் மீட்டி ஆடுவதும் முக்கியமான விஷயமே அல்ல. இவைலயெல்லாம் ஆரம்ப நிலையில் செய்யப்பட வேண்டியவை. மெல்ல... மெல்ல... இவைகளிலிருந்து அகன்று, தனக்குள் ஆழ்ந்து



போகத் தெரியவேண்டும். நான் அந்த நூலை படிக்கட்டுமா?'' என்று அந்த அந்தணர் உத்தரவு கேட்டார்.

சரியென்று துகாராம் தலையசைத்தார்.

கடினமான கனமான அந்த நூலை அந்தணர் வாசிக்கத் துவங்க, துகாராம் அந்தணரையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் சொல்லுகின்ற விஷயத்தை மனம் வாங்காமல் அந்தணர் மீதே அவர் எண்ணம் லயித்திருந்தது.

அந்தணர் படித்துக் கொண்டிருக்க, துகாராம் 'பாண்டுரங்கா பாண்டுரங்கா' என்று நாம ஜபத்தில் மூழ்கினார். இடையறாது உள்ளுக்குள் நாம ஜபமே ஒலித்துக் கொண்டிருந்தது.

அட... இவ்வளவுதான் விஷயமா. அந்தணர் குதூகலத்துடன் படித்ததைப் பற்றி சிலாகித்துப் பேச, துகாராம் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

துகாராம் கவனிக்கவேயில்லை என்பது அந்தணருக்குப் புரிந்தது.

'எவ்வளவு முக்கியமான புத்தகத்தை எவ்வளவு முக்கியமான விஷயத்தை நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அதில் கவனம் செலுத்தாது வேறு எதையோ, யோசித்து கொண்டிருக்கிறீர்களே. இது நியாயம்தானா. இவ்வளவு பெரியவர் இந்த விஷயத்தை அலட்சியம் செய்யலாமா. கடைத்தேறுவதற்குண்டான ஒரு அத்வைத நிலையைப் பற்றி நான் பேசிக் கொண்டிருப்பதை இப்படி அலட்சியப் படுத்துகிறீர்களே'' என்று கோபப்பட்டார்.

''எனக்கு இந்த அத்வைத நிலை தேவையில்லை. பூரணத்தோடு ஐக்கியமாகின்ற இந்த விஷயம் எனக்குத் தேவையில்லை. பாண்டுரங்கன் எனக்கு எஜமானன். நான் அவனுக்கு அடிமை. அவனைப் பற்றி பாடிக் கொண் டிருக்கின்ற இந்த பக்தி நிலை போதும். அவனைப் பற்றி

விதம் விதமாக நினைத்துக் கொண்டு சந்தோஷப் படுகிற இந்தக் கற்பனை போதும். எந்த நேரமும் அவன் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிற ஒரு உன்மத்தமான சுகம் போதும். இந்த பஜனையை விட்டு விட்டுத்தான் ஞானம் வர வேண்டுமென்றால் எனக்கு அந்த ஞானம் தேவையே இல்லை. என்னுடைய விஷயம் பாண்டுரங்கன் பெயரைச் சொல்லுவதோடேயே. அவன் மகிமை குறித்து பாடி ஆடுவதோடேயே முடிந்து விட்டது. இது சகலமும் தரவல்லது.

பக்தி முதல் படி என்றும், அத்வைதம் முப்பதாவது படி என்றும் எவரேனும் சொல்லிக் கொண்டு போகட்டும். அதேபோல் துறவும் எனக்கு இஷ்டமில்லை. உலகத்திலுள்ள நன்மை, தீமை சகலத்திலும் விழுந்து புரண்டு எல்லா இடத்திலும் பாண்டுரங்கன் பெயரைச் சொல்லி, அவனை உரக்கக் கூவி அழைத்து, ஒவ்வொரு அடியும் அவனோடு துணை போகின்ற சுகத்தை விட உத்தமமான விஷயம் வேறு எதுவுமில்லை.

நன்கு படிக்க வேண்டும். பொருள் ஈட்ட வேண்டும். திருமணம் செய்து கொள்ள வேண்டும். குழந்தைகள் பெற்றெடுக்க வேண்டும். வயதாகி மூப்படைந்து பேரன் பேத்திகளுடைய கம்பீரங்களைப் பார்த்து வியந்து ரசிக்க வேண்டும். எல்லா நேரமும் பாண்டுரங்கன் பெயரைச் சொல்ல வேண்டும். பாண்டுரங்கன் தாளை இறுக்கிப் பிடித்துக் கொள்கிற ஒரு புத்தி மனிதருக்கு வந்தால் போதும் வேறு எதுவும் தேவையில்லை. உலகத்தைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமேயில்லை. பாண்டுரங்கன் அருகில் இருந்தால் வாழ்க்கை மிக இனியது. மிக சுகமானது. நமக்கு வரும் சோதனைகள்கூட பாண்டுரங்கன் கொடுத்த வரம் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். நம்மை பலப்படுத்த பாண்டுரங்கன் சோதனை செய்கிறான் என்று தெள்ளத்



தெளிவாகப் புரிந்து கொண்டு, அந்த சோதனைகளையும் சந்தோஷத்தோடு அனுபவிக்கலாம். வெறும் வறட்சியான ஞானத்தால் எந்தப் பயனும் இல்லை.

பாண்டுரங்கனே சகலத்திற்கும் கதி. சகலருக்கும் கதி என்று பாட்டுப் பாடினார்.

சுற்றியிருந்தோர்கள் அவரை கொண்டாடினார்கள். எவ்வித பசப்பும் இல்லாமல் எளிமையாக, இனிமையாக இருக்கின்ற துகாராமைச் சுற்றி கூட்டம் பெருகியது.

ஒரு நல்ல மனிதருடைய குழந்தைக்கு உடம்பு சரியில்லை. ஆனாலும் அவருக்கு பாண்டுரங்க பஜனையை விட மனமில்லை. நாளைக்கு அழைத்துப் போகிறேன் மருத்துவரிடம் என்று சொல்லிவிட்டு, பாண்டுரங்க பஜனைக்கு வந்து வீட்டிற்குப் போக அவருக்கு சில நாட்கள் ஆகிவிட்டன. குழந்தை மருத்துவ உதவி இல்லாமல் இறந்து போனான்.

அந்த மனிதரின் மனைவி சீற்றமானாள்.

தவறு புருஷன் மீது இல்லை. இந்த துகாராமிடம் இருக்கிறது. ஊர் முழுவதையும் ஒரு வேலையும் செய்ய விடாமல் பாண்டுரங்க பஜனைக்கு இழுத்துக் கொண்டு போய் விடுகிறது. பைத்தியம் பிடித்தது போல, இந்த ஆண்கள் தம்பூர் மீட்டி நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். என் குழந்தை இறந்ததற்கு என் புருஷன் காரணமில்லை, என்று உரத்த குரலில் குற்றம் சுமத்தினாள். துகாராம் வீட்டு வாசலில் நின்று மண் வாரித் தூற்றினாள்.

துகாராம் கீழிறங்கினார். தன் குழந்தையை அவர் இழந்த நேரம் அவருக்கு ஞாபகம் வந்தது. ஒரு தாயின் புலம்பல் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

''பண்டரிநாதா.... அவள் என்னைக் குற்றம் சொல்ல வில்லை. உன்னைக் குற்றம் சொல்கிறாள். ஐயனே, தயவு செய்து அந்தக் குழந்தைக்கு உயிரைக் கொடு. அவனை

மீண்டும் எழச் செய். பலவானாக்கு, இங்குள்ள அத்தனை பேர்சார்பாகவும், உன்னை கெஞ்சிக் கேட்கிறேன். இவர்கள் எல்லோரும் ஒருமித்த குரலோடு பாடி உன்னைக் கேட்கிறார்கள். தயவுசெய்து இந்த குழந்தைக்கு உயிரைக் கொடு'' என்று உடனே ஒரு பாடல் பாடினார்.

சுற்றியுள்ளவர்களும் அந்தப் பாடலில் கலந்து கொண்டார்கள்.

அந்தக் குழந்தை உயிர் பெற்றான். எழுந்து நின்றான். ஓடிப் போய் துகாராமின் காலில் பணிந்து நின்றான்.

அந்தப் பெண் வெலவெலத்துப் போனாள். அவளும் காலில் விழுந்து மன்னிக்குமாறு மன்றாடினாள்.

துகாராம் மிகப் பெரிய ஞானி என்பதற்கு அவர் மரணமும் ஒரு சாட்சி.

எல்லோரும் சாக பயந்துதான் சாகிறார்கள். தன்னை அறிந்தவன் மரணத்தைக் கண்டு அஞ்சுவதேயில்லை, அவனால் மரணத்தை தள்ளி வைக்கவும் கூடும்.

உடலும், உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கின்ற நிலையிலேயே துகாராம் தன் பணியை முடித்துக் கொள்கின்ற ஒரு மனோநிலைக்கு தள்ளப்பட்டார்

போதும் இந்த வாழ்க்கை என்று தெளிவாக எண்ணினார்.

மனைவியை அருகே அழைத்து அவள் கைகளை கோத்துக் கொண்டார்

''என் பொருட்டு எத்தனை சிரமங்களை பட்டிருக்கிறாய். எனக்காக எத்தனை வேதனைகளை ஏற்றிருக்கிறாய். நீ இல்லையென்றால் நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியுமா, என் வேதனைகளில் எல்லாம் கூட இருந்து, உன் தோளில் சுமந்து, என் வழிக்கு என்னை எந்த சிரமமும் இல்லாமல் போக விட்டாயே. உனக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். நீ இன்னும் சிறிது காலம் இந்த உலகத்தில் உயிரோடு இருந்து, வாழ்க்கையைப் பற்றி



விசாரம் செய்து, நன்கு வாழ்க்கையை அனுபவித்து, அலுத்துப் போய் இறைவனிடம் வந்து சேர். நான் மெல்ல இந்த உலகை விட்டு நீங்குகிறேன். நீ வாழ்வாங்கு வாழ வேண்டும்'' என்று ஆசீர்வதித்தார்.

அவள் சிறப்பைப் பற்றியும் பாடல்கள் எழுதினார்.

இந்தியாவில் தன் மனைவியைப் புகழ்ந்து பாடல் எழுதிய ஒரேயொரு ஞானி துகாராமாகத்தான் இருக்க முடியும். எல்லா மனிதர்களிடமும் அன்பு கொண்டு, அந்த அன்பை வெளிக்கொணர்ந்து பெரிதாக்கி, அவர்களை அவர்களுடைய அன்பாலேயே நனைய வைத்த அற்புதமான மனிதர் துகாராம்.

இல்லற வாழ்க்கையில் முழுவதுமாக ஈடுபடுங்கள். அதில் தவறேயில்லை ஆனால், உலக வாழ்க்கை ஒற்றுமே யில்லை. இதில் நாம் அடையக்கூடிய சந்தோஷம் எதுவும் நிரந்தரமானதல்ல. இடையறாது... இடையறாது இறைவன் நாமத்தை சொல்லுங்கள். நாம சங்கீர்த்தனம் மட்டுமே உங்களை நல்ல வழிக்கு கொண்டு போகும். நாம சங்கீர்த்தனம் மட்டுமே இல்வாழ்க்கையை நன்றாக அனுபவிக்கச் செய்யும். நாமசங்கீர்த்தனம் மட்டுமே உங்களை தெளிவுள்ளவராக நல்ல குணமுள்ளவராக பிறர் துன்பத்தை புரிந்துகொள்ளக்கூடிய பக்குவமுள்ளவராக மாற்றும். இடையறாது... இடையறாது இறைவன் நாமத்தை சொல்லுகின்ற தன்மை ஒருவருக்கு வந்துவிட்டால் போதும், மிக மிக பெரிய சந்தோஷம் உங்களோடு ஒட்டிக் கொள்ளும். எந்தச் சோதனை வந்தாலும் அது அவருடைய லீலை என்று புரிந்துகொண்டு இடையறாது ஒரு புன்சிரிப்பும், குதூகலமும் உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருக்கும். அதே போல் மரணம் கண்டும் பயப்படாமல் நிதானமாக எந்தக் கலவரமுமின்றி உடலை உகுத்துவிட்டு பாண்டுரங்கன் பாதத்தை அடையமுடியும்.

நாம சங்கீர்த்தனம் என்கிற இறைவன் நாமத்தை திரும்பத் திரும்ப சொல்லுதல்தான் இந்த உலகத்தினுடைய ஒரே வழி. வேறு எந்த வழியும் இந்த கலியுகத்தில் இல்லை என்று துகாராம் ஆணித்தரமாகச் சொன்னார். அவ்வித மாகவே பல நாட்கள் நாம ஜபம் செய்தபடியே, அப்படியே அமர்ந்தபடியே தன் உடலை உகுத்தார். பாண்டுரங்கனோடு இரண்டறக் கலந்தார்.

உற்று துகாராமினுடைய வாழ்க்கையைக் கவனித்தால் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை எளிமையாய், மிகச் சாதாரணமான மனிதராய் எல்லோருக்கும் இனியனாய், எல்லோரையும் புரிந்து கொள்கின்ற பக்குவம் உடையவராய் துகாராம் இருந்திருக்கிறார் என்பது தெரிய வரும்.

கடவுளின் மீது உள்ள அசையாத நம்பிக்கை நாம சங்கீர்த் தனத்தின் மீதுள்ள ஆழ்ந்த பற்று, அவரை கனிவுள்ளவராய், உலகத்தின் மீது காதல் உள்ளவராய் மாற்றியது.

கடவுளைக் காதலிப்பதும், உலகத்தைக் காதலிப் பதும் ஒன்றே என்பது துகாராமின் வாக்கு.

ஞானியர் மனம் ஒரு சக்ரவாஹப் பறவை. இடையறாது பறந்து கொண்டிருக்கும் பறவை. இறைவனின் கருணை என்கிற மழை மேகத்திலிருந்து வரும் நீரை, பறக்கும் பொழுதே உண்டு உறிஞ்சி பலம் பெற்று தொடர்ந்து பறக்கின்ற பறவை

உலகத்தில் பல பறவைகள் இருக்கின்றன. எச்சில் தின்னும் காக்கைகள். இறைச்சியை கொத்தும் கழுகுகள், இறைந்து கிடக்கும் தானியத்தைத் தின்னும் குருவிகள் என்று பலவகைப் பறவைகள் உண்டு.

சக்ரவாஹம் ஒரு அபூர்வ வகைப் பறவை. ஞானியர் மனம் சக்ரவாஹம்.

**சுபம்**